விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-3397)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 11 ஞாயிற்றுக்கிழமை (24.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 127

# போர்க் குற்றச்சாட்டுகளுக்கு சுயாதீன விசாரணை மூலம் தீர்வு!

## சர்வதேச பார்வை சவாலாகவுள்ளது - ராஜித



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளின் போது சுயாதீன விசாரணை ஆணைக்குழுவின் மூலமாக தீர்வு காணப்படும் நடவடிக்கைகளை நாம் புறக்கணிக்கவில்லை என தெரிவித்துள்ள சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, இலங்கை அரசு மீதான சர்வதேசத்தின் பார்வை இன்னும் மாறவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (15-ம் பக்.)

## குளிக்க சென்ற நபர் நீரில் மூழ்கி மரணம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கைவேலி மருதமடு குளத்தில் குளிக்கச் சென்ற நபர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று பிற்பகல் ஒரு மணிய

16 ஆம் பக்கம் பார்க்க....

## அடையாள அட்டையுடன் கைக்குண்டு மீட்பு!



(பனிக்கன்குளம்)

வவுனியா குட்செட் வீதியில் நேற்றுக் காலை கைக்குண்டு மற்றும் அத்துடன் காணப்பட்ட

15 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டம் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட முன்மொழிவின் இறுதி வடிவம் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்டு கடந்து 30.01.2016 அன்று வெளியிடப்பட்ட தீர்வுத்திட்ட வரைபு தொடர்பில் மக்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டு, திருத்தி அமைக்கப்பட்ட தீர்வுத்திட்ட முன்மொழிவின் இறுதிவடிவமே தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள இத் தீர்வுத்திட்டத்தின் தமிழ், சிங்கள மொழி பெயர்ப்பு விரைவில் வெளியாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## "இணைந்த வடக்கு - கிழக்கு" தேசிய காங்கிரஸ் எதிர்ப்பு




(கொழும்பு)

வடமாகாண சபையால் நிறைவேற்றப்பட்ட வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பிலான தீர்மானத்துக்கு தேசிய காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு இணைப்பு குறி

15 ஆம் பக்கம் பார்க்க....

## நிலாவரைக் கிணற்றினுள் வீழ்ந்து முதியவர் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர், வரலாற்று பிரசித்தி வாய்ந்த நிலாவரை கிணற்றினுள் வீழ்ந்து முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை பிற்பகல 12:30 மணியளவில் இடம பெற்றுள்ளது.

கற்கோவளம் பருத்தித்துறை பகுதியினை சேர்ந்தவரும், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் மகா சபையின் தலைவருமான சரவணமுத்து தேவதாசன் (வயது 75) என்ற முதியவரே இவ்வாறு நிலாவரைக் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

யாரும் இல்லாத நேரம் பார்த்து குறித்த முதியவர் கிணற்றில் பாய்ந்த வேளை அவ்விடத்தில் நின்ற

15 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்.தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை



(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு


15 ஆம் பக்கம் பார்க்க....

## பூசகர்களான தந்தை, மகன் தீ விபத்தினால் மரணம்

(யாழ்ப்பாணம்)

கோவில் வளவை துப்புரவு செய்யும் போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தினால் படுகா

15 ஆம் பக்.





## யாழ்.சிறைச்சாலையில் திடீர் தேடுதல்
## 18 கைத்தொலைபேசிகளுடன் கஞ்சா, மதுப்போத்தல்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின்போது 18 இற்கு மேற்பட்ட கைத்தொலைபேசிகளும் சிறுதொகை கஞ்சா பொதி மற்றும் மதுசார போத்தல்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன. இச்சம்பவம் நேற்றைய தினம் காலை நடைபெற்றுள்ளது.

யாழ்.சிறைச்சாலையில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக கிடைத்த தகவலை அடுத்து கொழும்பிலிருந்து வந்த சிறைச்சாலைகளில் இடம்பெறும் முறைகே

16 ஆம் பக்கம் பார்க்க....

## ஒரே இரவில் ஆயுதங்களுடன் புகுந்து 4 வீடுகளில் துணிகர கொள்ளை

### கொள்ளையரின் வாள்வீச்சில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஓர் இரவில் வாள்கள், பொல்லுகள் சகிதம் 4 வீடுகளுக்குள் உள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டிலிருந்தவர்களைத் தாக்கி நகை, பணம், பொருட்கள் என்பவற்றை துணிகரமாக கொள்ளையிட்டுள்ளனர்.

இக் கொள்ளை சம்பவமானது நேற்று அதிகாலை 2 மணியளவில சித்தன்கேணி, பண்ணாகம், சங்கானை மற்றும் வடலியடைப்பு ஆகிய பகுதிகளிலே இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் சித்தன்கேணி சிவன் கோவிலுக்கு அண்மையில் உள்ள

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல், திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

**Manufactured by:**
Jeewaka Herbal Products (pvt) Ltd
Yakkala

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகாமையில்)
தொ.பே - 021 - 222 2567

(C-4403)

## பணியாளர் தேவை

அலுவலக உதவியாளர், சிட்டை எழுதுனர் (பெண்கள்/யாழ்நகர் 2Km உட்படல்) லொத்தர் ரிக்கெட் விற்பனையாளர் ஆண்கள் (யாழ் மாவட்டம்)

**தொடர்புகளுக்கு:**
**0779116108**

(4288)

## பணிப்பெண் தேவை

கொழும்பு பம்பலப்பிட்டியில் பணியாற்ற 45-55 வயதிற்குட்பட்டவர் தேவை.

**தொடர்புகளுக்கு:**
**0756994758**

(C-4415)

## ஆட்டோ சேவை

மல்லாகத்தில் இருந்து நகரப்பகுதியில் உள்ள பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச் செல்வதற்கான ஆட்டே சேவை எம்மிடம் உண்டு.

**தொடர்புகளுக்கு:**
**0770196390**

(4285)

A9 வீதி, நுணாவில் சந்தியில் பருத்தித்துறை வீதி மட்டுவில் தெற்கு, துர்க்கையம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 27 பரப்புக் காணி பிரித்து (2,3,7,10) கொடுக்கப்படும். தென்னை, மா வைப்பதற்கும் வீட்டுத்திட்டத்திற்கும் ஏற்றது.

**077 8730129**

(4289)




(4291)

## காணி விற்பனை

யாழ்.ஆஸ்பத்திரி வீதிவேம்படிச் சந்தி, Insurance Corporationக்கும் அடைக்கலமாதா கோவிலுக்கும் இடையில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**0778730129**

(4289)

## பதவி வெற்றிடம்

- **கணனி பக்க வடிமைப்பாளர்கள்**
  (அனுபவமுள்ளவர்களும் பயிலுநர்களும் ஆண்கள், இரவுக் கடமை)
- **அலுவலகச் செய்தியாளர்கள்**
  (பயிலுநர்கள் ஆண்கள், பகல் இரவுக் கடமை)
- **இயந்திர இயக்குநர்கள்**
  (பயிலுநர் ஆண்கள், இரவுக் கடமை)
- **தொடர்பாடல் (பெண்)**
  (சிங்களம் பேசத் தெரிந்தவர், பகல் கடமை)

குறிப்பு:- யாழ்.நகருக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் இன்று (24.04.2016) ஞாயிறு காலை 9.30 மணிக்கு இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

**- பொது முகாமையாளர்**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

“மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்”




இச்சலுகை 30.04.2016 வரை மட்டுமே

- உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா என்பதில் சந்தேகமா?
- மேலதிக கல்சியம், மக்னீசியம், நைட்ரைட் ஒரு பிரச்சினையா?
- மலத்தொற்று கிருமிகள் போன்ற உயிர்க்கொல்லி நோய்க்கிருமிகள் உங்கள் கிணற்று நீரிலும் இருக்கலாம் என அச்சமா?
- போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான செலவு அதிகமா?
- மேற்குறிப்பிடப்பட்டவை போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் நம்பிக்கை உத்தரவாதத்துடனான தீர்வு எம்மிடம் மட்டுமே...
- **UV** உடனான **HI-PURE RO** நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் 100% தூய நீரை உங்கள் வீட்டிலேயே பெற்று பயன் பெறலாம்.
- அனைத்து நீர் சுத்திகரிப்பு தொடர்பான சிறந்த தீர்வுக்கு எங்களை நாடுங்கள்.

(4287)

**EVER PURE HI-TEC (PVT) LTD**
**341,K.K.S ROAD ,JAFFNA.**
**TEL:- 0215677567,0773626230**


## அகவை நிறைவில் அகம் நிறைந்து வாழ்த்துகின்றோம்

### சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் (நெல்லண்டை பத்திரகாளி அம்மன் தேவஸ்தான ஆதின ஹர்த்தா)



மங்களம் சேர் செந்தமிழே ஆய்ந்து கற்றாய்
மாண்புடைய வடமொழியாம் கலைஞானத்தால்
வீங்கு புகழ் வல்லுனனென் உலகமேத்தும்
வித்தகனாம் சோமையா நல்லோய் வாழி
நீங்கரிய நற்குணமே பண்பாய் கொண்டாய்
நாமெல்லாம் செய்ந்நன்றி மறப்போமல்லோம்
பாங்குடைய நெல்லண்டை காளிதாள்
பணிகின்றோம் - உன்நாமம்
வாழி நீ பல்லாண்டு வாழி

இங்ஙனம் அன்புடன்
வாழ்த்தும்
சிவஸ்ரீ இ.சுந்தரலிங்கக் குருக்கள்,
பிரபாளினி
தும்பளை நெல்லண்டைப்
பத்திரகாளி அம்மன்
தேவஸ்தான பிரதம குருக்கள்
குடும்பம்.

தம்பு ராமச்சந்திரன்
வில்லை ஸ்ரீ பிரத்தியங்கிராகாளி
அம்மன் தேவஸ்தானம்

(C-4416)

## அகவை நிறைவில் அகமகிழ்ந்து வாழ்த்தும்

சைவ சித்தாந்த பண்டிதர் சிவாகம உபதேச
வாசஸ்பதி சிவாகம பூஷணம்
சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள் அவர்கள்
நெல்லண்டை அம்மன் வீரமாகாளியம்மன்
வட பத்திரகாளியம்மன் ஆதின ஹர்த்தா



நலமுடன் வளமுடன் பல்லாண்டு காலம்
வாழ்க என வாழ்த்தும்
சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (J.P)
பிரதம குரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம் வல்வெட்டித்துறை,
ஆதீன கர்த்தா புற்றளை
சித்தி விநாயகர் தேவஸ்தானம்

(C-4415)

# சமஷ்டியை கைவிடாவிட்டால்

# இலங்கையில் மீண்டும் இரத்த ஆறு ஓடும்!

## சிங்கள ராவய சீற்றம்



(கொழும்பு)

**வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட சமஷ்டி பிரேரணையை குறித்த சபை உடன் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடும் என ராவணாபலய அமைப்பின் ஏற்பாட்டாளர் இத்தே கந்தே சத்தாதிஸ்ஸ தேரர் எச்சரித்துள்ளார்.**

வடக்கு, கிழக்கை இணைக்க வேண்டும் என்ற பிரேரணை சிக்கலுக்குரியது எனவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளதாக சிங்கள ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு இணைந்த தமிழ் பிராந்தியத்துக்கு சமஷ்டி அரசியலமைப்பு முறையின் கீழ் தனியாட்சிப் பிராந்தியம் தொடர்பான பிரேரணை வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்டது.

இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சகலரும் ஆதரவு தெரிவித்தனர். எதிர்வரும் நாட்களில் இந்தப் பிரேரணை அரசியலமைப்பு சபைக்கு ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## டெங்கு நோயினால் 14 பேர் உயிரிழப்பு

டெங்கு நோய் காரணமாக இந்த வருடத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டில் 14,729 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவர் பிரசீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

மழையுடன் கூடிய இடை நிலை காலநிலை காரணமாகவே இந்த அபாயகர நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியர் கூறியுள்ளார்.

மேலும் டெங்கு நோய் பரப்பு ஆபத்துள்ள இடங்களில் நோயை கட்டுப்படுத்துவது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

## தடை நீக்கம்; ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நன்றி தெரிவித்த வெளிவிவகார அமைச்சர்

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க ஐரோப்பிய ஆணைக்குழு எடுத்த தீர்மானத்திற்கு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நன்றி தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு தடைவிதித்து சிவப்பு அறிக்கையை வெளியிட்டிருந்தது.

இந்த சிவப்பு அறிக்கையை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 28 நாடுகளுக்கு இலங்கையில் இருந்து மீன் உற்பத்திகளை மீண்டும் ஏற்றுமதி செய்ய முடியும்.

இலங்கையின் மீன் உற்பத்திகளில் 68 வீதம் ஐரோப்பிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.


இதன் மூலம் 108 மில்லியன் டொலர்கள் வருமானம் கிடைக்கும் எனவும் ஆயிரக்கணக்கான மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கான வாழ்வாதாரம் கிடைக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஞானசார தேரருக்கு எதிராக நீதிபதி வழக்கு

நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞான்சார தேரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து ஹோமாகம நீதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட கொலை வழக்கு இன்னும் முடிவடையாத நிலையில், பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் தேவையற்ற தலையீட்டினால் நீதிமன்றத்துக்கு அவமானம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா எனக் கண்டறிந்து, நீதிமன்றத்தை அவமானப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் குறித்த தேரருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஹோமாகம நீதிபதி ரங்க திஸாநாயக்க மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கின் சந்தேகநபரான இராணுவ அதிகாரி, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் விசாரணை அதிகாரிகள் உட்பட வழக்குதாரர் சார்பில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், குறித்த ஞானசார தேரர் உயர்ந்த சப்தத்தில் நீதிமன்றத்துக்குள் தெரிவித்த கருத்து



மற்றும் தகவல்கள் என்பன குறித்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்த மனு, மேன் முறையீட்டு தலைமை நீதிபதி விஜித மலல்கொட உட்பட நீதிபதிகள் குழுவினால்கவனத்தில்எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (இ-5)

## விபத்துக்களில் 2 பேர் பலி!

லத்துவ-வெலிமட வீதியில் அம்பகஸ்தோவ சந்தி பகுதியில் பேருந்து மிதி பலகையில் பயணம் செய்த ஒருவர் கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் 82 வயதுடைய வயோதிபர் ஒரு வரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் குறித்த பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை ஊவா பரணகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை.நேற்றுக் காலை தங்காலை-மாத்தறை பிரதான வீதியில், பெலியத்த பகுதியில் பேருந்து மோதியதில் 72 வயதுடைய பெண்ணொருவர் உயிரி ழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் விபத்துக்கு காரணமான பேருந்துச் சாரதி தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (இ-5)

## இலங்கை-சீனா இடையே கடல்சார் ஒத்துழைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கடல்சார் உறவுகளை மேம்படுத்த முடியும் என சீனாவின் இலங்கைக்கான தூதுவர் தெரிவித்துள்ளார்

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடல்சார் விடயங்கள் தொடர்பான மாநாட்டில் சீன தூதுவர் இ.சியாங்லியாங் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இந்த கடல்சார் உறவுகள், மீன்பிடி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் உட்பட்ட விடயங்களில் அமையமுடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் இரண்டு நாடுகளும் கடல்சார்ந்த உற்பத்தித்துறையில் ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக்கொள்ள முடியும்என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## குளவிக் கொட்டு;10 பேர் பாதிப்பு

(கொழும்பு)

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில் பத்து பேர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை தேயிலை தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண தொழிலாளர்களே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். (இ-5)

## மாணவர்கள் 100 பேரின் பெறுபேறுகளில் மாற்றம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதார உயர் தரப் பரீட்சைக்கு தோற்றிய மாண வர்களில் 100 பேரின் பெறுபேறு களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட மாதம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.

சுமார் மூன்று லட்சம் மாண வர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந் தனர்.

இவர்களில் 61 ஆயிரத்து 106 பரீட்சார்த்திகள் பரீட்சை பெறுபேறு களை மீள் மதிப்பீடு செய்யுமாறு கோரி விண்ணப்பம் செய்திருந்த னர்.

இவ்வாறு மீள்மதிப்பீடு செய்ய கோரி விண்ணப்பித்த 100 பரீட் சார்த்திகளின் பெறுபேறுகளில் மட்டும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக பரீட் சைகள் ஆணையாளர் எம்.என். ஜே.புஸ்பகுமார தெரிவித்துள் ளார். (செ-12)

## மரண தண்டனை கைதிகளால் சிறைச்சாலைகளில் இடப்பற்றாக்குறை

(கொழும்பு)

மரண தண்டனைக் கைதி களின் எண்ணிக்கை அதிகரித்த தன் காரணமாக சிறைச்சாலை களில் இடப்பற்றாக்குறை ஏற்பட் டுளளதாக சிறைச்சாலைத் திணைக களம் அறிவித்துள்ளது.

ஆயிரத்து 135 பேர் தற்போதைக்கு மரண தண்டனைக் கைதிகளாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதோடு, இவர்களில் 31 பேர் பெண்கள் என குறிப்பிட்டுள் ளது.

சிறைச்சாலை விதிமுறைகளின பிரகாரம் இவர்கள் பாதுகாப்பான கூடங்களில் தடுத்து வைக்கப்பட் டுள்ளதுடன், உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதற்காக மட்டும் ஒரு நாளைகது அரை மணிநேரம் வெளியே திறந்து விடப்படுகின்றார்கள்.

மற்றைய நேரங்களில் இருட் டுக் கூண்டுக்குள் அடைப்பட்டு காலம கழிக்க வேண்டியுள்ளது.

பொதுவாக ஒரு மரண தண் டனைக் கைதிக்கு ஒரு கூண்டு தனியாக ஒதுக்கப்பட வேண்டும். ஆனால் தற்போதுள்ள இடநெருக் கடி காரணமாக ஒரு கூண்டில் ஐந்து வரையான கைதிகள் அடைக்கப் பட்டுள்ளார்கள்.

இதன் காரணமாக அவர்களின பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற விட யங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மரண தண்டனைக் கைதிகள் தூக்குமேடை உள்ள சிறைச்சாலையில் மட்டுமே தடுத்து வைக்கப்பட வேண்டும். இலங்கை யில் தூக்குமேடை வெலிக்கடச் சிறைச்சாலையில் மட்டுமே உள் ளது.

எனினும் இடவசதியின்மை காரணமாக மரண தண்டனைக் கைதிகள் மஹர, போகம்பர, அநு ராதரபும் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக அங்குள்ள சிறைச்சாலைகளிலும் இடநெருக் கடி ஏற்படத் தொடங்கியுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. (செ-12)

# மோ.சைக்கிள்கள் விபத்து

## இராணுவ அதிகாரி உட்பட மூவர் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் குமுளமுனைப்பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்று மாலை வேளையில் குமிழமுனை இராணுவ முகா மிற்கு முன்பாக அப்பகுதி இராணுவ அதிகாரியின் மோட்டார் சைக்கி ளும் மற்றுமொரு மோட்டார் சைக் கிளும் மோதி விபத்துக்குள்ளான தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இராணுவ அதிகாரியும் பொது மகன் ஒருவரும் சிறிய காயங்களு டனும் மற்றுமொரு பொதுமகன் படுகாயத்துடனும் முல்லைத்தீவு மாஞ்சோலை மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

இதில் மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற குமுழமுனையைச் சேர்ந்த 21 வயதுடைய லிங்கநாதன் துசியந்தன் என்பவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை தக வல்கள் தெரிவிக்கின்றன.

இவ் விபத்துச் சம்பவம் தொடர் பாக முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (செ-281)

## இரு இடங்களில் இருவர் மரணம்

(கொழும்பு)

முந்தளம், ரத்மலகஸ்வெவ பிர தேசத்தில் துப்பாக்கியால் சுடப் பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் பலத்த காயங்களுடன் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலி ஸார் தெரிவித்தனர்.

உரிழந்தவர் மஹகும்புக்கடவல, ஜயராஜபுர பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

சடலம் புத்தளம் வைத்தியசாலை யில் பிரேத அறையில் வைக்கப்பட் டுள்ளதுடன், மரண விசாரணைகள நேற்று இடம்பெற்றுள்ளன.

துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபர் இதுவரை அடையாளம் காணப் படவில்லை என்று முநதளம் பொலி ஸார் தெரிவித்தனர்.

இதுதவிர, ஊரகஸ்மங் ஹந்திய, பெலிகஸ்வெல்ல பிரதேசத்தில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார.

உயிரிழந்தவர் அதே பிரதேசத் தைச் சேர்ந்த 36 வயதுடைய நப ரென பொலிஸார் தெரிவித்த னர். (செ-12)

## இளந்தொண்டர் பொதுக்கூட்டம்

(இணுவில்)

இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 7.30 மணிக்கு இளந்தொண டர் சபை மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

எனவே பொதுச்சபை, நிர்வாக சபை உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். (செ-12)

## காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா, நெடுங்கேணிப்பகு தியில் நேற்று அதிகாலை காட்டு யானை தாக்குதலுக்குள்ளான குடும் பஸ்தர் படுகாயம்டைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வவுனியா நெடுங்கேணி பகு தியைச் சேர்ந்த இரத்தினம் இரா சலிங்கம் 58 வயதுடைய, 5 பிள் ளைகளின் தந்தை பெரியகுளம் பகுதியிலிருக்கும் வயலில் வயல் காவலுக்குச் சென்றுள்ளார்.

நேற்று அதிகாலை 2 மணியள வில் வயலில் படுத்திருந்தபோது எதிர்பாராத விதமாக அங்கு வந்த காட்டு யானை குறித்த குடும்பஸ்தர் மீது தாக்குதல் நடத்திச் சென்றுள் ளது. யானையின் தாக்குதலில், இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்ட துடன் நாடிப்பகுதியிலும் காயம் ஏற்பட்டுள்ளது.

படுகாயங்களுக்குள்ளான நப ரின் கூக்குரலையடுத்து பக்கத்து வயலில் காவலில் ஈடுபட்டுக்கொண்டி ருந்தவர் விரைந்துசென்று உத விய நிலையில் உடனடியாக அவர் மீட்கப்பட்டு நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார்.

மருத்துவர்கள் பரிசோதனை மேற்கொண்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (செ-281)


# மரண அறிவித்தல்

சிவஸ்ரீ.நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள்
(யாழ்.வண்.வட கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய பிரதமகுரு)
பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்



சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்



சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள்

கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் காரைநகரை பரம்பரையாகவும் உடைய சிவஸ்ரீ நாகேந் திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள், பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள் இருவரும் (23.04.2016) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அகாலமரணம் எய்தினர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (26.04.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆலய அறங்காவலர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இல.48, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, கந்தர்மடம்.

தகவல்: குடும்பத்தினர்
T.P: 077 639 1055

(4292)


## பலாலி வீதி திருநெல்வேலி சந்தியில் நிலக்கீழ் குடிநீர்குழாய் வெடிப்பு

### வீதியால் பயணிப்பவர்கள் சிரமம்



(கோப்பாய்)

பலாலி வீதி திருநெல்வேலி சந்தியில் நிலத் துக்கு கீழாக செல்லும் குடிநீர் விநியோகக் குழாயில் வெடிப்பு ஏற்பட்டு பெருமளவான நீர் வெளியேறுவதால் வீதியால் பயணிப்ப வர்கள் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். இச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த பெப்ரவரி மாதம் கந்தர்மட சந்திக்கு அண்மையாக நீர்க்குழாயில் வெடிப்பு ஏற் பட்டு பெருமளவான நீர் வெளியேறியிருந்த நிலையில் அவ்விடத்தில் வெளியேறிய நீர் கட்டுப்படுத்தப்பட்டு அதனை சீர்செய்யும் பணி நடைபெற்றது. இருந்த போதிலும் இரு மாதங் களாகியும் தற்போது வரை அப் பணி முழுமை பெறாமல்உள்ளது. இதனால் அவ்விடத்தில் அடிக் கடி வாகன நெரிசல் ஏற்படுவதையும் காணக் கூடி யதாக உள்ளது.

அதேவேளை தபால்பெட்டி சந்திக்கு அண் மையாகவும் ஓரிடத்தில் நீர்க்குழாயில் வெடிப்பு ஏற்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேலாக நீர் வெளியேறிக் கொண்டிருந்த நிலையில் திரு நெல்வேலி சந்தியில் பெரியளவிலான வெடிப்பு நேற்று மாலை 5.30 மணிளவில் ஏற்பட்டு நீர் விரயமாவதை காணக்கூடிய தாக இருந்தது.

போக்குவரத்து முக்கியத்துவம் உள்ள ஏராளமான பயணிகள் பிரயாணம் செய்யும் திருநெல்வேலி சந்திப்பகுதியில் ஏற்பட்ட உடைவு காரணமாக சந்தியில் மிகுந்த வாகன நெரிசல் காணப்பட்டது.

அத்துடன் நீர் வெளியேறுவதால் காப்பெற் வீதி மிகவும் பாதிப்படையக்கூடிய சூழல் காணப் படுகின்றது. குறித்த நீர்குழாய் உடைவை சரி செய்யும் போதும் காப்பெற் வீதி துண்டாடப்பட்டு பள்ளம் தோண்டி அதனை சீர் செய்யும் போதும் காப்பெற் வீதி அதன் உறுதித் தன்மையை இழக்கவும் சந்தர்ப்பம் உள்ளது.

எனவே வீதி பாதுகாப்புத் தொடர்பிலும் குடி நீர் விநியோக குழாய் உடைவு சீர்செய்வது தொடர் பிலும் உரிய தரப்பினர் கூடிய கவன மெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வீதியால் பயணிக் கும் மக்கள் கேட்டுள்ளனர். (செ-87)

# சு.கவின் 3 அமைச்சர்கள் விரைவில் பதவி நீக்கம்?

(கொழும்பு)

**நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த இராஜாங்க அமைச்சர் மற்றும் இரண்டு பிரதியமைச்சர்கள் பதவிகளில் இருந்து நீக்கப்பட உள்ளதாக அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவி வகித்து கொண்டு அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றமை மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்கக் கட்டுப்பாட்டை பாதுகாக்காமை மற்றும் கட்சியின் இரகசியங்களை வேறு தரப்பினருக்கு வழங்குவது ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இவர்கள் மூவரும் அமைச்சர் பதவிகளில் இருந்து நீக்கப்பட உள்ளதாக பேசப்படுகிறது.

இவர்களுக்கு பதிலாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜாங்க அமைச்சராகவும் பிரதியமைச்சர்களாகவும் நியமிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது

இது சம்பந்தமாக சில மேல் மட்ட பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. (இ-5)

# 1 கிலோ ஹெரோயினுடன் 2 மாலைதீவு பிரஜைகள் கைது

பம்பலப்பிட்டியில் ஹெரோயின் ஒரு கிலோ 280 கிராமுடன் இரண்டு மாலைதீவு பிரஜைகள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்போதைப்பொருள் தடுப்பு பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக மேற்கொண்ட சுற்றி வளைப்பு தேடுதலில் குறித்த ஹெரோயின் தொகையினை கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் 30 மற்றும் 28 வயதானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இலங்கை உள்ளிட்ட 175 நாடுகள் பாரிஸ் உடன்பாட்டில் கையெழுத்து

(கொழும்பு)

காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவது தொடர்பிலான புதிய உடன்பாடு ஒன்றில் இலங்கை உள்ளிட்ட 175 நாடுகள் நேற்று முன்தினம் கையெழுத்திட்டன.

நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. தலைமையகத்தில் ஐ.நா. பொதுச்செயலர் பான்கீமூன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

பல்வேறு நாடுகளின் தலைவர்கள், அமைச்சர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டு, தமது நாடுகளின் சார்பில் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

இலங்கை சார்பில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டார்.

இந்த மாநாட்டில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

அமெரிக்காவின் சார்பில், இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, பேரக் குழந்தையை மடியில் அமரவைத்தபடி, இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டார்.

இந்த உடன்படிக்கை அமுலுக்கு வர உலகளவில் புவி வெப்பமடைய 55 சதவீதம் காரணமாக இருக்கும் 55 நாடுகளின் நாடாளுமன்றங்களின் முழு அனுமதி தேவை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


## வேலையாள் தேவை

லைடன் புடைவை விற்பனை நிலையத்திற்கு புடைவை விற்பனையில் அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் இரண்டு பெண் பிள்ளைகள் தேவை. நேரில் சமுகம் தரவும்.

**லைடன் புடைவை நிலையம்**
**410, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C-4411)



## ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (JICA) இலங்கை அலுவலகம்

JICA நிறுவனமானது ஜப்பானின் இருதரப்பு உத்தியோக அபிவிருத்தி உதவி (ODA) நிகழ்ச்சித்திட்டங்களை/ கருத்திட்டங்களை அமுல்படுத்துகின்ற ஒரு முகவர் நிறுவனமாகும். இலங்கையில் JICA அலுவலகம் 1982இல் ஆரம்பமானதிலிருந்து இதன் பிரதான செயல்முறைகளான ஜப்பானிய ODA கடன்கள், தொழில்நுட்ப உதவி மற்றும் மானிய உதவி ஊடாக பல்வேறு துறைகளில் அபிவிருத்தி உதவிக்கான பல நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்களுடன் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது.

இலங்கைக்கான பிரதிநிதியின் மேற்பார்வையின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுவதற்கு ஓர் இணைப்பாளரை தெரிவு செய்வதற்கு JICA இலங்கை அலுவலகம் கருதுகின்றது.

தெரிவு செய்யப்படும் இணைப்பாளர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கீழ்க்காணும் பிரதான செயற்பாடுகளை அமுல்படுத்துவார்கள்.

- தமிழ் மொழியில் வெளிவரும் கட்டுரைகள் பற்றிய முறையான அறிக்கைகள் (தமிழ் செய்திப்பத்திரிகைகள்/ இணையத்தளங்கள்).
- வடக்கு மற்றும் கிழக்கில் JICAவின் செயற்பாடுகள் தொடர்பான ஆவணங்களை தயாரித்தல்.
- JICAவினால் வடக்கு மற்றும் கிழக்கில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்கான ஒழுங்கமைப்பு மற்றும் நிர்வாகப் பணிகள்.
- JICAவின் செயற்பாடுகளுடன் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்.
- JICAவின் அறிவுறுத்தலின்படி அதன் செயற்பாடுகளை பரப்புரை செய்தல்.

எதிர்பார்க்கும் கால எல்லை: 11 மாதங்கள் (மே 2016 - மார்ச் 2017) ஒப்பந்த அடிப்படையில்

தேவைப்படுகின்ற தகைமைகள் மற்றும் அனுபவம்:

- விண்ணப்பதாரர் வடமாகாணத்திலுள்ளவராக இருத்தல் வேண்டும், யாழ் மாவட்டமாக இருத்தல் விரும்பத்தக்கது.
- அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் தொகுத்தல் செயற்பாடுகளிலுள்ள திறன் மற்றும் அனுபவம் அனுகூலமாகக் கருதப்படும்.
- அரச மற்றும் சர்வதேச நிறுவனங்களில் வேலை செய்த அனுபவம்.

மொழித்தேர்ச்சி:

- தமிழை தாய்மொழியாக கொண்டிருத்தல் அல்லது தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில மொழியில் சிறந்த எழுத்து மற்றும் பேச்சுத் தொடர்பாடல் திறன்.
- சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

வேறு விரும்பத்தக்க தகைமைமைகள்:

- சிறந்த தொடர்பாடல் திறன்/ மக்களுடன் பழகும் திறன்.
- குழுவாகவும் வேறு நபர்களுடனும் பணிபுரியும் திறன்
- JICAவின் செயற்பாடுகள் தொடர்பான விடயங்களில் ஆழ்ந்த அறிவு மற்றும் ஆர்வம்.
- ஒரே நேரத்தில் பல்வேறுபட்ட பணிகளைக் கையாளுதல், முன்னுரிமைகளை மற்றும் காலக்கெடுக்களை நிர்வகித்தல்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் இந்தப் பதவி தொடர்பான விபரங்களை கீழ்காணும் முறையினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

- 011-2303692 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு எழுத்து மூலமான தொலைநகலூடாக அல்லது Ichishi.Risa@jica.go.jp என்ற முகவரிக்கு "முன்மொழிவுக்கான கோரிக்கை (வடக்கு கிழக்கு இணைப்பாளர்)" என்ற தலைப்பில் மின்னஞ்சலூடாக.
- கோரிக்கைக்கான முடிவுத்திகதி: ஏப்ரல் 29, 2016 (வெள்ளிக்கிழமை) 14.00 மணி

தெரிவு செய்யப்பட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகள் மட்டுமே தொடர்பு கொள்ளப்படுவர்.

(C-4412)


# இராசி பலன்

24.04.2016

(சித்திரை 11, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
துதியை பிற்பகல் 2.41 மணிவரை
விசாகம் பிற்பகல் 12.14 மணிவரை
சுபநேரம் 9.00-10.30 மணிவரை
இராகுகாலம் 4.30-6.00 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி, புத | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி, பரணி | | |
| | | | குரு ராகு |
| | சனி, சந் செவ் | | |

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்:** கூட்டாளிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், தன்னம்பிக்கையுடன் ஈடுபட்டு காரியம் சாதிப்பீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும்.

**கும்பம்:** உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**கடகம்:** எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கல்வி நலன்கருதிய செலவுகள் ஏற்படலாம், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், போசனசுகமுண்டு, ஆரோக்கியமான நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** தாயின் உடல்நலன் சீராகும், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், வாகன யோகமுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**தனுசு:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் ஏற்படலாம், முயற்சிகளில் தாமதம் உருவாகும், உறவினர்கள் வழியில் சுப செலவுகளைச் சந்திப்பீர்கள்.

**விருச்சிகம்:** பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டவேண்டிய நாள்.

**கன்னி:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

## மோட்டார் சைக்கிள் - மினிபஸ் மோதி விபத்து;பெண் படுகாயம்

மோட்டார் சைக்கிளும் தனியார் மினி பஸ்ஸூம் மோதியதில் குடும்பப்பெண் படுகாயமடைந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று காலை 9 மணியளவில் ஏ-9 வீதியில் நுணாவில் வைரவர் கோயிலடியில் இடம்பெற்றுள்ளது. இதில் மட்டுவிலைச் சேர்ந்த சர்மிளன் நந்தினி (வயது-37) என்ற குடும்பப் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

மேற்படி குடும்பப்பெண் மோட்டார் சைக்கிளில் சாவகச்சேரியிலிருந்து வந்து கொண்டிருந்தபோது யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் மினிபஸ்சுடன் மோதுண்டு மேற்படி விபத்துச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

படுகாயமடைந்த மேற்படி பெண் சாவகச்சேரிவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ-89)

## புகைப்பட போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

கலாசார அலுவல்கள் திணைக்கள புகைப்படப் போட்டிக்கான விண்ணப்பங்கள் பருத்தித்துறைப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால் விநியோகிக்கப்படுகின்றன.

பிரதேச செயலகப் பிரிவிலிருந்து போட்டிக்கு பங்குபற்ற விரும்புகிறவர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று மே 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ-19)

## இனவாதம் பேசி தமிழரின் உரிமையை யாருமே தட்டிக் கழித்து விட முடியாது

### எதிர்க்கட்சி தலைவர்கள் தவராசா தெரிவிப்பு

தமிழ் மக்களுடைய அபிலாசைகளை கோரும் உரிமை வடக்கு மாகாண சபைக்குண்டு. அதனை எவரும் இனவாதம் கதைத்து தட்டி கழித்து விட முடியாது என வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு நேற்றுமுன்தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வு மற்றும் அரசியல் யாப்புக்கான கொள்கை வரைபு மீதான விவா தம் நடைபெற்றது. இதன் போதே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையால் உருவாக்கப்பட தீர்வுத் திட்டத்தில் சில தவறுகள் இருக்கலாம். அவை திருத்தப்பட வேண்டியது.

ஆனால் இவற்றை இனவாதம் பேசி தட்டிக்கழித்துவிட முடியாது. தென்னிலங்கை இனவாத சக்திகள் வடக்கு மாகாண சபையின் தீர்வு திட்டத்தை கடுமையாக விமர்சித்து வருகின்றன. இது தவறானது. தமிழ் மக்களது அபிலா சைகளை கூறும் சுதந்திரம் எமக்கு உண்டு அதனை தான் செய்கின் றோம் என அவர் தெரிவித்தார்.

மேலும் வடக்கு மாகாண சபையின் தீர்வு திட்ட வரைபு தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் கூறியது ஏற்புடையதல்ல. வடக்கு மாகாண சபை தனது தீர்வு திட்டத்தை தயாரிக் கட்டும் அதனைபற்றிபெரிதாக அலட்டிகொள்ளவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது தீர்வு திட்டத்தை தயாரிக்கட்டும் அதன் பிறகு பார்த்து கொள்வோம் என கூறியுள்ளனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்த மக்கள் தான் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களையும் தெரிவு செய்தார்கள். ஆகவே முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வேறு, வடக்கு மாகாண சபை வேறு என்ற விதத்தில் கருத்து வெளியிட்டுள்ளதனை ஏற்க முடியாது என உறுப்பினர் லிங்கநாதன் தெரிவித்தார். (இ-4)

## நிகழ்காலக்கண்ணீர் நூல் அறிமுகவிழா

சாந்தையூர்வினிஸ்எழுதிய "நிகழ் காலக் கண்ணீர்'' என்ற நூல் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சாந்தை விநாயகர் கலையரங்கில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.தர்மபாலன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது ஆசியுரையினை சித்தன்கேணி வீணாகான குருபீட சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் வழங்கவுள்ளார். நூல் வெளியீட்டுரையை சைவப்புலவர் பா.திலகானந்தம் நிகழ்த்தவுள்ளதுடன் ஆய்வுரையினை சமரபாகு சீனா உதய குமார் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

## பொதுக்கூட்டம்

காரைநகர் சைவ மகாசபையின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம்செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு காரைநகர் சைவமகாசபை கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய யாப்பு சீர்திருத்த வரைபு சபைக்கு சமர்பிக்கப்படவுள்ளது. இதில் புதிய அங்கத்தவர்கள் மற்றும் அங்கத்துவத்தை புதுப்பித்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

## நீதிமன்றில் தெரிவித்த விடயம் குறித்து அமைச்சரிடம் விளக்கம்கோர வேண்டும்

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் மல்லாகம் நீதிமன்றில் தெரிவித்த விடயம் தொடர்பில் விளக்கம் கோர வேண்டுமென மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் எஸ்.சுகிர்தன் கோரியுள்ளார். நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண சபையின் அமர்வு கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி விடயம் கோரப்பட்டுள்ளது.

கழிவொயில் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீராக மேற்கொள்ளப்படுவதில்லையென கழிவொயில் காரணமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த இரு பொதுச்சுகாதார வைத்திய பரிசோதகர்களால் மல்லாகம் நீதிமன்றத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் மல்லாகம் நீதிமன்றில் நடைபெற்றுவரும் நிலையில் கடந்த 18 ஆம் திகதி வழக்கு விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது வடக்கு மாகாண சபைக்கு அதிகாரமில்லாத சுன்னாகம் நீர் மாசு விடயத்தில் ஏன் தலையிட்டு நிபுணர்குழு ஒன்றை நியமித்து அறிக்கை வெளியிட்டது? என மல்லாகம் நீதிமன்றம் கடந்த வழக்கு தவணையின்போது கேள்வியெழுப்பியிருந்தமை தொடர்பில்,

வடக்கு மாகாண சபையின் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நீதிமன்றில் தனது சட்டத்தரணி ஊடாக விளக்கமளித்திருந்தார். இதன்போது, குறித்த நிபுணர்குழுவை தனியே அமைச்சர் ஒருவர் அமைக்கவில்லை. வடக்கு மாகாண சபை இணைந்துதான் அமைத்து ஆய்வை மேற்கொண்டு அறிக்கை வெளியிட்டது என கூறியிருந்தார்.

இவ்வாறு அமைச்சர் நீதிமன்றில் கூறியது தொடர்பில் கேள்விக்குட்படுத்திய மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன், அமைச்சர் எவ்வாறு இவ்வாறு கூற முடியும்? வடக்கு மாகாண சபை எப்போது தலையிட்டது? என கேள்வி எழுப்பி இதற்கு உடனடியாக அமைச்சர் ஐங்கரநேசன் பதில் கூற வேண்டும் என கோரினார்.

எனினும் இதற்கிடையில் குறுக்கிட்ட அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம், இன்றைய அமர்வு வடக்கு மாகாண சபையினால் உருவாக்கப்பட்ட அரசியல் வரைபின் மீதான வாதத்திற்கான அமர்வு என கூறி இது தொடர்பில் கடிதம் மூலம் தனக்கு தருமாறும், அதனை அமைச்சரிடம் கடிதம் மூலம் கோருவதாகவும் சிவஞானம் கூறினார்.(இ-4)

## சத்தியசாயி ஆராதனா மஹோற்சவம்



(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சத்திய சாயி ஆராதனா மஹோற்சவம் இன்று யாழ்ப்பாணம், சேர்.பொன்.இராமநாதன் வீதியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறும்.

மேலும் தமிழருவி த.சிவகுமாரன் அறத்தை நிலைநாட்டிய அவதாரங்கள் எனும் சிறப்புரையை வழங்குவார். (இ

## இரண்டாவது சர்வதேச யோகா தினம் யாழ்ப்பாணத்திலும் கொண்டாடப்படும்

இரண்டாவது சர்வதேச யோகா தினம் எதிர்வரும் ஜுன் மாதம் 21 ஆம் திகதி சர்வதேச அளவில் கொண் டாடப்படவுள்ளது. அந்த வகையில் யாழ்ப்பாணத்திலும் இரண்டாவது சர்வதேச யோகா தினம் அன்றைய தினம் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் இந்திய துணைத் தூதரகத்தினால் ஆரம்பக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுக்கான பயிற்சிகளை வடக்கு மாகாணம் முழுவதும் வழங்குவதற்கு யோகா பயிற்றுநர்கள் வரவேற்கப்படுகின்றனர். சேவை மனப்பான்மையுடன் இந்த பயிற்சிக்கு பயிற்றுநர்களாக வரக்கூடிய அனைத்து யோகா மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் உடனடியாக யாழ். இந்தியத்துணைத்தூதரகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். யோகாக்கலையை பயிற்றுவிக்கும் பயிற்சி மையங்க ளும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகள்; இந்தியத்துணைத்தூதரகம், இல. 14, மருதடி வீதி, நல்லூ.ர் தொலைபேசி இலக்கம் 021 222 0504/ 5, 077 757 4628. சென்ற வருடம் கொண்டாடப்பட்ட முதலாவது சர்வதேச யோகா தினத்தில் யாழ்ப்பாணத்தில் ஆறாயிரத்திற்கும் அதிகமானவர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (இ




## பொதுக்கூட்டமும் மருத்துவ சேவைகளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டமும் இலவச ஆயுள்வேத மருத்துவ சேவைகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கோப்பாய் வடக்கு முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறும். (இ

## யாழில் 2.3 மில். ரூபா பெறுமதியான உற்பத்திப்பொருட்கள் சந்தைப்படுத்தல்

### பனை அபிவிருத்தி சபை தகவல்

பனை அபிவிருத்தி சபையால் கடந்த 3 மாதங்களில் யாழ் மாவட்டத்தில் இருந்து 2.3 மில்லியன் ரூபாய் பெறுமதியான பனை உற்பத்தி பொருட்கள் சந்தைப்படுத்தப் பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் ம.கியூபேட் அன்ரனி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனை அபிவிருத்திச் சபை ஊடாக யாழ். மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொண்டு வருகிறோம். அந்த வகையில் யாழ் மாவட்டத்தில் உள்ள பனை அபிவிருத்தி சபையின் 7 விற்பனை நிலையங்களின் ஊடாக பனம் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தி வருகிறோம்.

அதில் பனம் கிழங்கு சார்ந்த உற்பத்தி, பனம் பழம் சார்ந்த உற்பத்தி மற்றும் கைப்பணி உற்பத்திகள் மூலம் வகைப்படுத்தி பனம் உற்பத்திகளை சந்தைப்படுத்துகிறோம். அதில் பனம் கைப்பணி உற்பத்தி மூலம் முன்னைய ஆண்டுகளை விட இந்த ஆண்டு கூடிய வருமானம் கிடைத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



பருத்தித்துறை, வியாபாரி மூலை, கலைமணி சனசமூக நிலையம் மற்றும் விக்கினேஸ்வரா படிப்பகம் ஆகியவற்றின் கல்விக்கௌரவிப்பு விழா அண்மையில் நிலையத்தின் தலைவர் க.கதிரமலை தலைமையில் வியாபாரி மூலை நாச்சிமார் ஆலய முன்றலில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணசபை உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் ச.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மகிந்தவால் ஒருபோதும் மீளவும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது!

## அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு



எவ்வளவு விளையாட்டுப் போட்டாலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வினால் மீளவும் ஆட்சியை கைப்பற்ற முடியாது என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்து கட்சியின் வாக்கு பலத்தை இல்லாமல் செய்து ஆட்சியை கைப்பற்ற மகிந்த எவ்வளவு முயற்சித்தாலும் அது பயனளிக்காது.

மகிந்தவின் நடவடிக்கைகளினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் நிர்க்கதியாகியுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எவ்வித அழுத்தங்களும் கிடையாது.

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் தேர்தல்களில் இலகுவில் வெற்றியீட்டும் என்பதனை நிச்சயமாக கூற முடியும். மகிந்த எப்படி பேசினாலும் அவரைச் சுற்றி ஒரே தரப்பே இருக்கின்றது.

சிறுபான்மைக் கட்சி என்ற வகையில் மே தினக் கூட்டத்தில் மகிந்தவின் கூட்டத்தை விட அதிகளவு கூட்டத்தை கொண்டு வர எம்மால் முடியும்.


நாம் இம்முறை மே தினக் கூட்டத்தை தலவாக்கலையில் நடத்துகின்றோம். இராதகிருஸ்ணன், மனோ கணேசன் உள்ளிட்ட தலைவர்களுடன் இணைந்து இந்த மே தினக் கூட்டத்தை நடத்துகின்றோம்.

பெருமளவு மக்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பார்கள். இந்தக் கூட்டத்திற்கு வருகை தரும் மக்களின் எண்ணிக்கையை மகிந்தவினால் நினைத்துக்கூட பார்க்க முடியாது.

இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு. மகிந்த எந்த வகையிலும் போட்டியில்லை. ஜனாதிபதி தேர்தலில் என்ன நடந்தது என்பது மக்களுக்கு மறந்துவிடவில்லை.

ரணசிங்க பிரேமதாச ஆட்சிக் காலத்தில் மிகவும் பலம் பொருந்திய அமைச்சர்களாக திகழ்ந்த காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத்முதலி போன்றவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்துக் கொண்டு வெளியே சென்றாலும் ஐக்கிய தேசியக் கட்சியை அசைக்க முடியவில்லை.

எனவே மகிந்த எவ்வளவு முயற்சித்தாலும் வெற்றியளிக்காது. இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பல துண்டுகளாக பிளவடையும் என அமைச்சர் திகாம்பரம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




# அரசு மீது எனக்கு பயமில்லை

## ஆனந்த தேரர் அறிவிப்பு

கூட்டு தொழிற்சங்க அமைப்பு தொழிலாளர்களுக்காக பாரிய போராட்டமொன்றை ஆரம்பித்து அவர்களது உரிமைகளை வென்றெடுக்க போராடப்போவதாகவும், எமது அமைப்பின் போராட்டத்துக்குப் பயந்தே அரசாங்கம் நாரஹேன்பிட்டி விளையாட்டு மைதானத்தை எமது மே தினப் போராட்டத்துக்கு தடை செய்ததாகவும் முருத்தெட்டுவாவே ஆனந்த தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த 1987 ஆம் ஆண்டு மே தினத்துக்கு தடை விதிக்கப்பட்டபோது, நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் மே தினம் கொண்டாடப்பட்டது. இம்முறையும் இந்த நடவடிக்கை இடம்பெற்றால் இம்முறை மே தினக் கூட்டம் அபயராம விகாரையிலிருந்து ஆரம்பிக்கும் எனவும் தேரர் தெரிவித்தார்.

பேய்க்குப் பயம் என்றிருந்தால், மயானத்தில் வீடு கட்டப் போவதில்லையெனவும், அரசாங்கம் எமக்கு எதிராக வேண்டிய நடவடிக்கையை முன்னெடுக்கட்டும் எனவும் தேரர் மேலும் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க் கட்சியின் தொழிற்சங்கம் மே தினத்துக்கு நாரஹேன்பிட்டியிலுள்ள மைதானம் ஒன்றை ஏற்கனவே பணம் கொடுத்து ஒதுக்கியிருந்தது. இதனை அரசாங்கம் திடீரென வழங்க மறுத்துள்ளது. இதற்கு எதிராக நேற்று முன்தினம் கொழும்பில் கூடிய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தேரர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# கிழக்கு மாகாண கல்விச் செயலமர்வுகளை கல்வி அதிகாரிகள் மேற்பார்வை செய்வதில்லை

### பின்னடைவுகளுக்கு மாகாண கல்வியமைச்சரே பொறுப்புக்கூற வேண்டும்

கல்வி வளர்ச்சியில் அக்கறையில்லாத சில அரசியல்வாதிகள் சட்டத்துக்கு முரணான இடமாற்றங்கள், நியமிப்புக்கள், கல்வி நிர்வாகங்களில் தலையிட்டமை, சேவைப் பிரமாண நிபந்தனைகளுக்கு முரணாக அதிபர்களை நியமித்தமை போன்றவற்றால் கிழக்கு மாகாணக் கல்விப்புலம் குழப்பப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் பொ.உதயரூபன் கடந்த புதன்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய ரீதியிலான கல்வி மட்ட அடைவில் ஒப்பீட்டளவில் கிழக்கு மாகாணம் 8 ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளமைக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சர் பொறுப்புக்கூற வேண்டும்.

கடந்தகாலங்களில் வினைத்திறனற்ற ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் அரசியல்வாதிகளின் சிபார்சுகளில் நியமிப்புச் செய்யப்பட்டமையும் பல கல்வி வலயங்கள் அரசியல் மயமாக்கப்பட்டமையுமே மாகாணக்கல்வி பின்னோக்கி சென்றுள்ளதற்கான பிரதான காரணங்களாகும். இதனால் சுதந்திரமான வினைத்திறனுள்ள கல்வி பின்னடைவைக் கண்டுள்ளது. மேலும் வலயங்களில் நியமிப்புச் செய்யப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் கல்வித்திட்டம் தொடர்பான மறுசீரமைப்புத் தொடர்பாக தூரநோக்கு அற்றவர்களாக இருப்பதனால் மாகாண தவணைப் பரீட்சைகள் குளறுபடி நிறைந்தனவாக காணப்படுகின்றன. தேசிய மட்டத்தில் நடைபெறும் பரீட்சை வினாத்தாள்களுக்கு முற்றிலும் முரணான வினாத்தாள்கள் வலய மற்றும் மாகாண மட்டங்களிலும் தயாரிக்கப்படுகின்றன.

கிழக்குமாகாணத்தில் பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டு நடைபெறும் கல்விச் செயலமர்வு மற்றும் முன்னோடிக் கருத்தரங்குகள் வினைத்திறனற்றவையாக இடம்பெறுகின்றன. அவை வலயக் கல்விப் பணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் நடைபெறுவதுமில்லை.

தற்போது வெளியிடப்பட்டுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பில் கூறப்பட்டுள்ள சேவைப் பணிக்கு முரணாக இச்செயலமர்வுகள் இடம்பெறுகின்றன.

கல்வி அதிகாரிகள் இதனை மேற்பார்வை செய்வதில்லை.

அத்துடன் பொது மக்களின் பணம் மாகாணக்கல்வி அமைச்சில் வீண்விரயம் செய்யப்படுவதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. மாகாணத்தின் கல்வி பின்னடைவதற்கான முழுப்பொறுப்பையும் மாகாணக் கல்வி அமைச்சர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-5)


## சித்த ஆயுர்வேத வைத்தியம்

பெண்களுக்கு நீண்ட கருமையான தலைமுடி உண்டாகவும் மொட்டைத்தலை இளைஞர்களுக்கு முடிவளரவும் நேத்திர சிந்தாமணித் தைலம். ஆண்கள், பெண்களுக்கான பாலியல் பலவீனம், மலட்டுத் தன்மை நீங்கிப் பிள்ளைப்பாக்கியம் பெறவும்

மார்பு வலி, இடுப்புவலி, மூட்டுவாதங்கள் நீங்கவும், தோல் சளி சம்பந்தமான நோய்கள், மாதவிலக்கு ஒழுங்கின்மை, வெள்ளைபடுதல், உடம்பில் தேவையற்ற நீர் கொலஸ்ரோல் ஆகியவற்றை நீக்கவும் வாத எண்ணெய், உள்மருந்துகள் பெறலாம். நீண்டகால நோய் உள்ளவர்கள் ஜாதகக்குறிப்புடன் வந்தால் பலன்பார்த்து சிகிச்சை பெறலாம். நேரில் வரும்போது குருதட்சணை கொடுப்பதற்கு வெற்றிலை கொண்டு வரவும்.

தொடர்புக்கு
Dr. த.கிருஷ்ணபகவான்
இல.11, 3ம் குறுக்குதெரு,
கண்டிவீதி, வவுனியா
தொ.பே. 077 972 3369
(4274)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா:5<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில் டோகா<br>தொ.இ: B/5794 | பிறப்பு: 1986 RC<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 26செவ் 2 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/5076 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 37செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L<br>கனடா குடியுரிமை<br>தொ.இ: B/5796 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 37<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5079 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 56 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/5797 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 43<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:பட்டதாரி<br>தொ.இ: G/5085 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர் மலேசியா<br>தொ.இ: B/5798 | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 48 செவ் 2 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/5086 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

# “துர்முகி வருஷ” இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



*செவ்வாய் பெயர்ச்சிக்குப் பிறகு செயற்பாட்டில் வெற்றி கிடைக்கும்! முன் பின் தெரியாதவர்களிடம் கூட முகம் மலர்ந்து பேசி காரியங்களை சாதிக்கும் துலாம் ராசி நேயர்களே!*

மன்மத வருடம் முடிந்து துர்முகி வருடம் தொடங்கியிருக்கிறது. இந்தப் புத்தாண்டு நன் மைகளை தருமா? இலட்சியங்களை நிறை வேற்ற விடுமா? உலா வரும் கிரக நிலைகள் உயர்ந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுககுமா? ஏழரைச்சனி நடக்கும் போது இனியபலன்கிடைக குமா...? என்றெல்லாம் வருடம் பிறக்கும் முன்பே உங்கள் சிந்தனை ஓட்டம சிறகடித்துப் பறக்கும்.

இந்த ஆண்டு சித்திரை மாதப் பிறப்பு பங்குனி 31 ஆம் திகதி மாலை நேரத்திலேயே நிகழ்ந்திருக்கின்றது. உங்கள் ராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதி யான புதனுக்குரிய கிழமையில் பிறக்கின்றது. ஆண்டு பிறக்கும் பொழுது தொழில் ஸ்தா னாதிபதி சந்திரன் 9இல் இருக்கின்றார். குரு வக்ர இயக்கத்தில் லாப ஸ்தானத்தில் இருக்கின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்களு டைய ராசிநாதன் சுக்ரன் உச்சம் பெற்றுச் சஞ்சரிப்பது யோகம்தான். ஆரோக்கியத் தொல்லை அகலும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். வாடிய நிலை மாறி வளர்ச்சிக்கு வித்திட சுக்ரன் வழி காட்டப் போகிறார்.

அதே நேரத்தில் அந்த சுக்ரனுக்குரிய பகை கிரகமாக விளங்கும் குரு பகவான் வக்ரம் பெற்றிருப்பது யோகம்தான். எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டில் முன்னேற்றம் ஏற்படும். சொந்தத் தொழில் செய்பவர்கள் கிளைத தொழில் செய்ய முன்வருவர். உத்தியோகத்தில உள்ளவர்கள், உழைத்தது போதும, சொந்தத் தொழில் செய்யலாம் என்று முடிவெடுத்து விருப்ப ஓய்வில் வரும் வாய்ப்பு கைகூடி வரும்.

என்ன இருந்தாலும் ஏழரைச்சனி இன் னும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. டிசெம்பர் 2017 வரை எதிலும் கொஞ்சம் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. அப்பொழுதுதான் விரயங்களிலிருந்து விடுபட இயலும். உங்கள் ஜாதக அடிப்படை யில் சனி முதல் சுற்றா? இரண்டாவது சுற்றா? மூன்றாவது சுற்றா? என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

முதல் சுற்று நடைபெற்றால் முக்கிய முடிவெடுப்பதில் பிரச்சினைகள் ஏற்படும். ஆரோக்கியத் தொல்லை, மருத்துவச் செலவு அதிகரிக்கும். இரண்டாவது சுற்று பொங்கு சனி என்றால் ஓரளவு நன்மையைச் செய்யும். மூன்றாவது சுற்று நடப்பவர்கள் முன்னெச்சரிக்கையோடு செயற்படுவது நல்லது. ஒரு சிலருககு நான்காவது சுற்றுக்கூட நடை பெறும்.

உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்பு கிரகமானவர். எனவே ஏழரைச்சனி ஆதிக்க காலத்தில் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது.

**ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி பதினேழு வரை!**

இக்காலத்தில் உள்ள கிரக நிலைகளின் அடிப்படையில் உங்கள் ராசிநாதன் சுக்ரன் உச்சம் பெற்றிருப்பதாலும், லாப ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதாலும் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். உத்தியோகமும் அடிக்கடி மாற்றம் ஏற்பட்டு நிரந்தமில்லாமல் இருந்திருக்கலாம். அந்த நிலை இனி மாறும்.

சனி உங்கள் ராசியைப் பொறுத்தவரை 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். அவர் வருடத் தொடக்கத்தில் வக்ர இயக்கத்தில் இருக்கின்றார். எனவே சுக ஸ்தானத்திற்கு அதிபதி வக்ரம் பெறும்பொழுது உடல் நலக் குறைபாடுகள் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் உருவா கலாம். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக்கொள்ள இயலும்.

ஐந்தாம் இடத்திற்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால் பிள்ளைகள்வழியில்பிரச்சினை கள், விரயங்கள் உருவாகலாம். இது போனற காலங்களில் குழந்தைகளை உங்கள் பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. செவ்வாய் பெயர்ச்சிக்குப் பின்னர் உடனபிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

வாக்கு, தனம், குடும்பம் என்று வர்ணிக்கப்படும் 2 ஆம் இடத்தில் சனி- செவ்வாய் கிரகங்களின் சேர்க்கை இருக்கின்றது. எனவே கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமல் ஒருசில சமயங்களில் தத்தளிப் பீர்கள். அடுத்த வீட்டாரின் பகை வளராமல் பார்த்துக் கொள்வது நல்லது. திடீர் இடமாற் றம், வீடு மாற்றம், ஊர் மாற்றங்கள் ஏற்படும். நாடு மாற்றங்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

**ஆடி பதினெட்டில் விரய குரு தேடி வருகின்றது!**




துர்முகி வருடம் ஆடி மாதம் 18ஆம் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கின்றார். இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக விரய ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பது யோகம் தான். 3, 6-க்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத இராஜயோக அடிப்படையில் செயற்படப் போகின்றது. திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகின்றது. இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கு பலன் அதிகம் உண்டு. எனவே அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. உத்தியோகம் மற்றும் தொழிலில் உன்னத நிலை உருவாகப் போகின்றது. வெற்றிக்கொடி நாட்ட வைப்பது வியாழனின் பார்வை தான்.

துலாம் ராசியைப் பொறுத்தவரை கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது எண் ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும். கண்ணியம் மிக்க நண்பர்கள் கைகொடுத்து உதவுவார்கள்.

பயண ஸ்தானம் என்று கருதப்படும் இடத்தில் வியாழன் வரும்பொழுது பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சல் கூடுதலாகவே இருக்கும். உழைப்பில்லாமல் ஊதியம் வந்து கொண்டிருக்கும். அந்நியதேசத்திலிருந்து அழைப்புகள் வரும்.

குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவதால் அதற்குரிய சிறப்புப் பலன் களை நீங்கள் பெற இயலும்.

“நான்கினை குரு தான் பார்த்தால் நலம் யாவும் வந்து சேரும்” என்பர். எனவே சுக ஸ்தானத்தை குரு பார்க்கின்ற பொழுது சுகங்களும், சந்தோசங்களும் வந்து சேரும். கொடி கட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும். வாடிக்கையாகிப் போன வைத்தியச் செலவு குறையும்.

வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். பழைய வாகனங்கள் பழுதாகிப் போய்விட்டனவே என்று நினைத்து அதைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். யாருடைய பெயரில் வாகனம் வாங்கினால் நல்லது, எந்த எண் ஆதிக்க த்தில் வாகனம் வாங்கி னால அதிர்ஷ்டம் தரும என்பதை யெல்லாம் முடிவெடுத்த பின்னால் வாகனம் வாங்குவது நல்லது. தாயின் உடல் நலம் தேறும். தாய் வழி ஆதரவு பெருகும்.

“ஆறினை குரு தான பார்த்தால் அகில த்தில் தொழில்கள் வாய்க் கும்” என்பர். எனவே எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். ஊதிய உயர்வும், இலாகா மாற றங்களும் கூட ஒரு சிலருக்கு வந்து சேரலாம். அரசு வேலை கிடைக்கவில்லையே என்று ஆதஙகப்பட்ட வர்களுக்கு இப் பொழுது அரசாங்கவேலை கிடைப்பதற்கான அறி குறிகள் தென்படும். உற்ற தோழர்கள் உதவிக்கரம் நீட்டுவர். கற்ற கல்வி கைகொடுக்கும்.

அஷ்டம ஸ்தானதை குரு பார்ப்பதால் இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்பு கிட்டும். உழைப்பிற்கேற்ற ஊதியம் வந்துசேரும.

ஆரோக்கியத் தொல்லை அகலும். உற சாகத்தோடு பணியாற்றுவீர்கள். சத்திர சிகிச்சை செய்தால் தான் நோய் குணமாகும் என்று சொல்லிய மருத்துவர்கள் இப்பொழுது சாதாரண சிகிச்சையிலேயே குணப்படுத்தி விடுவர். எதிரிகள் விலகி ஓடுவர். இலாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள்.

வங்கிகளில் வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியவில்லையே என்று கவலைப் பட்டவர்களுக்கு இப்பொழுது புதிய பாதை புலப்பட்டு வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள். பிள்ளைகளின் உத்தியோக நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உதிரி வருமானங் களும் உங்களுக்கு வந்து சேரும். எனவே ஆடி 18-க்கு மேல் யோகங்கள் உங் களைத் தேடி வரப்போகின்றது.

**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

இந்தப் புத்தாண்டில் குருவும்,சனியும் வக்ர இயக்கத்தில் சில மாதங்கள் சஞ்சரிக்கின்றனர். அப்போது நம்முடைய சுய ஜாதகத்தில் அந்த கிரகங்கள் வக்ர இயக்கத்தில் இருந்தால் நற்பலன்களை வழங்கும். குறிப்பாக துலாம் ராசியைப் பொறுத்தவரை குருவின் வக்ர இயக்கம் நன்மையைச் செய்யும். சனியின் வக்ர இயக்கத்தில் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டிய நேரமாகும்.

“கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜ யோகம்” என்பதற்கு இணங்க குருவின் வக்ர காலத்தில் நல்ல மாற்றங்கள் வந்து சேரும். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். வங்கிச் சேமிப்பு உயரும். மங்கலச் செய்திகள் மனை தேடி வந்து சேரும். உங்களுக்கு எதிராக செயற்பட்ட அதிகாரிகள் வேறு இடத்திற்கு மாற்றப் படுவர். புதிய கூட்டாளிகளை இணைத்துக் கொண்டு தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். விலகிச் சென்ற உடன் பிறப்பு கள் விரும்பி வந்து சேருவர்.

சனியின் வக்ர காலம் அவ்வளவு நல்லதல்ல. தடைகள் அதிகரிக்கும். இடையில் வந்த நண்பர்களால் சிக்கல்கள் ஏற்படும். வாகனங்களில் செல்லும்பொழுது கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. பூர்வீக சொத்துக் களை விற்று விட்டுப் புதிய சொத்துக்களை வாங்க முன்வருவீர்கள்.



**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

துர்முகி வருடத்தில் துலாம் ராசியில் பிறந்த பெண்களுக்கு பொருளாதாரப் பற்றாக் குறை அகலும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும். வாழ்க்கைத் துணையின்வேலை சம்பந்த மாக முயற்சி செய் திருந்தவர்களுக்கு அது கிடைக்கும். குரு பெயர்ச்சிகுப் பின்னால மிகு ந்த நன்மைகளைக் காணப் போகிறீர்கள். வாகன யோகமுண்டு. குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவதில் உங்கள் கவனம் செல்லும். கைமாற்றாக கொடுத்த தொகை வந்து சேரும். பிள்ளைகளின் படிப்பு சம்பந்தமாக எடுத்தமுயற்சிகளில வெற்றி கிடைக்கும். அவர் களை அயல் நாட்டிற்கு அனுப்பும் யோக முண்டு. தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். தாய் வழி ஆதரவு தக்க விதத்தில் கிடைக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்களை வாஙகலாம் என்று பெரி யவர்கள்முடிவு செயயலாம். அங்காரகனையும், சனிபகவானையும் விளக்கேற்றி வழிபடுவது நல்லது.

**வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!**

வெள்ளிக்கிழமை தோறும் விரத மிருந்து வடக்கு நோக்கிய கொற்றவையை வழிபடுவது நல்லது. சண்முக கவசம் பாராயணம் செய்து சஷ்டி தோறும் சண் முகநாதப் பெருமானை வழிபட்டு வருவ தன் மூலம் சகல யோகமும் வந்து சேரும். நாளை விருச்சிகம்...

## செவ்வாய் பெயர்ச்சிக்குப் பிறகு செயற்பாட்டில் வெற்றி கிடைக்கும்!

# மன்னாரில் சுகாதார சீர்கேடாக இயங்கிய பதினொரு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(பனிக்கன்குளம்)

மன்னாரில் சுகாதார சீர்கேடாக இயங்கி வந்த 11 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் திடீர் சோதனைகளை மேற்கொண்ட போது இந்த வர்த்தக நிலையங்கள் அடையாளம் காணப பட்டுள்ளன.

பழவகைகள் விற்பனை நிலையம், மரக்கறி விற்பனை நிலையம் போன்ற 11 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவே மன்னார் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.



குறித்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னார் நீதமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி மேற்கொண் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

# மாலைதீவு சிறையிலிருந்து கொண்டுவரப்பட்ட எனது சகோதரனை விடுதலை செய்யுங்கள்

## சகோதரி கண்ணீர் மல்க கோரிக்கை

மாலைதீவில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் எனது சகோதரன் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டமையை அறிந்து மன்னார்பிரஜைகள் குழு, மனிதவுரிமைகள் மற்றும் அபிவிருத்தி நிலைய சட்ட உதவியாளாகளின் துணையுடன் அண்மையில வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று பார்த்தேன. மாலைதீவு சிறையில் இருந்து ஒன்பது வருடத்தின் பின்னா் கொண்டு வரப்பட்ட எனது சகோதரனை விடுதலை செய்யுங்கள் என சகோதரி கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளாா்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, எனதுசகோதரன்கணேசு இராமச் சந்திரன் கடந்த 2005 ஆம் ஆண்டு 16 வயதில் காணாமற போனார். அவரை எங்கு தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை. அதன பின்னர் 2011 ஆம் ஆண்டு மாலைதீவு சிறைச்சாலையில் இருப்பதாக தகவல்கள் கிடைத்தன. ஆனால் தொடர்பு கொள்ள முடியவில்லை

அதன் பின் இரு வாரங்களுக்கு முன்னா் மாலைதீவு சிறையில் இருந்து 14 கைதிகளை இலங்கை அரசாங்கம் கொழும்புக்கு கொணடு வந்துள்ளது. அதில் எனது காணாமற போன சகோதரனும் இருக்கின்றார்.

கடந்த 9 வருடமாக மாலைதீவு சிறையில் இருந்த எனது சகோதரன் இல்லாத நிலையில் எனது அம்மா நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். எனக்கு இருக்கும் ஒரே சொந்தம் எனது சகோதரன் மட்டுமே. 9 வருடம் துன்பத்தை அவன் அனுபவித்து விட்டான். தற்போதும் அவனை சிறை வைத்துள்ளனர். புதிய நல்லாட்சி அரசாங்கம் கருணை காட்டி அவனை உடனடியாக விடுதலை செய்து எம்முடன் சேர்ந்து வாழ அனுமதிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளாா்.(2-250)

# முள்ளிக்குளம் மக்களின் காணிகள் மீட்கப்பட்டு விரைவில் வழங்கப்படும்

## செல்வம் எம்.பி. உறுதி

(முல்லைத்தீவு)

இடம் பெயர்ந்த முள்ளிக்குளம் கிராம மக்கள் தமது சொந்த காணிகளில் மீண்டும் வாழ வேண்டும் என்ற முனைப்புடன் இருக்கின்றார்கள்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அவர்களின் மீள்குடியேற்றத்தில் அக்கறை செலுத்தவில்லை. எனினும் புதிய அரசாங்கத்தினால் குறித்த முள்ளிக்குளம் கிராம மக்களின் காணிகள் கடற்படையினரிடம் இருந்து மீட்கப்பட்டு மக்களிடம் வெகு விரைவில் கையளிக்கப்படும் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளாா்.

அரச படைகளினால் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளாா்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் பலனாக புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் பிரகாரம் இந்த நாட்டில் முப்படையினர் பொதுமக்களின் காணிகளை அபகரித்து இருந்தால் குறித்த காணிகளின் விபரங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு அறிவித்தல் விடுத்துள்ளார்.

ஏற்கனவே நாங்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் குழுவிற்கு மன்னார் மாவட்டம் முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குறபட்ட முள்ளிக்களம் கிராம மக்களின் காணிகளை கடற்படையினர் அபகரித்துள்ளமை தொடர்பான அறிக்கையினை சமர்ப்பித்துள்ளோம்.

தற்போது குறித்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை நாங்கள் சந்திக்கின்ற போது வெகு விரைவில் முள்ளிகளம் கிராமம் கடற்படையினரிடம் இருந்து விடுவிக்கப்படும். அதே போன்று கேப்பாபிலவு காணி தொடர்பாகவும் நாங்கள் பேசியுள்ளோம்.

எனவே முள்ளிக்குளம் மற்றும் கேப்பாபிலவு காணிகள் படையினரினால் அபகரிக்கப்பட்டுள்ளமை குறித்தும் குறித்த காணிகள் மக்களினுடையது என ஆதாரத்துடன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளோம். எனவே குறித்த காணிகள் உடன் விடுவிக்கப்பட வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முயற்சி செய்து வருகின்றது.

பாராளுமன்றத்தில் பிரதமர், ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோரிடம் இவ் விடயம் தொடர்பான கோரிக்கைகளை நாங்கள் வலுவாக முன் வைத்துள்ளோம். குறித்த காணிகள் தொடர்பாக ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ள விடயங்களையும் நாங்கள் அனுப்பி வைத்துள்ளோம்.

எனவே வெகு விரைவில் குறித்த காணிகள் விடுவிக்கப்படும். அதற்கான சகல முயற்சிகளை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (2-4-281)

# வாரம் ஒரு தகவல்

## அவசரத் தந்தியும் அமைதியும்

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை திருவனந்தபுரம் மகளிர் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றி வந்த காலம். இவர் தங்கியிருந்த வீட்டைத் தொட்டு இவரது நண்பர் ஒருவரும் தங்கியிருந்தார்.

நண்பர் வீட்டில் ‘மருவிடு’ விருந்தொன்று நடக்கவிருந்தது. அவரது வீடு இதற்கு இடம் போதாமையால் கவிமணியின் வீடும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்தில் புதுமணத் தம்பதியர் விருந்துக்கு வந்தார்கள். இவர்களுடன் உறவினர்களும் நண்பர்களும் வந்து குழுமலாயினர். வந்த இவ் விருந்தினர்கள் நண்பர் வீட்டிலும் கவிமணியின் இல்லத்திலும் நிறைந்திருந்தனர்.

இரு வீடுகளிலும் கலகலப்பும் மகிழ்ச்சி ஆரவாரமும் நிரம்பியிருந்தன.

இந் நேரம் கவிமணிக்கு ஒரு அவசரத் தந்தி வந்தது. தந்தியை வாங்கிய கவிமணியின் உள்ளம் திடுக்கிட்டது. அவர் நினைப்பது போல் தந்தியினுள் செய்தி இருந்தால்? அதை அவரால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. எனினும் அந்நேரம் அமைதியை வரவழைத்துக் கொண்டார். தந்தியை ஒருவரும் அறியாது கொண்டு போய் பெட்டியினுள் வைத்துப் பூட்டினார்.

மரு வீட்டுக்கு வந்திருந்தவர்கள் அனைவரும் விருந்து சாப்பிட்டு விட்டு விடைபெற்றுச் சென்றார்கள். தம்பதியரும் விடைபெற்றுப் போயினர். கவிமணியின் இல்லத்தில் இப்போது அமைதி குடிகொண்டிருந்தது.

பெட்டியினுள் பூட்டி வைத்திருந்த தந்தியை எடுத்து பிரித்துப் பார்த்தார். ஆம், அவர் நினைத்தது போலவே தந்தியில் செய்தி இருந்தது. அவரது நெருங்கிய உறவினர் ஒருவரின் சாவுச் செய்தியை தாங்கி வந்த தந்திதான் அது.

கவிமணியின் உள்ளம் சோகத்தில் நிறைந்தது. உடனேயே அவரும் அவரது மனைவியாரும் துக்கத்தில் கலந்து கொள்ள அவ்விடத்துக்குப் புறப்பட்டனர்.

விருந்தினர்கள் திரண்டிருந்த நேரத்தில் தந்தியைப் பிரித்து கவிமணி படித்திருந்தால் அதை அனைவரும் அறிந்து கொள்வார்கள் அல்லவா! மகிழ்ச்சி பரவியிருக்கும் அந்த இடத்தில் துக்கத்தின் சாயல் பரவாதா? புதுமண மக்களுக்காக நடந்த அந்த மகிழ்ச்சி விருந்து வைபவத்தில் கவிமணி துயரச் செய்தியை வெளியிட விரும்பவில்லை.

எனவேதான் அமைதியை மனத்தில் வரவழைத்து யாருக்கும் தெரியாமல் தந்தியைக் கொண்டு போய் பெட்டியினுள் அடக்கமாக வைத்திருந்தார்.

**கவிஞர் தே.ப.பெருமாள்**

# கியூபெக் தமிழர் அமைப்பினரால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்



(பனிக்கன்குளம்)

கனடா மொன்றியாலைச் சேர்ந்த கியூபெக் தமிழர் அமைப்பு தாயகத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளது.

மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட நிதி உதவியில் 16 பயனாளிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி வாழ்வாதார உதவிகள் கிளிநொச்சி மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு அலுவலகமான அறிவகத்தில் வைத்து அண்மையில் பயனாளிகளிடம் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பயனாளிகள் விருப்புக்கமைவாக தையல் மெசின், விவசாயச் செய்கைக்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள், துவிச்சக்கர வண்டிகள், ஆடு, கோழி வளர்ப்பதற்கான உதவிகள் என்பன வழங்கப்பட்டிருந்தன.

பயனாளிகளிடம் உதவிகளை வழங்கி வைத்து மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன்,

“எமது மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்த எமது உறவுகள் வழங்கி வருகின்றமையானது இந்தக் காலத்திற்கேற்ற பணியாகும். இப்பணியானது காலத்தால் மறக்கப்படமுடியாத மகத்துவமானதாகும்.

நடைபெற்ற கொடிய யுத்தத்தின் பின்னர் எமது மக்களின் வாழ்வியல் சிதைக்கப்பட்டு ஏதிலிகளாக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த மக்களுக்கான உதவிகளை எமது புலம் பெயர் உறவுகள் வழங்கி வருகின்றார்கள். யுத்தம் தந்த கொடுமையால் எமது உறவுகள் எத்தனையோபேர் தமது அவயவங்களை இழந்துள்ளமையாலும் தமது வளங்களை இழந்துள்ளமையாலும் உழைத்துக் குடும்பத்தைக் காக்கும் பிள்ளைகளை, குடும்பத் தலைவனை இழநதுளளமையாலும் அவலப்பட வேணடியவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

யுத்தத்தில் பலருடைய அவயவங்கள் இழக்கப்பட்டமையால் திறன்வாய்ந்த தொழில்களில் ஈடுபடமுடியாத நிலையிலுள்ளார்கள. இப்படியானவர்கள் தையல், கால்நடைவளர்ப்பு, சிற்றுண்டி வகைகள் உற்பத்தி போன்ற தொழில்களினூடாக மட்டுப்படுத்தப்பட்ட வருமான வழிகளோடுதான் வாழ வேண்டியவர்களாகவுள்ளார்கள்.

மேற்படி உதவி வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கட்சியின் மாவட்ட அமைப்பாளர் அ.வேழ மாலிகிதன், கட்சியின் இளைஞர் அணித் தலைவர் சு.சுரேன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு மக்களுக்கான உதவிகளை வழங்கி வைத்திருந்தனர். (2-281)

# பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரிக்கும் செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும்

## ஈரானுக்கு ஐ.நா.அறிவுரை

(டெஹ்ரான்)

ஈரான் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைகள் நடத்தியதை, ரஷ்ய ராடார்கள் இந்த வாரம் பதிவு செய்திருந்தன.

இதனை அடுத்து இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள ஐ.நா. சபை செயலாளர் நாயகம் பான் கீ மூன், ஈரானின் இந்த நடவடிக்கையானது ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் 2231 ஆவது தீர்மானத்தை மீறும் செயல் என சுட்டிக் காட்டியுள்ளதுடன், பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரிக்கும் செயற்பாடுகளை ஈரான் தவிர்க்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சவுதி அரேபியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்த சந்தர்பத்தில் இவ்வாறான ஏவுகணை பரிசோதனை ஒன்றை ஈரான் நடத்தியுள்ளமை, அமெரிக்காவுக்கு விடுத்துள்ள சவாலாகும் என அவதானிகள் தெரிவித்ள்ளனர். (இ-5)

# ஒடிசாவில் வெயிலுக்கு இதுவரை 72 பேர் பலி!

ஒடிசாவில் வெயிலுக்கு இதுவரை 72 பேர் பலியாகி உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒடிசா மாநிலத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதனால் சுமார் 72 பேர் பலியாகி உள்ளனர். ஒடிசா மாநிலம் முழுவதும் மே 26ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு கோடை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

வட இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளிலும், தென் இந்தியாவின் சில பகுதிகளிலும் வெயிலின் வெப்பம் உச்சத்தைத் தொட்டுள்ளது.

நடப்பாண்டில் கோடை வெயிலின் தாக்கம் (ஏப்ரல், மே மாதங்கள்) மிக அதிகமாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (இ-5)

# பீகார் மாநிலத்தில் திடீர் தீ விபத்து 10 பேர் உயிரோடு எரிந்த கொடூரம்

(அவுரங்காபாத்)

பீகார் மாநிலம், அவுரங்காபாத் மாவட்டத்தில் தரார் என்ற கிராமம் உள்ளது. அங்கு ஹரி நகர் டோலா பகுதியில் இந்திரா நிவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த வீடுகளில் ஒன்றில் நேற்று முன்தினம் திடீரென தீப்பிடித்தது. அப்போது காற்று பலமாக வீசியதால் தீ, பிற வீடுகளுக்கும் பரவியது. அந்த வீடுகளுக்கு செல்கிற பிரதான நுழைவாயில் பூட்டப்பட்டிருந்ததால் யாராலும் வெளியேயும் வர முடியவில்லை. வீடுகளில் இருந்தவர்கள் அலறியும், தீ பயங்கரமாக எரிந்ததால் யாராலும் உள்ளே சென்று அவர்களை மீட்கவும் முடியவில்லை.

தீயணைக்கும் படையினர் வந்து தீயை போராடி அணைத்தனர். ஆனால் அதற்குள் அந்த வீடுகளில் இருந்த 5 பெண்கள், 3 குழந்தைகள் உள்பட 10 பேர் உயிரோடு எரிந்து உயிரிழந்தனர். அவர்கள் உடல்கள் அடையாளம் காண முடியாதபடி தீயில் எரிந்தன.

இந்த துயர சம்பவம், அந்த பகுதியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த தீ விபத்துக்கான காரணம் உடனடியாக தெரியவரவில்லை. பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-5)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 50 | 60 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 75 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 100 | 100 | 120 | 100 |
| தக்காளி | 100 | 100 | 60 | 100 | 140 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 45 | 60 | 80 | 40 |
| கோவா | 60 | 100 | 60 | 80 | 80 | 50 |
| கரட் | 100 | 100 | 90 | 120 | 120 | 100 |
| பூசணி | 30 | 30 | 15 | 30 | 40 | 40 |
| புடோல் | 50 | 80 | 30 | 80 | 80 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 100 | 100 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 90 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 60 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | — | — | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 | 160 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 | 160 | 160 | 150 |
| பீற்றூட் | 100 | 100 | 60 | 70 | 120 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 40 | 120 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 200 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 200 | 100 | 120 | — | 150 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 | — | 40 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 400 | 500 | 400 | 400 | 600 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 15-30 | 40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 250 | 160 | 100 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 250 | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 60 | 30 | 60 | 120 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | — | 80 | — | — | — | — |




- 1704 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்திப் பத்திரிகை "த பொஸ்டன்" நாளிதழ் வெளியிடப்பட்டது.
- 1863 - கலிபோர்னியாவில் கேயிஸ்வில் என்ற இடத்தில் அமெரிக்க பழங்குடிகள். 53 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1877 - ஓட்டோமான் பேரரசு மீது ரஷ்யா போரை அறிவித்தது.
- 1908 - லூசியானாவில் புயல் காரணமாக 143 பேர் கொல்லப்பட்டனர்.
- 1913 - வானளாவிக் கோபுரம் வூல்வேர்த் கோபுரம் நியூயார்க் நகரில் கட்டப்பட்டது.
- 1915 - ஆர்மீனிய இனப்படுகொலை: கொன்ஸ டன்டீனபோலில் பல்லாயிரக்கணக்கான ஆர்மேனியர்கள் படுகொலை செய்யபட்டனர். ஏனையோர் நாட்டைவிட்டு விரட்டப்பட்டனர்.
- 1955 - இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் ஆசியா, மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த 29 அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு முடிவுற்றது. குடியேற்றவாதம், இனவெறி, மற்றும் பனிப்போர் ஆகியவற்றைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1961 - 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த "வாசா" எனற சுவீடனின் கப்பல் மீட்டெடுக்கப்பட டது.
- 1965 - டொமினிக்கன் குடியரசில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.
- 1967 - சோயூஸ் 1 விண்கலத்தில் பயணித்த ரஷ்ய வீரர் விளாடிமிர் கொமரோவ் அவரது குதிகுடை திறக்க முடியாமல் போனதால் உயிரிழந்தார். இவரே விண்வெளிப் பயணமொன்றில் உயிரிழந்த முதலாவது வீரராவார்.
- 1968 - மொரீசியஸ் ஐ.நா.வின் உறுப்பு நாடாகியது.
- 1970 - முதல் சீனச் செய்மதி டொங் ஃபாங் ஹொங் 1 ஏவப்பட்டது.
- 1970 - காம்பியா பொதுநலவாய அமைப்பினுள் குடியரசாகியது.
- 1981 - முதலாவது ஐபிஎம் தனி மேசைக் கணினி அறிமுகமானது.
- 1990 - டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் தொலைக்காட்டியை விண்ணுக்குக் கொண்டு சென்றது.
- 1993 - இந்தியாவில் பஞ்சாயத்து அரசுத் திட்டம் அமைக்கப்பட்டது.
- 1993 - லண்டன் நகரில் மேற்கொள்ளப்பட்ட சுமையுந்து குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு 44 பேர் படுகாயமடைந்தனர்.
- 2006 - நேபாளத்தில் மன்னருக்கு எதிராக இடம்பெற்ற கலவரங்களை அடுத்து 2002 இல் கலைக்கபட்ட நாடாளுமன்றத்தை மீள அமைக்க மன்னர் உத்தரவிட்டார்.
- 2007 - பலாலி இராணுவத்தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

**பிறப்புகள**

- 1581 - வின்சென்ட் தே பவுல், பிரெஞ்சுப் புனிதர. (இ. 1660)
- 1820 - ஜி. யு. போப், தமிழுக்கு சேவை செய்த அமெரிக்கர். (இ. 1908)
- 1880 - கிடியொன் சண்டுபெக்கு, சுவீடிய-அமெரிக்கப் பொறியாளர், பல்லிணைவுப் பட்டிகை தயாரித்தவர். (இ. 1954)
- 1889 - ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ், ஆங்கிலேய அரசியல்வாதி. (இ. 1952)
- 1929 - ராஜ்குமார், இந்திய நடிகர். (இ. 2006)
- 1934 - ஜெயகாந்தன், இந்திய எழுத்தாளர். (இ. 2015)
- 1941 - ரிச்சர்ட் ஆல்புரூக், அமெரிக்க ஊடகவியலாளர், தூதுவர். (இ. 2010)
- 1941 - ஜான் வில்லியம்சு, அமெரிக்க இசைக கலைஞர்
- 1947 - ரோஜர் கோர்ன்பெர்க், வேதியியலுக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1951 - தம்பிஐயா தேவதாஸ், ஈழத்து எழுத்தாளர்
- 1973 - சச்சின் டெண்டுல்கர், இந்தியத் துடுப்பாளர்
- 1987 - வருண் தவான், இந்திய நடிகர்

**இறப்புகள**

- 1622 - சிக்மரிங்ஞன் பிதேலிஸ், செருமானியப் புனிதர். (பி. 1577)
- 1731 - டானியல் டீஃபோ, ஆங்கிலேய உளவாளி, ஊடகவியலாளர் (பி. 1660)
- 1960 - மேக்ஸ் வோன் உலோ, இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்ற செருமானியர. (பி. 1879)
- 1967 - விளாடிமிர் கொமரோவ், உருசிய விமானி, விண்வெளிவீரர். (பி. 1927)
- 1976 - மார்க் டோபே, அமெரிக்க ஓவியர். (பி. 1890)
- 2011 - சத்திய சாயி பாபா, தென்னிந்திய ஆனமிக குரு. (பி. 1926)

**சிறப்பு நாள்**

- காம்பியா - குடியரசு நாள். (1970)

### சிறீ சத்ய சாயி பாபா தென்னிந்திய ஆன்மிக குரு



ஆந்திராவில் உள்ள புட்டபர்த்தி எனும் கிராமத்தில் பிறந்தார். அவர் தந்தை பெத்தவெங்கம ராயூ ரட்னா கரம தாயாரின் பெயர் ஈசு வரம்மா. சத்திய சாயி இவர்களுக்கு 8-ஆவது குழந்தையாகப் பிறந்தார். "சத்திய நாராயண விரதம்" இருந்து பிறந்ததால், இவருக்குச் சத்திய நாராயணன் எனப் பெயர் சூட்டினர்.இவரது அடியார்களினால் இவர் "இறை அவதாரம்" எனப் போற்றப் படுகிறார்ஜ2ஸ. இவர் ஒரு மதப் பரப்புனரும் சித்தரும் ஆவார். விபூதி தருவித்தல், மேலும் மோதிரங்கள், சங்கிலிகள், கடிகாரங்கள் போன்ற சிறிய பொருட்களை தருவித்தல் போன்ற இவரது செய்கைகளினால் இவர் மீது உலக நாடுகளில் பலத்த சர்ச்சைகள் கிளம்பியுள்ளன. இவை எளிய வித்தைகளே என பகுத்தறிவாளர்கள் நிரூபித்து உளளார்கள். இவரது பக்தர்கள் இறைவனின் அற்புதம் என கருதுகின்றனர். சத்திய சாயிபாபா தனது 14வது அகவையில் சீரடி சாயி பாபாவின் மறு அவதாரம் எனத் தன்னை அறிவித்துக் கொண்டார்.

சத்திய சாயிபாபா நிறுவனம் தனது சாயி அமைப்புகள் மூலம் இலவச மருத்துவ நிலையங்கள், பாடசாலைகள், உயர்கல்வி நிலையங்கள், கிராமங்களுக்கு குடிநீர்த் திட்டம் போன்ற பல சமூகநலத் திட்டங்களை இந்தியாவிலும் வேறு பல நாடுகளிலும் அறிமுகப்படுத்தி நடத்தி வருகிறது. இவரது ஏறத்தாழ 1200 சத்ய சாய் அமைப்புகள் 114 மையங்களில் உலகெங்கிலும் செயல்பட்டு வருகின்றது. இவரின் வழி நடப்பவர்கள் சுமார் 60 இலட்சம் பேர் (1999 இல்) எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உலகெங்கிலும் 100 கோடி அடியார்கள் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

# தேசிய பாதுகாப்பிற்கு ஒரு பாதிப்பும் இல்லை

## அரசு மீண்டும் வலியுறுத்தல்



(கொழும்பு)

**தேசிய பாதுகாப்பிற்கு ஒரு பாதிப்பும் இல்லை என அரசு மீண்டும் வலியுறுத்துவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.**

ராமாஞ்ஞபேமஹாநாயக்கதேரரை நேற்று சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிலர் கூறிவருகின்றனர். இவை உண்மை இல்லை என அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியும், பிரதமரும் இருக்கும் போது தேசிய பாதுகாப்பிற்கு யாராலும் பாதிப்பை ஏற்படுத்த முடியாது என உறுதியளிப்பதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார். (இ-5)

# கலாசார அதிகார சபையினால் போட்டிகள் நடத்தப்படவுள்ளன

யாழ்.பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் பாடல் போட்டியில் கலந்து கொள்ளும் மூத்தோர்கள் பக்திப் பாடல் மற்றும் நாட்டுக்கூத்துப் பாடல்களைப் பாட முடியும். வீடியோ, குறும்படப் போட்டியில் கலந்து கொள்ளும் இளையோர்கள் சமகாலத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் படைப்புக்களை காட்சிப்படுத்த வேண்டும். இரு பிரிவினரும் யாழ். பிரதேச செயலக கலாசார அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு தமது பெயர் விபரங்களை பதிவு செய்து விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

அத்துடன் யாழ்.பாடி எனும் 2 ஆவது நூல் தொகுப்பு வெளியிடப்படவுள்ளதாகவும் இதில் யாழ். பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞர்களின் விபரங்கள் மற்றும் யாழ். பிரதேசம் தொடர்பான ஆக்கங்கள் என்பனவற்றையும் யாழ்.பிரதேச செயலக கலாசாரர அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ-51)

## விற்பனைக்கண்காட்சி

யாழ்.பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் கலாசார உணவு, விற்பனைக்கண்காட்சி எதிர்வரும் 6 ஆம் திகதி யாழ். பிரதேச செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

யாழ்.பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கலாசார உணவுப் பண்டங்களைத் தயாரித்து விதம்விதமான முறையில் கண்காட்சியில் காட்சிப்படுத்த முடியும் அத்தோடு விற்பனை செய்ய முடியும். இதில் ஆர்வமுடையோர் யாழ்.பிரதேச செயலக அதிகார சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ-51)

# ஈழத்துச் சிதம்பரத்தின் வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றிய கலாநிதி பண்டிதர் சிவஸ்ரீ க.வைத்தீசுவரக்குருக்கள்



திருஉத்தர கோசமங்கையிலிருந்து காரைநகருக்கு அழைத்து வரப்பட்ட அந்தணர் பரம்பரையில் வந்த கணபதீசுவரக் குருக்கள் சிவயோகசுந்தராம்பாள் தம்பதியினருக்கு மூன்றாவது புதல்வராக 22.09.1916 அன்று திண்ணபுரம் என்னும் ஆன்மீக வளம் மிகுந்த சிவபூமியில் வைத்தீசுவரக் குருக்கள் தோன்றினார்.

இவர் தமது ஆரம்பக் கல்வியைக் காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியைக் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையிலும், ஆங்கிலக் கல்வியைக் காரைநகர் இந்துக் கல்லூரியிலும் பயின்றார். பின்னர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலே கல்வி கற்றுச் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்தார். சுன்னாகம் பிராசீன பாடசாலையில் வட மொழியும் தமிழும் கற்று வடமொழியில் பிரவேச பண்டிதர் பரீட்சையிலும் தமிழில் பாலபண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மாணவனாகிய வித்தகர் ச. கந்தையாபிள்ளையிடம் சைவ சித்தாந்தம் கற்றார். மகாவித்துவான் சி. கணேசையரிடம் தமிழ் இலக்கணத்தை முறையாகக் பயின்றார். 1939 ஆம் ஆண்டு பண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார். 1939 ஆம் ஆண்டில் பரமேசுவரா ஆசிரியர் கலாசாலையிலே கற்றுப் பயிற்றப்பட்ட ஆசிரியரானார். முன்னாள் ஆட்சி மன்ற உறுப்பினர் (Senator) அ. நடேசபிள்ளை அவர்களிடம் தர்க்க சாத்திரமும் கற்றார்.

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ச. சிவராமலிங்க ஐயர் -ஞானாம்பிகை தம்பதிகளின் மூத்த மகள் சாரதாம்பிகையைத் திருமணம் செய்தார். சச்சிதானந்த சர்மா, இராணி, சாவித்திரி ஆகிய மும்மணிகளுடன் இன்பத்திலே திழைத்து இல்வாழ்க்கையில் நிறைவு பெற்றார்.

1940 ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் ஆசிரியப் பணியைத் தொடங்கினார். பணியாற்றிய காலத்தில் கொழும்பு விவேகானந்த சபையால் நடத்தப்பட்டு வந்த அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சைக் குழுவில் அங்கம் வகித்துச் சேவை செய்து வந்தார். ஞாயிற்றுக்கிழமைகளில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளுக்கு அறிவுரை வழுங்கி வந்தார். நாட்டின் பல்வேறு பாகங்களிலும் ஆசிரியப் பணியாற்றி வட்டுக்கோட்டை துணவி அ. மி. த. க. பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி 1971ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

தவத்திரு யோகர் சுவாமிகளின் ஆசியுடன் 01.01.1940 ஆம் ஆண்டு காரைநகர் மணிவாசகர் சபையை குருக்கள் ஐயா நிறுவினார். மணிவாசகர் சபை மார்கழி மாத திருவெம்பாவைக் காலத்தில் 1955ஆம் ஆண்டு முதல் மணிவாசகர் விழாவினை நடத்தி வருவதற்கும், மணிவாசகர் விழாவில் எமது நாட்டிலிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் சைவத்தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டு சமயச் சொற்பொழிவாற்றி வருவதற்கும் சிவஸ்ரீ வைத்தீசுவரக் குருக்கள் மணிவாசகர் சபை யோடு இணைந்து இறுதி வரை பெரும்பணியாற்றிவந்துள்ளார்.

ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் மார்கழி திருவாதிரை உற்சவகாலத்தில் கூத்தபிரான் புத்தக சாலை என்ற பெயருடன் புத்தக நிலையம் ஒன்றை அமைத்துப் பயனுள்ள சைவசமய நூல்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற பெருநோக்குடன் ஆதாயம் கருதாது விற்பனை செய்து தொண்டாற்றினார்.

1960ஆம் ஆண்டு காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினை நிறுவினார். இதன்மூலம் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ்மொழி மாதிரி வினாக்கள் அடங்கிய பத்திரங்களை வெளியிட்டு மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதற்கு உதவினார். தமிழ் இலக்கிய விளக்கம், மதிப்பீட்டுப் பயிற்சிகள், கட்டுரைக்கோவை முதலிய நூல்களையும் வெளியிட்டு மாணவர்களின் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு வழிகோலினார். திண்ணபுரத்திற்கு அருகாமையில் சடையாளி என்ற இடத்தில் மணிவாசகர் சனசமூகநிலையம் அமைவதற்கு மூலகர்த்தாவாக இருந்துள்ளார். தன்னிடமிருந்த நூல்களை எல்லாம் கொடுத்து காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் நூல் நிலையம் அமைப்பதற்கு உதவினார்.

இவர் ஈழத்துச் சிதம்பரத்தை உயிரினும் மேலாகக் கருதி அதன் வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றினார். காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில் ஈழத்துச் சிதம்பரம் எனப் பெயர் பெற்று உலகறிய விளங்குவதற்கு இவர் காரணமாகவிருந்து தொண்டாற்றியமை குறிப்பிடத்தக்கது.

1960 ஆம் ஆண்டு இவரது தந்தையாரும், ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாச்சாரியாருமாகிய சிவஸ்ரீ கணபதீசுவரக் குருக்களால் எழுதப்பட்ட ஈழத்துச் சிதம்பரம் என்னும் நூலை பதிப்பித்து வெளியீடு செய்தார்.

ஈழத்துச் சிதம்பர புராணம் என்னும் தல புராணத்தை 1971 ஆம் ஆண்டு நவாலியூர் புலவர் மணி சோ. இளமுருகனார் அவர்களைக் கொண்டு இயற்றுவித்து அன்னாரின் துணைவியாரான பண்டிதை மணி பரமேசுவரி அம்மையாரைக் கொண்டு அதற்குச் சிறந்த உரையையும் எழுதுவித்துப் பதிப்பித்த பெருமை குருக்கள் ஐயாவையே சாரும்.

இவரால் பதிப்பிக்கப்பட்ட ஈழத்துச் சிதம்பரபுராணம் சிறந்த கட்டமைப்பு உடைய நூல் என்று 1974 ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் திகதி இலங்கைத் தேசிய நூல் அபிவிருத்திச் சபையால் பாராட்டப்பட்டு சான்றிதழ் அளிக்கப்பட்டது.

2007ஆம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்தில் வீற்றிருக்கும் பூரணை, புட்கலை சமேத ஐயனார் வரலாற்றைக் கூறும் ஆண்டிகேணி ஐயனார் புராணம் என்னும் நூலை வட்டுக்கோட்டைப் பண்டிதர் க. மயில்வாகனனார் மூலம் இயற்றுவித்ததுடன் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களைக் கொண்டு அதற்கு உரையும் எழுதுவித்து வெளியீடு செய்தார்.

காரைநர் கார்த்திகேயப் புலவரால் ஆக்கப்பட்ட ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் பெருமையை எடுத்தியம்பும் திண்ணபுர அந்தாதி என்னும் நூலுக்கு தென்னிந்திய தருமைபுர ஆதீனப் புலவர் செஞ்சொற் கொண்டல் சொ. சிங்காரவேலன்அவர்களைக்கொண்டு உரை எழுதுவித்து வெளியீடு செய்தார்.

ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தினாலே வெளியிடப்பட்ட திருவாதிரை மலர்களுக்கு ஆசிரியராக இருந்து பதிப்பித்து வெளியீடு செய்தார்.

திருமுறைப் பெருமை, சேத்திரத் திருவெண்பா, அருள்நெறித் திரட்டு, திக்கரையந்தாதி, திருவெழு கூற்றிருக்கை, தன்னை அந்தாதி, திருப்போசை வெண்பா, நாவலர் பிள்ளைத் தமிழ், கட்டுரைக் கோவை போன்ற நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டார்.

தொடர் மொழிக்கு ஒரு சொல், எதிர்சொற்கோவை, பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு, காரைநகரில் சைவ சமய வளர்ச்சி, உரைநடையாக்கம், மதிப்பீட்டுப் பயிற்சிக்கோவை - தமிழ் மொழி (க.பொ.த. சாதாரண வகுப்பிற்குரியது) ஆகிய நூல்களை வெளியிட்டமை இவரின் ஆக்கத்திறமையை எடுத்தியம்பியது.

காரைநர் சைவமகாசபை பொன்விழா மலர், காரைநகர் மணிவாசகர் சபை வெள்ளிவிழா மலர், காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் கும்பாபிஷேக மலர், சைவக் களஞ்சியம் போன்ற நூல்களின் தொகுப்பாசிரியராகவும் பணியாற்றினார்.

12.12.2002 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் தத்துவ கலாநிதிப் பட்டம் (PhD) வழங்கப்பட்டது. 1995 இல் இலங்கை கம்பன் கழகத்தினால் மூதறிஞர் என்னும் பட்டம் வழங்கப்பட்டது. 18.11.2001இல் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் தமிழ் விவகாரங்கள் அமைச்சு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்ற மூத்த கலைஞர்கள் கௌரவிப்பின் போது கலைஞானகேசரி என்ற பல் துறைக்கான பட்டம் வழங்கப்பட்டது. 04.11.2007 இல் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தினால் சிவாகம கிரியா பூஷணம் என்னும் பட்டம் வழங்கப்பட்டது. 2008 இல் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவினரால் நடத்தப்பட்ட கலை இலக்கிய விழாவில் கலைஞானச்சுடர் என்னும் பட்டம் வழங்கப்பட்டது. 04.02. 2006 இல் திருவாவடுதுறை ஆதீனம் விருதுவழங்கிக் கௌரவித்தது. சைவசமய அருள்நெறி மன்றம் வலி - கிழக்கு கோப்பாய் இவரது சமயப்பணியைப் பாராட்டி அருட் சுடர்மணி என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. திண்ணபுர அந்தாதி வெளியீட்டு விழாவில் செந்தமிழ் ஞாயிறு என்னும் பட்டமும் வழங்கப்பட்டது. பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரனின் மணி விழாக்குழுவினரால் சமூக மாமணி என்னும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

பெயரையோ புகழையோ அவாவி நில்லாது மிக அமைதியான முறையில் வாழ்ந்த குருக்கள் ஐயா அவர்கள் சுந்தரேசப் பெருமானின் ஆலய உயர்வுக்கும், ஈழத்துச் சிதம்பரம் என்னும் பெயர் உலகெலாம் பரவி நிலைக்கவும், திருநெறிய தமிழும் தெய்வச் சைவ சமயமும் தழைக்கவும் அரிய பல தொண்டுகள் செய்த சிவஸ்ரீ க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் ஏப்ரல் மாதம் இருபத்திநான்காம் நாள் (24-04-2015) வெள்ளிக் கிழமை பூர்வ பட்ச சப்தமி திதியில் அதிகாலை 3 மணிக்கு பிறவிப் பெருங்கடலை நீத்து ஈழத்துச் சிதம்பரத்தில் திருநடனம் செய்யும் சிவகாமசுந்தரி சமேத நடராசப் பெருமானின் பாதாரவிந்தங்களிலே சங்கமித்தார்.

மா.கனகசபாபதி
காரைநகர் மணிவாசகர் சபை
முன்னாள் செயலாளர்.



வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம் நடத்திய முழுமதிக் கலைவிழா நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி மு/யோகபுரம் மகா வித்தியாலய கலையரங்கில் நடைபெற்ற போது... (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வெதுப்பக உரிமையாளர் சங்கம் ஒன்றை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அமையுங்கள்

## பொதுமக்கள், நுகர்வோர் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட வெதுப்பக உரிமையாளர்களை ஒன்றுதிரட்டி வெதுப்பக உரிமையாளர் சங்கம் ஒன்றை அமைத்து செயற்படுத்த உரிய அதிகாரிகள், வெதுப்பக உரிமையாளர்கள் ஆகியோர் முன்வர வேண்டுமென பொதுமக்கள் மற்றும் நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது, குறித்தமாவட்டத்திலுள்ளஅனைத்து வெதுப்பகங்களின் உரிமையாளர்கள் அனைவரையும்ஒன்றுதிரட்டிஒருசங்கமாக இயங்கவைப்பதன்ஊடாகவெதுப்பக உரிமையாளர்கள்மட்டுமன்றிவெதுப்பகங்களில் பணிபுரிவோர் மற்றும் நுகர்வோர் ஆகியோரும் நன்மை அடைய வாய்ப் புக்கள் உள்ளன.

இன்றைய காலகட்டத்தில் மக்களின் பிரதான நுகர்வுப் பொருளாகவுள்ள வெதுப்பக உற்பத்தி பொருட்களின் தரம், நிறை என்பவற்றை நுகர்வோர் முழுமையாக பெற்றுக் கொள்வதற்கும் மேற்படி சங்கத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்க முடியுமெனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அத்துடன் குறித்த வெதுப்பக உரிமையாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் மாவட்டத்தில் காணப்படும் பாண் விலை ஏற்றத் தாழ்வுகள் மற்றும் உள்ளீட்டு பொருட்களின் விலை ஏற்றத் தாழ்வுகளின் தாக்கங்களை மிக எளிதாக முகம் கொடுத்து தமது உற்பத்தித்துறைகளை மேம்படுத்துவதுடன் தமது பணியாளர்களுக்கான சிறந்த சட்ட திட்டங்களை வகுப்பதன் மூலம் பணியாளர்கள் பிறழ்வுகள் ஏற்படாமல் அவர்களின் நன்மைகள் தொடர்பிலும் இச் சங்கம் ஊடாக நடவடிக்கை எடுக்க முடியுமெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவேமாவட்டத்திலுள்ளஅனைத்து வெதுப்பக உரிமையாளர்களும் ஒன்றிணைந்து சங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு உரிய அதிகாரிகள் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்படுகீன்றது. (2-310)

# சிரமதானப் பணி

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி வங்கி வளாகம் வாழ்வின் எழுச்சிக் பயனாளிகளினால் சிரமதானப் பணிமூலம் நேற்று முன்தினம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

பதினொரு கிராமங்களுக்கு வாழ்வாதார கொடுப்பனவுகளை வழங்கி வரும் ஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி வங்கியினால் கண்ணகைபுரம் பிரதேச வாழ்வின் எழுச்சி பயனாளிகள் மற்றும் வங்கியின் வலய உதவியாளர் ஆகியோரினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-272)




# காணாமற்போனோரின் விசாரணைகள் கிளிநொச்சியில் நாளை முதல் ஆரம்பம்

## தொடர்ந்து நான்கு தினங்கள் நடைபெறும்

(கிளிநொச்சி)

காணாமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவினுடைய பொதுமக்கள் அமர்வு விசாரணைகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை வரை தொடர்ந்து நான்கு நாட்கள் மாவட்டச் செயலகத்தில் நடைபெறுமென கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை கரைச்சியைச் சேர்ந்த 360 பேருக்கும் மறுநாள் செவ்வாய்க்கிழமை கரைச்சியைச் சேர்ந்த 362 பேருக்கும் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை கண்டாவளையைச் சேர்ந்த 250 பேருக்கும் மறுநாள் வியாழக்கிழமை பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த 194 பேருக்குமாக மொத்தம் ஆயிரத்து 166 பேருக்கு விசாரணைகள் நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு நாளும் விசாரணைகள் காலை 8.30 இற்கு ஆரம்பமாகி பிற்பகல் 5 மணிக்கு நிறைவடையும். எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2 மணியுடன் முடிவு பெறும்.


விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு அவர்களது முகவரிக்கு தனித்தனியாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக அந்தந்த கிராமசேவையாளர்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நாளில் அதாவது அந்தந்த பிரதேச செயலக பிரிவு ரீதியாக குறிப்பிட்ட நாளில் அழைக்கப்பட்டவர்கள் விசாரணைக்கு சமுகமளிக்க வேண்டும்.

இதுவரை காணாமற் போனவர்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யாதவர்கள் புதிதாக முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (2)

## 5 ஆம் ஆண்டு மாணவியை

# பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்த முயன்றதை கண்டித்து மக்கள் வீதியை மறித்து மறியல் போராட்டம்



(பனிக்கன்குளம்)

பேசாலை உதயபுரத்தைச் சேர்ந்த 5 ஆம் ஆண்டு மாணவியை பாலியல் துஷ்பிரயோத்திற் குட்படுத்த முயன்ற சம்பவத்தைக் கண்டித்து நேற்று அதிகாலை 4 மணி தொடக்கம் குறித்த கிராம மக்கள் வங்காலை பாடு சந்தியில் வீதித்தடைகள் ஏற்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட முயன்ற இளைஞனுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்; பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக நடைபெறும் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதுடன் பாதிக்கப்பட்ட உதயபுரத்தைச் சேர்ந்த மாணவிக்கு நீதி கிடைக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டோர் கோஷங்களை எழுப்பினர்.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

உதயபுரம் கிராமத்தை சேர்ந்த 5 ஆம் ஆண்டு மாணவி ஒருவர் பேசாலை 5 ஆம் வட்டாரத்திலுள்ள வீடொன்றில் தனியார் வகுப்பிற்கு சென்று வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு குறித்த தனியாா வகுப்பிற்கு சென்றிருந்த போது அங்கு ஆசிரியர் இருக்கவில்லை.

இந்நிலையில் சிறுமி அப்பகுதியில் தனியாக நின்றுள்ளார். அதனை அவதானித்த குறித்த தனியார் ஆசிரியரின் வீட்டிற்கு அருகிலுள்ள இளைஞன் ஒருவன் குறித்த மாணவியின் பக்கத்திலுள்ள அவரது வீட்டிற்கு சிறுமியை ஏமாற்றி அழைத்து சென்றுள்ளான்.

குறித்த இளைஞனின் சொந்த வ்டான பாழடைந்த வீட்டிற்கு சென்று பாலியல் துஷபிரயோகத்தில் ஈடுபட முயற்சித்துள்ளார்.

இதனை அடுத்து அங்கிருந்து தப்பித்துள்ள சிறுமி அருகிலுள்ள கடை ஒன்றிற்கு ஓடிச் சென்று தனக்கு நடந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளார். பின்னர் மாணவியின் பெற்றோருக்கு தகவல் வழங்கப்பட்டு அதனூடாக பெற்றோர் பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர். துஷ்பரயோகத திற்கு உட்படுத்த முயன்றதாக தெரிவிக்கப்படும் சந்தேகநபரை பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து வங்காலை பாடு சந்தியில் அதிகாலை 4 மணி முதல் வீதித்தடைகள் ஏற்படுத்தி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிமலநாதன் மற்றும் அங்கு வந்திருந்த பொலிஸார் சமரசப்படுத்தி வீதித் தடையை அகற்றுமாறு தெரிவித்தனர்.

ஆனால் போராட்டக்காரர்கள் குறித்த பகுதிக்கு வருமாறு சிறுவர் நன்நடத்தை பிரிவு அதிகாரி மற்றும் பகுதி கிராம சேவகருக்கு போராட்டம் தொடர்பாக தகவல் வழங்கியும் அவர்கள் வராததை ஆட்சேபித்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டதுடன்.

வாகன போக்குவரத்திற்கு இடையூறு களையும் விளைவித்திருந்தனர். இதனால் தலைமன்னார் பிரதான வீதியூடாக பயணித்த அனைத்து வாகனங்களும் செல்ல முடியாமல் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதனிடையே அங்கு வந்த கிராம சேவகர், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பொலிஸாரும் போராட்டக்காரர்களிடம சமரசப்பேச்சு நடத்தி குறித்த சந்தேகநபருக்கு கடுமையான தண்டனை வழங்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்ததை அடுத்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (2-281)

முல்லைத்தீவு மாவட்ட சர்வமத ஒன்றியமும் முள்ளியவளை வடக்கு சமாதான நல்லிணக்கக் குழுவும் இணைந்து கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று நடத்தப்பட்ட சித்திரை புத்தாண்டு பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் முள்ளியவளை வடக்கு பொதுநோக்கு மண்டப வளாகத்தில் நடைபெற்ற போது... (படங்கள்:- வற்றாப்பளை செய்தியாளர்)



ஆம் பொருள் நமதேயாயின்
அறம்பொருள் பிறருக்காவதுண்டோ?
-மாணிக்கவாசகர் புராணம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மந்திரி மாணிக்கவாசகரைப் பற்றி அமைச்சர் சுவாமிநாதன் அறியாரோ?

திருவாசகம் தந்த மாணிக்கவாசகர் பாண்டிய மன்னனின் அரச சபையில் மந்திரியாக இருந்தவர். அரசனுக்கு குதிரை வாங்குவதற்காக சென்ற மாணிக்கவாசகர், அடியார் கூட்டத்தைச் சந்திக்கிறார். குதிரை வாங்குவதற்காக கொண்டு சென்ற பணத்தை அடியார்களுக்கு அமுது கொடுப்பதில் செலவிட்டு விடுகிறார்.

ஒரு மந்திரி இப்படிச் செய்யலாமா? என்று கேட்பது நியாயமாயினும் ஒரு மந்திரி தான் அப்படிச் செய்ய வேண்டும் என்பது நம் கருத்து.

அரசனுக்கு குதிரை என்பதைவிட மக்கள் கூட்டத்திற்கு உணவு என்பதே முக்கியம் என்று ஒரு மந்திரி முடிவு எடுப்பது கட்டாயமானதாகும்.

இதனையே மாணிக்கவாசகர் செய்தார். மாணிக்கவாசகரின் இச் செய்கையானது இந்த உலகில் மந்திரியாக -அமைச்சர்களாக இருப்பவர்களுக்கு நல்லதொரு படிப்பினையாகும். அதாவது அரசனுக்குப் பயந்து மக்கள் பணிசெய்வதை மறந்து விடாதீர்கள். அரச பணம் என்பது மக்களுக்கானது. எனவே மந்திரிகளாக இருக்கக் கூடியவர்கள் மக்களையே முதன்மைப்படுத்த வேண்டும். இதனையே மாணிக்கவாசகர் தன் செயல் ஊடாக உலகுக்குப் போதித்தார்.

இதை நாம் சொல்லும் போது இதனால் மாணிக்கவாசகர் பட்டதுயர் தெரியாதோ? என்று நீங்கள் கேட்கலாம்.

ஆனால், இங்குதான் மாணிக்கவாசகரின் செயலுக்கு இறை அங்கீகாரம் கிடைக்கிறது. மாணிக்கவாசகரை சிறையில் அடைத்ததனால் வைகை நதி பெருக்கெடுக்கிறது. மண் சுமந்து அணைகட்ட அந்த சாட்சாத் ஈஸ்வரனே வருகிறான்.

ஆக, மக்கள் பணி செய்கிறவர்கள் துன்பப் பட்டால் கடவுளே நேரில் வந்து அவர்களை காப்பாற்றுவான் என்பதை எடுத்தியம்புவதுதான் மாணிக்கவாசகரின் வாழ்க்கை வரலாறு.

இந்த வரலாற்றை எங்கள் அமைச்சர் சுவாமிநாதன் கற்றறிய வேண்டும். இல்லையில்லை நான் ஏற்கெனவே மாணிக்கவாசகரை கற்றுள்ளேன் என்று அமைச்சர் சுவாமிநாதன் கூறினால், ஐயா! பொருள் உணர்ந்து கற்க என்று மட்டுமே சொல்ல முடியும்.

மந்திரி மாணிக்கவாசகரை அமைச்சர் சுவாமிநாதன் கற்றறிந்திருந்தால் பொருத்து வீடு தொடர்பில் இத்துணை தூரம் கதைக்கமாட்டார்.

வீடு மக்களுக்கானது என்றால் மக்கள் விரும்புகின்ற வீட்டை அமைத்துக் கொடுப்பதுதான் ஓர் அமைச்சருக்கு அழகு. இதைவிடுத்து யாருக்கோ நன்மை கிடைப்பதற்காக திட்டமிடப்பட்ட பொருத்து வீட்டை கட்டாயப்படுத்தி கட்டிக் கொடுக்க நினைப்பது மகா பாவச் செயலாகும்.

எங்கள் மக்கள் கல் வீடுகளைக் கட்டி அதில் குடியிருப்பது நல்லதல்லவா? பொருத்து வீடு ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட ரூபாய் இருபது இலட்சத்தை எங்கள் மக்களிடம் கொடுத்தால் அவர்கள் மிக அழகான வீட்டை அமைப்பதுடன் பிள்ளைகள் கல்வி கற்பதற்கான தளபாடங்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் என அனைத்தையும் வாங்கிக் கொள்வர். இதனை அன்போடு வரவேற்பதுதானே அமைச்சர் சுவாமிநாதனின் மந்திரிக்குரிய கடமையாகும்.

இதைவிடுத்து மேசன் தொழிலாளிகள் இல்லை; மணல் தட்டுப்பாடு; வீடுகட்டுப்படவே மாட்டாது என ஓர் அமைச்சர் கூறுவது எந்த வகையில் நியாயமானது? ஆக, மாணிக்கவாசகரை அமைச்சர் சுவாமிநாதன் அறிந்திருந்தால், இப்படி எல்லாம் கதைப்பாரா என்ன?

அதிலும் ஒரு தமிழ் அமைச்சர் இப்படி நடந்து கொள்வது மிகப்பெரிய வேதனைக்குரியது. மாணிக்கவாசகருக்கு உதவ மண் சுமக்க வந்த பொன்னம்பலவாணேஸ்வரப் பெருமான், சுவாமிநாதன் போன்ற மந்திரிகளை திருத்தவும் வரவேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான வேண்டுதல்.

## மெய்வல்லுநர் போட்டி இன்று

மூளாய் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இந்து இளைஞர் மன்ற முன்றலில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்றத் தலைவர் கு.கௌரிசங்கர் தலைமையில் நடைபெறும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் பிரதம விருந்தினராகவும் முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலய ஆசிரியர் மன்ற முன்னாள் உறுப்பினர் தி.நடனசபை சிறப்பு விருந்தினராகவும் மன்ற முன்னாள் உறுப்பினரும் போஷகருமான சி.நிரஞ்சனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

## அஞ்சலியும் நினைவுரையும்

(கொழும்புத்துறை)

தந்தை செல்வாவின் 39 ஆவது நினைவுநாள் அஞ்சலியும்நினைவுரையும்நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவு இடத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தந்தை செல்வா சிலைக்கு மலர் மாலைகள் அணிவித்தலும், மலர் அஞ்சலி செலுத்தலையும் தொடர்ந்து மதத்தலைவர்களின் அஞ்சலி உரைகளும் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள், அருட்தந்தை இம்மானுவேல், செபமாலை அடிகள் ஆகியோர் அஞ்சலி உரைகளை ஆற்றுவர்.

நினைவும் பேருரையினை ரொரன்டோ வண.பிதா கலாநிதி ஏ.ஜே.சந்திரகாந்தன் ஆற்றவுள்ளார். (இ

## ரூபாய் 50 ஆயிரம் அபராதம்!

(கரணவாய்)

அனுமதிப்பத்திரமின்றி மாட்டு வண்டியில் பனை மரம் ஏற்றிச் சென்ற நபர் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் பருத்தித்துறை நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் விதிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸாரினால் கடந்த மாதம் தொடுக்கப்பட்ட குறித்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் பெருமாள் சிவகுமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (செ-5,60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தல் திருவையாறு, சாந்தபுரம், இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில ஓமந்தையிலிருந்து புளியங்குளம வரை, கொம்புவைதத குளம் இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## விளையாட்டு விழா இன்று

மருதங்கேணி பிரதேச செயலகத்தின் அம்பன் வாழ்வின் எழுச்சிசமுதாயஅடிப்படை வங்கியினால் 2016 சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு வாழ்வின் எழுச்சி சமுதாய வங்கி முகாமையாளர் கு.பாலசெல்வகி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு, பிரதேச் செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யோகவதி கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலகவாழ்வின் எழுச்சி முகாமையாளர் அ.ரவிச்சந்திரன், இளைப்பாறிய நூலகரும் சமாதான நீதவானுமாகிய ந.பத்மநாதனும் ஜே.422 கிராம அலுவலர் செ.தோமஸ் யூட்டும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

## போலித்தனங்களைப் போக்கி நண்பனைப் போன்றே அன்பை பெருக்குவோமா?

இன்று நாம் பிறரிடம் செலுத்தும் அன்பு வழியாக இறைவன்மாட்சிமை அடைய வேண்டும் என்றும், அந்த அனபிலிருந்தே பிறர் நம்மை இயேசுவின் சீடர்களாக அடையாளம் காண்பர் என்றும் கூறும் பைபிள் பகுதி எமக்குத் தரப்படுகின்றது. அனைத்து எதிர்நிலைச் சூழல்களையும் தடைகளையும் வாய்ப்புக்களாக மாற்றுவதே வரையறையற்ற அன்பின் சிறப்பாகும்.

அன்பின் பண்புகளை விளக்க இந்த சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்ம். வெளிநாட்டிலிருந்து வந்திருந்த ஒருவர் ஒரு ஆட்டோவை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, நாள் முழுவதும் ஊர்களைச் சுற்றிப்பார்த்தார். அந்தநாள் முடிவில் ஆயிரம் ரூபாவை வாடகையாகக் கொடுத்தான். ஆனால் ஆட்டோ சாரதியோ அவன் கொடுத்த பணத்தை வாங்க மறுத்து சொன்னார், ஐயா! நான் இங்கே இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்டோ ஓட்டுகிறேன். ஆனால் யாரும் என்னிடம் இவ்வளவு அனபாகப் பேசியது கிடையாது. ஆனால் நீங்களோ உங்களுடைய வாழ்க்கையில் நடந்த எல்லாவற்றையும் என்னோடு பகிர்ந்து கொண்டீர்கள். ஒரு நண்பனைப் போன்றுதான் என்னைப் பார்த்தீர்கள். ஆதலால் ஒரு நண்பராகிய உங்களிடம் நான் கட்டணம் வசூலிப்பது முறையாகுமா? என்றுசொல்லி பணத்தை வேண்டாமென்று சொல்லிவிட்டார். நாம் அன்போடு இருந்தால், நம்மைச் சுற்றி இருக்கும் உலகமும் அன்புமயமாக மாறிவிடும். அப்போது எப்படிப்பட்ட மனிதர்களும் நமக்கு நண்பர்களாகி விடுவார்கள் என்ற உண்மையை இந்நிகழ்வானது நமக்கு எடுத்துக்கூறுகிறது.

மக்களை அன்பு செய்து பணிபுரிந்து இயேசுவின் சீடர்களாக இனம் காணப்பட்ட குருக்களில் ஒரு சிலரது அன்பு வாழ்வை பற்றி இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தம். இயேசு சபை அருள்தந்தை பேத்ரோ அருப்பே ஜப்பானில் பணி புரிந்தவர்.


### பரமபிதா காட்டிய பாதை

1945ம் ஆண்டு ஒகஸ்ட் 6ஆம் திகதி முதல் அணுகுண்டு ஹிரோசிமாவை அழித்தது. 80 ஆயிரத்திற்கும் அதிகமான உயிர்களைப் பலிகொண்ட அந்த கொடுமையின்போது, அந்த நகரின் புறநகர் பகுதியில் இருந்த இயேசு சபை நவதுறவியர் இல்லம் பெரும் சேதமின்றி தப்பித்தது. அந்த இலலம் ஒரு மருத்துவமனையாக மாறியது. அங்கிருந்த சிறு கோவிலும் காயப்பட்டவர்களால் நிரம்பி வழிந்தது. அணுகுண்டு வீசப்பட்டதற்கு அடுத்த நாள் அந்த இல்லத்தின் கோவிலில் அருள்தந்தை பேத்ரோ அருப்பே திருப்பலி நிறைவேற்றினார். அந்தத் திருப்பலி நேரத்தில் அவர் அடைந்த வேதனை அனுபவத்தை இவ்விதம் கூறியுள்ளார்: 'நான் திருப்பலி நிகழ்த்தியபோது, அங்கு காயப்பட்டுக் கிடந்தவர்களைப் பார்த்து 'ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்று சொல்ல கைகளை விரித்தேன். ஆனால், அங்கு நான் கண்ட காட்சி என்னை உறைய வைத்தது. எனக்கு முன் காயப்பட்டுக் கிடந்த அந்த மனுக குலத்தை, அவர்களை அந்த நிலைக்கு உள்ளாக்கிய மனிதர்களின் அழிவுச் சிந்தனைகளை எண்ணிய போது, என் விரிந்த கைகள் அப்படியே நின்றுவிட்டன. அங்கு படுத்திருந்தவர்கள் என்னைப் பார்த்த அந்தப் பார்வை என் உள்ளத்தைத் துளைத்தது. எங்கிருந்தாகிலும் தங்களுக்கு ஆறுதல் வருமா, முக்கியமாக, இந்த பலிபீடத்திலிருந்து ஆறுதல் வருமா என்ற ஏக்கத்தை அவர்கள் பார்வையில் நான் படித்தேன். என் வாழ்வில் மறக்க முடியாத திருப்பலி அது" எனறார் அவர்.

அருள் தந்தை பேத்ரோ அருப்பே மருத்து வம் படித்தவர் என்பதால், ஹிரோசிமா தாக்குதலுக் குப்பின், நவதுறவியர் இல்லத்தில் மட்டுமல்ல, வெளியிலும் சென்று தன்னால் இயன்ற அளவு மருத்துவ உதவிகள் செய்து வந்தார்.

17ம் நூற்றாண்டில் கனடாவில் மனித உடலை, உடலின் பாகங்களை உண்ணும் பழக்கம் கொண்ட பழங்குடியினரிடையே பணி புரிந்து அவர்கள் மத்தியில் மறைசாட்சியாக உயிர் துறந்த பல இயேசு சபை குருக்களில் Isaac Jogues ஒருவர். இவர் தொடர்ந்து அன்பு செய்து பணிபுரிந்த அந்த மக்களால் சித்திரவதைகள் செய்யப்பட்டார். இந்தச் சித்திரவதைகளால் தன் கை விரல்களையெல்லாம் அவர் இழந்திருந்தார்.

இருபதாம் நூற்றாண்டில் சீனாவில் 21 ஆண்டுகள் சிறையில் பேராயர் Dominic Tang காற்று வசதி சிறிதும் இல்லாத ஒரு சிறு அறையில் ஐந்து ஆண்டுகள் தனித்து அடைக்கப்பட்டிருந்தார். பேராயர் தன் சிறு அறையை விட்டு ஒரு சில மணி நேரங்கள் வெளியே வர உத்தரவு கிடைத்தது. அப்போது சிறை அதிகாரிகள் அவரிடம், 'இந்த சில மணி நேரங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்? என்று கேட்டபோது, பேராயர் Tang அன்புக்கு இலக்கணமை செல்லிதந்த இயேசுவின் பெயரால் திருப்பலி நிகழ்த்த விரும்புகிறேன் என கூறினாராம்.



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

எனவே இன்று அன்பைக் கொண்டாடும் ஒரு திருவிழா என்றும் நாம் கூறினாலும் யாரும் மறுக்க முடியாது. ஒருவரது அன்பு வெளிப்படும்போது, அதை அனுபவிப்பதே மேல். அதற்குப் பதிலாக, அந்த அன்பு எப்படிப்பட்டது, ஏன் ஏற்பட்டது என்ற ஆராய்ச்சிகளில் இறங்கினால் அங்கு அன்பு காணாமல் போகும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. இறைவனின் அன்பு இப்படி பல கோடி மக்களின் மனதில் நம்பிக்கையை, வீரத்தை, தியாகத்தை, அனைத்திற்கும்மேலாக வரையறையற்ற அன்பின் அன்பை விதைத்துள்ளது. இந்த அற்புதத்தை மட்டும் எண்ணி இந்த நாளை நாம் பெருமையோடு கொண்டாடுவோம்.

# சண்டிலிப்பாயை வீழ்த்தி சம்பியனாகியது யாழ்.மாவட்ட கபடி அணி







யாழ்.மாவட்ட விளையாட்டு செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி சம்பியனாகியது. இப்போட்டியானது கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் சண்டிலிப்பாய் அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோதிக்கொண்டது. இப்போட்டியில் 26:00 என்ற ரீதியில் யாழ்.மாவட்ட கபடி அணி சம்பியனாகியது. (க)

# இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் தேசிய மட்ட சதுரங்கப் போட்டி



இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட இளையோர் சதுரங்கப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு றோயல் கல்லூரியில் ஆரம்பமானது.

இன்று நடைபெறவுள்ள மேற்படி போட்டியில் மாவட்ட மட்டத் தெரிவுப்போட்டிகளில் தெரிவான 2500 இற்கும் மேற்பட்டோர் விளையாடி வருகின்றனர்.

இப்போட்டிகள் 8 வயதின் கீழ், 10 வயதின் கீழ், 12 வயதின் கீழ், 14 வயதின் கீழ், 16 வயதின் கீழ், 18 வயதின் கீழ் என்ற வயதுப் பிரிவுகளில் ஆண், பெண் பிரிவுகளாக நடைபெறுகின்றன.

இப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடங்களைப் பெறுபவர்கள் ஆசிய, சர்வதேச மட்டங்களில் நடைபெறும் இளையோர் சதுரங்கப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியினைப் பெறுவர். தேசிய மட்டப் போட்டிகளில் வடக்கு மாகாணத்திலிருந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட வீரர்கள் மட்டுமே பங்குகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அரியாலை ஐக்கியம் அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி அணியும் மாலை 4.30மணிக்கு நடைபெறும் போட்டியில் பொலிகை பாரதி அணியை எதிர்த்து உடுத்துறை உதயசூரியன் அணி மோதவுள்ளது.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் மத்திய வி.க.மற்றும் இந்து இளைஞன் வி.க.மைதானங்களில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றது. (க)

பரபரப்பான சுப்பர் ஓவரில்

# வதிரி ஸ்ரீமுருகனை வீழ்த்தி அரை இறுதிக்குள் நுழைந்தது மல்லாகம் ஸ்ரீ முருகன்



புலோலி இளைஞர் விளையாட்டு கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான காலிறுதியில் சுப்பர் ஓவர் முறையில் வெற்றி பெற்று அரை இறுதிக்குள் நுழைந்து மல்லாகம் ஸ்ரீ முருகன்.

நாணயசுழற்சியில்வெற்றிபெற்ற மல்லாகம் ஸ்ரீ முருகன் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்து 10 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது.78 என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய வதிரி ஸ்ரீ முருகன் 10 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 77 ஓட்டங்களை பெற்று ஆட்டம் சமனிலை ஆனது. சுப்பர் ஓவர் முறையில் யாருக்கு வெற்றி என்பதை தீர்மானிக்க களமிறங்கிய வதிரி ஸ்ரீ முருகன் 0.5 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 3 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியமல்லாகம்ஸ்ரீ முருகன் 0.4 ஓவரில் விக்கெட் இழப்பு எதுவுமின்றி 4 ஓட்டங்களைப் பெற்று அரை இறுதி க்குள் நுழைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக தயாளன் தெரிவானார். (க)

# புலோலி இ.வி.கழக கிரிக்கெட் சுற்றுப்போட்டி



அரைஇறுதிப் போட்டியில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம். புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் அரை இறுதிப் போட்டிக்கு தெரிவாகிய சாவகச்சேரி சிவன் மற்றும் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணிகளுக்கிடையிலான போட்டி அண்மையில் நடை பெற்றது.

நாணயச்சுழற்சி யில் வெற்றி பெற்ற சிவன் வி.க அணித் தலைவர் முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தார்.துடுப் பெடுத்தாடிய மல்லாகம் ஸ்ரீமுருகனின் வீரர்கள் தடுமாற 9.3 ஓவர்களில் தனது சகல விக் கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களை பெற்றது. அதிக பட்சமாக புனிதன் 17 ஓட்டங்கள் பெற்றார்.

47 என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய சிவன் வி.க. 10 ஓவர்களில் தனது சகல விக்கெட்டுகளையும் இழந்து 32 ஓட்டங்களை பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக றகீம் தெரிவானார். (க)

# உடுவில் இளைஞர் கழக ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி

## இணுவில் கலை ஒளி சம்பியன்



உடுவில் இளைஞர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற 2016ஆம் ஆண்டுக்கான பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான விளையாட்டு நிகழ்வின் ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் சூராவத்தை நியூ வேரியர்ஸ்விளையாட்டுக்கழகத்தைவெற்றி பெற்று சம்பியன் ஆனது இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழகம். (க)

## இராகவன் ஞாபகார்த்த 'கரப்பந்தாட்ட போட்டி

மூளாய் விக்டோரி வி.க.சி.இராகவன் ஞாபகார்த்தமாக A பிரிவு அணிகளுக்கிடையில் நடத்திய கரப்பந்தாட்ட போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை மின்னொளியில் நடைபெற்றது.

முதலாவது போட்டியில் ஆவரங்கால் மத்தியஅணிடத்தூர்கலைமதி அணியை 3:0 என்ற செற்கணக்கில் வென்று இறுதிக்குள் நுழைந்தது.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2வது போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞன் அணி இளவாலை மத்திய அணியை 3:1 என வெற்றி கொண்டு இறுதிக்குள் நுழைந்தது.

இறுதிப்போட்டி எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணிக்கு நடைபெறும். (க)

## இறுதிப்போட்டியில் உதயசூரியன் வி.க.

பருத்தித்துறை இளைஞர் கழகத்தால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் தீபஜோதி அணியினை எதிர்த்து விளையாடிய உதயசூரியன் விளையாட்டு கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தீபஜோதி வி.கழகம் 5 ஓவர் நிறைவில் ஒரு விக்கெட் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உதய சூரியன் வி.க. 3.4 ஓவரில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 59 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதில் சிவகாந்தன் அதிரடியாக ஆடி 35 ஓட்டங்களை பெற்றார். நிலக்ஷன் 10 ஓட்டங்களை யும் அஜந்தன் 9 ஓட்டங்களையும் பெற்றனர். (க)

## ‘இணைந்த...

த்த வட மாகாண சபையின் தீர்மானம் ஒருதலைப்பட்சமானது என தேசியக் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களும் தமிழர்களைப் போன்று தனித்துவமான தேசிய இனம் என்பதை மறந்து தமிழ் அரசியல் தலைமைகள் நடந்து கொள்வதாக கூறிய அவர் அதிகாரப் பகிர்வில், தமிழர் தரப்பு முஸ்லிம்கள் தொடர்பாக தனித்து தீர்மானங்களை எடுப்பது, ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றும் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை அக்கரைப்பற்று நகரில் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர ஏ.எல் அதாவுலா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிரான தீர்மானம் பிரதானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அவ்வாறு இரு மாகாணங்களும் இணைக்கப்படுமாயின் சம அந்தஸ்துடையதாக தமிழர்களை பெரும்பான்மையாக கொண்ட ஒரு மாகாணமும் அதேபோல் முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட ஒரு மாகாணமும் அமையக் கூடியதாக மாகாண எல்லைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனவும் அந்தத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## இலங்.தமிழர்...

இரட்டை குடியுரிமை வழங்க மத்திய அரசை வலியுறுத்துவோம் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரசார பொதுக்கூட்டத்தில் பேசியுள்ளார்.

திருச்சியில் நேற்று நடைபெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் திருச்சி, கரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் ஆகிய 9 மாவட்டங்களை சேர்ந்த 67 வேட்பாளர்களை ஆதரித்து ஜெயலலிதா பிரசாரம் செய்துள்ளார்.

அப்போது பேசிய அவர், தமிழக அரசியலில் மாற்றம் தந்த உங்கள் வாழ்வில் ஏற்றம் தந்த இந்த அரசுதான் எனது தலைமையிலான அ.தி.மு.க. அரசு. நான் தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி தந்திருக்கிறேன்.

இதுதவிர சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளேன். மோசடியில் ஈடுபடும் தி.மு.கவை தேர்தல் ஆணையம் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தி.மு.கவினருக்கு இப்போது தோல்வி பயம் ஏற்பட்டுள்ளது.

எனது ஆட்சியில் இலங்கைத் தமிழர்களுக்கு அனைத்து விதமான உதவிகளும் வழங்கப்படுகின்றன. அகதிகளை திருப்பி அனுப்பு வதற்கு எனது அரசு எதிர்ப்பு தெரிவித்தது.

இலங்கையில் நிலைமை முழுமையாக சீரடைந்த பிறகே இலங்கைத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படவேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

இலங்கை பிரச்சினையில் தி.மு.க. நாடகம் ஆடியது. தமிழர் படுகொலைகளை தடுக்கவில்லை.

இலங்கை அரசுக்கு மத்திய அரசு ராணுவ உதவி வழங்கியதை தி.மு.க. தடுக்கவில்லை என அவர் பேசியுள்ளார். (செ-12)

## நிலாவரைக்...

இளைஞர்கள் சத்தம் கேட்டு ஓடிச்சென்று பார்த்த போது குறித்த முதியவர் நீரில் மூழ்குவதை கண்டுள்ளனர்.

மேற்படி நபர் யாழ்.பல்கலைகழகத்தின் மருத்துவ பீட தொழில்நுட்ப உதவியாளராக கடமையாற்றியுள்ளார். சடலத்தினை மீட்பதற்கு கடற்படையினரின் உதவி கோரப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4,60)

## பூசகர்களான...

யமடைந்திருந்த பூசகர்களான தந்தையும் மகனும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் தந்தையான பாலசுப்பிரமணியக் குருக்கள் (வயது 62) மற்றும் அவரது மகனான சாந்தஸ்வரூபக் குருக்கள் (வயது 25) ஆகியோரே மரணம் அடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலைவேளையில் தாம் பூசை செய்து வருகின்ற யாழ்.கந்தர் மடம் புகையிரத கடவைக்கு அண்மையில் உள்ள செம்பியன்தாழ்வு ஞானவைரவர் ஆலயத்தில் மேற்படி இருவரும் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்துள்ளனர்.

அவ்வேளையில் மகன் குப்பைக்கு மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு வைக்க முயற்சித்து போது அவர் மீது மண்ணெண்ணெய் சிதறுண்டு தீ பரவியுள்ளது. அதை கண்ட தந்தை தீயை கட்டுப்படுத்த முயற்சித்த வேளை தீ அவர் மீதும் பரவியதில் இருவரும் கடுமையான தீக் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இவர்கள் இருவருமே நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். இருவரது சடலங்களும் மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க ப்பட்டுள்ளன. (செ-4,30)

## ஒரே இரவில்...

வீடொன்றுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டின் பின்புறம் இருந்த கதவை உடைத்து கொண்டு உட்சென்றுள்ளனர். வீட்டின் உள்ளே சென்றவர்கள் வீட்டின் மின்சாரத்தை துண்டித்து விட்டு வீட்டில் இருந்தவர்கள் மீது சரமாரியாக வாள் மற்றும் கொட்டன்களால் தாக்கியுள்ளனர்.

இதனால் தலை மற்றும் உடலின் எனைய பகுதிகளில் காயமேற்பட்டு அவர்கள் உடற்பலமிழந்த நிலையில் அங்கிருந்த ஓர் இலட்சம் ரூபாய் பணத்தையும் நகைகள் சிலவற்றையும் கொள்ளையிட்டு சென்றுள்ளனர். அருகில் இருந்த வீட்டுக்காரர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் அவ்விடத்திற்கு வந்துள்ளார்.

கொள்ளையர்களை கண்ட அவர் அவர்களை மடக்கி பிடிக்க முற்பட்ட போது கொள்ளையர்கள் அவரை தாக்க முற்பட்டுள்ளனர். இதன்போது அவர் வீட்டிற்குள் சென்று தம்மை பாதுகாத்து கொள்ள ஆயுதமொன்றை எடுத்து வர செல்லவே கொள்ளையர்கள் அவரிடமிருந்த மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன் தாம் வந்த துவிச்சக்கர வண்டிகள் இரண்டை அவ்விடத்தில் விட்டுச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து அக் கொள்ளை கும்பல் சங்கானை தெற்கு பகுதிக்கு சென்று அங்கும் ஒரு வீட்டில் 85 ஆயிரம் ருபா பணத்தை கொள்ளையிட்டு சென்றுள்ளது. குறித்த வீட்டிலும் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவர்களை கொட்டன்களால் தாக்கி வீட்டில் இருந்த மேற்குறித்த பெறுமதியான பணத்தை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

எனினும் வீட்டில் இருந்தவர்கள் கொள்ளையர்களை பிடிக்க முற்பட்ட போதும் அவர்களிடமிருந்தும் கொள்ளையர்கள் தப்பி சென்றுள்ளனர். இதேவேளை சித்தனகேணி பகுதியில் அபகரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை சங்கானை யில் உள்ள வைரவர் ஆலயத்துக்கு பின்புறம் விட்டுச் சென்றுள்ளதுடன் கொள்ளைக்கு பயன்படுத்திய வாள் மற்றும் கொள்ளையர்களில் ஒருவர் அணிந்திருந்த முகத்தை மூடும் கறுப்பு துண்டு என்பவற்றை யும் கோவில் வளாகத்திலே போட்டுச் சென்றுள்ளனர்.

தொடர்ந்து சங்கானை மாவடியில் ஒரு இலட்சம் பணம் மற்றும் நகைகளை திருடிய கொள்ளை கும்பல் தொடர்ச்சியாக பண்ணாகம், வடலியடைப்பு ஆகிய பல இடங்களிலும் கொள்ளையர்கள் துணிகரமாக கொள்ளை அடித்துள்ளனர். இதில் தங்க சங்கிலி மற்றும் பெறுமதியான பொருட்கள் என்பன கொள்ளையிடப்பட்டதோடு, கொள்ளையர்கள் மேற்கொண்ட வாள் வீச்சுத் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ள வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொள்ளை சம்பவங்களில் நால்வர் கொண்ட குழு ஒன்று ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவித்துள்ளார். (செ-4,17)

# யுத்தத்தை தோற்கடித்த போதிலும் தமிழீழக் கொள்கை தோற்கவில்லை

## ஜனாதிபதி மைத்திரி மீண்டும் தெரிவிப்பு

யுத்தத்தை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சத்தத்தினால் தோற்கடிக்க முடிந்த போதிலும், தமிழீழக் கொள்கையைத் தோற்கடிக்க முடியாமற்போனதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய பல நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியாவிட்டால் நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க முடியாமற்போகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஜெனிவா பிரேரணையும் பொருளாதார நெருக்கடியுமே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலை 2 வருடங்கள் முன்னதாகவே நடத்துவதற்குப் பிரதான காரணங்களாக அமைந்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தற்போது இந்நாட்டை சிறந்த நாடாக மாற்றுவதற்கு அரசியல் கட்சியொன்று தேவை எனவும் அரசாங்கத்தை அமைப்பது பற்றிப் பேசுவது முக்கியமில்லை என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சிறந்த கட்சியாக மாற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அம்பலாங்கொடையில் இடம்பெற்ற ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி மாநாட் டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்விடயங்களைத் தெரிவித்தார். (செ-12)

# சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் என்னால் பங்கேற்ற முடியாது

## மே தின அழைப்பை மகிந்த நிராகரிப்பு

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொலைநகல் ஊடாக அழைப்பு விடுத்திருப்பதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. மாறாக கிருலப்பனையில் இடம்பெறவுள்ள ஒன்றிணைந்த எதிரணியின் மேதினக்கூட்டத்திலேயே பங்கேற்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகந்த ராஜபக்ஷ தெரிவித்தார். பத்தரமுல்லை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒன்றிணைந்த எதிரணியின் சந்திப்பொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சுதந்திர கட்சிக்குள் பிளவு ஏற்படும் வகையில் நாம் செயற்படுவதாக கூறிக்கொண்டு நல்லாட்சி அரசாங்கம் 2 பிரிவுகளாக மேதின கூட்டத்தை நடத்துகின்றது. நாம் ஒரு அணியாகவே மேதினத்தை நடத்தவுள்ளோம். ஆனால் கூட்டு அரசாங்கம் இரு பிரிவுகளாக நடத்துவது வேடிக்கையாக இருக்கிறது. காலியில் இடம்பெறவுள்ள ஶ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் மேதின கூட்டத்தில் கலந்து கொள்ள எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தொலைநகல் ஊடாகவே அந்த அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் கிருலப்பனையில் இடம்பெறும் மே தின கூட்டத்தில் கலந்துகொள்வதாகவே தீர்மானித்துள்ளேன்.

ஆனால் தற்போது மேதின கூட்டத்தில் கலந்துகொள்வதை பார்க்கிலும் நாட்டில் வேறு பிரச்சினைகள் உள்ளன. அன்று எனது காலத்தில் சுதந்திரம் இல்லை என்றும் கட்டுப்படுத்தப்படுவதாகவும் ஆட்சி மாற்றம் வேண்டும் என்று கூறிய ஊடகங்களையே கட்டுப்படுத்துவதற்கான ஒரு ஆணைக்குழு நிறுவப்படுகின்றது. அதேபோல் நான் புத்தாண்டில் தலைக்கு எண்ணெய் வைத்து குளித்த நேரம் சரியில்லை என்ற விமர்சனங்கள் எழுந்தன. அது உண்மைதான். என்னை சுற்றி தற்போது புலனாய்வுப் பிரிவினரும் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினரும் சூழ்ந்து வந்துகொண்டிருக்கின்றனர். அதனால் தொடர்ச்சியாக நிதிக்குற்றப் புலனாய்வு பிரிவுக்கு விசாரணைக்கு செல்ல வேண்டியும் உள்ளது என்றார். (செ-12)

## போர்க்குற்றச்...

இலங்கை மனித உரிமைகள் நிலைப்பாட்டில் கடந்த ஆண்டு முன்னேற்றம் கண்டுள்ளது. எனினும் ஒரு சில விடயங்களில் இன்னும் கவலைகள் நீடிப்பதாக பிரிட்டனின் வருடாந்த மனித உரிமை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப் பாட்டை வெளிப்படுத்தும் போதே சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறு கையில்,

யுத்த காலகட்ட அசம்பாவிதங்கள் மற்றும் யுத்தத்தின் பின்னரான மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேசத்தின் பார்வை இன்றும் முழுமையாக மாற்றம் காணவில்லை என்பது எமக்கு உறுதியாகத் தெரியும்.

எனினும் கடந்த காலத்தில் இருந்த நிலைமையை விடவும் இப்போது பாரிய அளவில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் அரசியல் சார் நடவடிக்கைகள் என்பன நல்ல மாற்றங்களாக அமைந்துள்ளன. அதேபோல சர்வதேச நாடுகளில் இருந்து பல்வேறு உதவிகளையும் ஆலோசனைகளையும் நாம் பெற்று வருகின்றோம். எனினும் மேலும் பல ஜனநாயக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

எவ்வாறு இருப்பினும் வடக்கு கிழக்கை பொறுத்தவரையில் மக்களின் உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கான முழுமையான சுதந்திரத்தை பலப்படுத்தியுள்ளோம். வடக்கு கிழக்கில் அநாவசியமான இராணுவ ஆக்கிரமிப்பை கட்டுப்படுத்தி பொதுமக்களின் நிலங்களை அவர்களிடம் ஒப்படைத்துள்ளோம். கருத்து சுதந்திரம் மற்றும் அரசியல் சுதந்திரத்தை கூட நாம் பலப்படுத்தியுள்ளோம். எனினும் சர்வதேச அறிக்கைகள் எப்போதும் நடுநிலையான ஒன்றாக இருக்கவோ அல்லது நிரந்தர தன்மையில் இருக்ககூடிய ஒன்றாகவோ அமையும் என எதிர்பார்க்க முடியாது. அவை சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடும்.

எவ்வாறு இருப்பினும் ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரைகளை நாம் ஏற்றுக் கொண்டு நாட்டில் சுயாதீனமான செயற்பாடுகளை பலப்படுத்தி வருகின்றோம். அதேபோல் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகளையும் மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகளின் ஆலோசனைகளையும் பெற்று அவற்றையும் கவனத்தில் கொண்டு செயற்பட்டு வருகின்றோம். இப்போது நாம் புதிதாக நல்லிணக்க பயணத்தை ஆரம்பித்துள்ள காரணத்தினால் இன்னும் சிறிது காலம் எமக்கு அவசியமாகின்றது. அதேபோல் போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் சுயாதீன விசாரணை ஆணைக்குழுவின் மூலமாக தீர்வு காணும் நடவடிக்கைகளையும் நாம் புறக்கணிக்கவில்லை.


இந்த ஆட்சிகாலம் முடியும் நிலையில் நாட்டில் பூரணமான ஜனநாயகம் பலமடைந்து நாட்டின் மீதான சர்வதேசத்தின் தவறான கண்ணோட்டம் மாற்றப்பட்டிருக்கும்.

அதேபோல் வடக்கு கிழக்கில் மட்டுமல்லாது இலங்கை பூராகவும் சகல மக்களுக்கு இன மத பேதமின்றிய வகையில் ஜனநாயக உரிமைகளை வழங்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. கடந்த காலத்தில் இடம்பெற்ற மத இன முரண்பாடுகள் மற்றும் அடக்குமுறைகளை முழுமையாக கட்டுப்படுத்தி நாம் அனைவருக்குமான பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தியுள்ளோம். அவற்றையும் சர்வதேச நாடுகள் மற்றும் சிவில் அமைப்புகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார். (செ-12)

## அடையாள...

அடையாள அட்டை ஒன்றும் வவுனியா பொலிஸாரில் மீட்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா குட்செட் வீதி அமைதி அகத்திற்கு அருகே காணப்படும் சிறிரெலோ இளைஞர் அணியின் தலைவரின் இல்லத்திற்கு முன்பாக காணப்படும் மதவுக்கு அருகே சிறிய பையினுள் சந்தேகத்திற்கு இடமான பொருள் ஒன்று இருப்பது இனம் காணப்பட்டது. அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்த நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து அங்கு காணப்பட்ட சந்தேகத்திற்கு கிடமான பையினை திறந்த பொழுது கைக்குண்டு மற்றும் அதனுள் காணப்பட்ட அடையாள அட்டை ஒன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. (செ-2,281)

CCTV
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி

CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
Job Guaranteed *
(*Conditions apply)
Next Batch: 07-May-2016
(சி-4410)
ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்)
021-4926222,076-7013060


## 18 கைத்தொலை...

டுகளைக் கட்டுப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புப் பிரிவினர் திடீர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதன் போதே மேற்படி பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் அரசியல் செல்வாக்குமிக்க ஒருவர் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவருடைய பாவனைக்காக மதுபான போத்தல்களும் சிறைச்சாலையில் காணப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தகவலை சிறைச்சாலைகள் ஆணையாளர் எச்.எம்.என்.சி.தனசீங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

சிறைச்சாலைகளில் இடம்பெறும் முறைகேடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புப் பிரிவினரின் தேடுதல் நடவடிக்கையின் போதே மேற்படி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இத் தேடுதல் நடவடிக்கை கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு நேற்று வரை இடம்பெற்றதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை மேற்படி பொருட்கள் மீட்கப்பட்ட சம்பவம் குறித்து சிறைச்சாலை அதிகாரிகளிடமும் விளக்கம் கோரப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது. (செ-4-9)


CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.


CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062
(C-4402)



## குளிக்க சென்...

ளவில் குறித்த குளத்தில் குளிக்கச் சென்ற 2-ம வட்டாரம் கைவேலி புதுக்குடியிருப்பில் வசித்து வந்தவரும் தற்போது புளியம்பொக்கணையில் வாழ்ந்து வாழ்ந்தவருமாகிய 31 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான யோகேஸ்வரன் முரளிதரன் என்ற இளம் குடும்பஸ்தரே பலியாகியுள்ளார்

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-2-281)


அதிக இலாபத்திற்கு
சிறந்த முதலீடு
ஜூஸ் மெசின்
டீ,கோப்பி மெசின்

ரூ 55,000 ற்கு மேல்

ரூ 45,000 ற்கு மேல்
max adz

Eastman
பொப்கோர்ன் மெசின்

ரூ 29,000 ற்கு மேல்
(சி-4407)
தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL (PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03



வீடு வாடகைக்கு தேவை
தாவடி, கொக்குவில் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை
தொடர்பு :
077 929 5674
(4284)



வீடுகள் தேவை
யாழ்.நகருக்கு அண்மையில் 2 வீடுகள் வாடகைக்குத் தேவை. சிறிய குடும்பம் ஒன்றுக்கும் மற்றையது அலுவலக பாவனைக்கும்.
தொடர்பு: 078 704 8800



FIRST FORM
பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவம்
24.04.2016 (ஞாயிற்றுக்கிழமை) இன்று முதல் தொடர்ச்சியாக விநியோகம் செய்யப்படும்.
(சி-4414)
பூபாலசிங்கம் புத்தகசாலை

| | |
|---|---|
| பஸ் நிலையம், யாழ்ப்பாணம். 021 222 6693 | வேம்படி சந்தி, யாழ்ப்பாணம். 021 222 1637 |




பேச, எழுத, வாசிக்க
சிங்கள மொழி கற்பிக்கப்படும்
புலமைப்பரிசில் மாணவர்களுக்கும், க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏனையோருக்கும் தனியார் கல்வி நிலையங்களிலும், வீடுகளிலும் வந்து பிரத்தியேகமாக சிங்கள மொழி கற்பிக்கப்படும். ஒரு மணித்தியாலம் - 300/=
தொடர்பு:
075 406 4454
(4286)





புதிய பிரிவுகள் ஆரம்பம்
LONDON METROPOLITAN COLLEGE
IELTS
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration
IELTS LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.
APPLIED SPOKEN ENGLISH (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)
ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோர்க்கான கற்கை நெறி
DIPLOMA IN ENGLISH
Duration: 60 hours (Week, Weekends)
COMPUTER COURSES
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing
(சி-4409)
LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road, parameswara junction, Jaffna.
HOTLINE : 0714150995 | 021 753 8395



ஆட்டத்தைப் பார்க்க ஆயத்தமாகுங்கள்!
SINGER TV20

இந்த TV20 காலத்தில் 20 TV மொடல்களுக்கு 20 அபூர்வ சலுகைகள்
இன்றே அருகிலுள்ள சிங்கர் காட்சியறைக்குச் செல்லுங்கள்!
SINGER SAMSUNG SONY TCL Skyworth HITACHI SHARP Unic
யாழ்ப்பாணம் - ஸ்ரான்லி வீதி - 021-2225408 | சங்கானை - 021-2251100 | சாவகச்சேரி - 021-2270197 | கொடிகாமம் - 774643424 | நெல்லியடி - 021-2264937 | சுன்னாகம் - 021-2240555 | மானிப்பாய் - 021-2255343
கிளிநொச்சி - 021-228-0199 | பருத்தித்துறை - 021-2263411 | முல்லைத்தீவு - 021-229-0180 | புதுக்குடியிருப்பு - 768622213 | யாழ்ப்பாணம் - ஆஸ்பத்திரி வீதி - 021 2216320
0115 400 400 singersl.com
SINGER Plus
(சி-4401)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2047 24.04.2016 தொலைபேசி : 021 222 3378
நாதம் 62



# உரிமையைக் கோருவது பிரிவினைவாதமா?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. இறைவணக்கம் என்று பண்டிதர் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**வாத்தியார்:** நாங்களும் வடக்கு மாகாண சபையைப் போல ஆலடி மாநாட்டைக் கூட்டுகிறம், பல விடயங்களைக் கதைக்கிறம். ஆனால் எந்த விமோசனமும் இல்லை.

**விதானையார்:** வடக்கு மாகாண சபையோட எங்கட ஆலடி மாநாட்டை ஒப்பிடாதீங்கோ. வடக்கு மாகாண சபையில இருக்கிற சில உறுப்பினர்கள் மாதிரி நாங்கள் என்ன வெட்டிப்பேச்சுப் பேசுறோமோ அல்லது சபையைக் குழப்புகிறோமா.

சனத்தின்ர வாக்குகளைப் பெற்று ஆசனத்தை எடுத்துப் போட்டு நக்கல் நையாண்டி. இப்படியோ நாங்கள் கதைக்கிறம்.

(விதானையார் க்டும் கோபமுற்றுப் பேசுவதை அவதானித்த பண்டிதர் நிலைமையைச் சமாளிக்க முற்பட்டார்)

**பண்டிதர்:** விதானையார் கோபப்படாதீங்கோ. வடக்கு மாகாண சபை தொடர்பில தமிழ்மக்களுக்கு ஏகப்பட்ட ஆத்திரம் இருக்குது. எங்கட முதலமைச்சருக்கு உபத்திரவம் கொடுப்பதையே தங்கட கடமையாகக் கொண்டு செயற்படுகிற வடக்கு மாகாண சபை உறுப்பினர்களை மக்களுக்கு நன்கு தெரியும்.

இருந்தும் அந்தச் சபையின்ர காலம் முடியும்வரை பொறுத்திருக்கவேண்டியது தவிர்க்க முடியாததுதானே!

**விதானையார்:** பண்டிதர் ஐயா நீங்கள் சொல்லுறது நூறுவீதம் சரி. ஆனால் வாத்தியார் ஐயா எங்கட ஆலடி மாநாட்டை வடக்கு மாகாண சபையோட ஒப்பிடக் கூடாது.

நீங்கள் கதைக்கிறது மட்டுமல்ல எங்கட தமிழ்மக்களுக்கு விடிவு கிடைக்காதவரை எந்தக் ஹோட்டல்களிலும் விருந்து உண்டு மகிழ்வதில்லை என்று முடிவு எடுத்தனாங்கள்.

அரசியல்வாதிகள் தனிய வாய்ப்பந்தல் மட்டும் போடக்கூடாது தியாகமும் செய்து காட்டவேணும். மூன்று ஆண் பிள்ளைகளை இழந்த தாய் போட்ட வாக்கில வெற்றி பெற்றுப் போட்டு ஹோட்டலில இருந்து கோழிக்கால் சாப்பிடுகிறது எந்த வகையில நியாயமாகும்.

கதைக்கத் தெரியும்; சண்டித்தனம் தெரியும் என்பதற்காக நியாயம் தெரியும் என்று நினைத்து விடக்கூடாது.

**கங்காணி:** பண்டிதர் ஐயா விதானையாற்ற கோபத்தில நியாயம் இருக்கத்தான் செய்யுது. எங்கட பாடசாலை மாணவர்களின்ர சமகாலப் போக்கை நினைக்க



எவ்வளவு வேதனையா இருக்குது. எனினும் இது பற்றி எங்கட மாகாண சபை உறுப்பினர்கள் யாராவது கவலை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

**மூப்பர்:** மாணவர்களின்ர குழப்பம் மட்டுமோ கங்காணியார். களவு, கொள்ளை, போதைவஸ்து இப்படியே எங்கட வடபகுதி அல்லோலகல்லோலப்படுகுது. ஆனால் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் இன்னமும் வடக்கு முதல்வரைக் கவிழ்த்து சிலருக்கு அபிஷேகம் செய்யவல்லோ நினைக்கினம்.

**கங்காணி:** மூப்பர் அந்த அத்தியாயம் முடிஞ்சு போய்ச்சுது. இப்ப வடக்கு மாகாண சபையும் ஒரு தீர்வுத் திட்டம் தயாரித்து இருக்கல்லோ.

**விதானையார்:** ஓமோம் தமிழ்மக்கள் பேரவை உதயமாகி தீர்வுத் திட்டம் தயாரித்ததால வடக்கு மாகாண சபையும் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தானும் தயாரித்து இருக்குது.

தமிழ்மக்கள் பேரவை என்ற மக்கள் அமைப்பு தோற்றம் பெறாவிட்டால், வடக்கு மாகாண சபை இந்த ஜென்மத்தில தீர்வுத் திட்டம் தயாரித்து இருக்குமோ!

**வாத்தியார்:** ஏன் நீங்கள் தீர்வுத் திட்டத்தை மட்டும் சொல்லுறியள். வடக்கு மாகாண சபையில முதலமைச்சரோட தனகிக் கொண்டிருந்த சில உறுப்பினர்கள் என்ன மாதிரி ஓரங்கட்டப்படுகினம் பார்த்தியளோ.

ஒரு நாடு இரு தேசம் இப்படித்தான் சபையின் தீர்வுத் திட்டம் இருக்குது எண்டு இளம் உறுப்பினர்கள் சிலர் சொல்ல,

சீச்சீ அப்படியொன்றும் கிடையாது. இது நல்ல தீர்வுத் திட்டம் என்று தவிசாளர் சிவஞானம் ஐயா சொன்னவர் அல்லோ.

**மூப்பர்:** என்ன வாத்தியார் தவிசாளர் அப்படிச் சொன்னவரோ

**வாத்தியார்:** ஏன் மூப்பர் நீங்கள் பேப்பர் பார்க்கிறதில்லையோ.

**மூப்பர்:** வாத்தியார் இன்றைக்குப் பேப்பர் பார்க்காமல் விட்டிட்டன். ஆனால் தவிசாளர் முதலமைச்சரோட முண்டினவரல்லோ. இப்ப...

**விதானையார்:** எல்லாம் வியாழமாற்றம், சனி மாற்றம் தான். தமிழ்மக்கள் பேரவைக்குப் பிறகு வடக்கு முதலமைச்சரோட இணங்கிப்போக வேணும் எண்டு சம்பந்தர் ஐயா முடிவெடுத்துப் போட்டார்.

அதால சம்பந்தர் ஐயா, தம்பி சுமந்திரன், முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோருக்கிடையில் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தும் முயற்சியள் நடந்து அதில ஓரளவுக்கு வெற்றியும் கிடைச்சிற்றுது.

இதில எங்கட சிவஞானம் ஐயாவும் முதல்வரோட ஒத்து ஓடவேணும் எண்டு முடிவெடுத்திட்டார் போல.

**பண்டிதர்:** அடக்கடவுளே. அப்ப எங்கட தம்பியவர்கள் பாவங்கள் தான். கொழும்பில இருந்து வந்த ஓடர்களை அவர்கள் அமுல்படுத்த நினைச்சாங்கள். பாவங்கள் இப்ப அவர்களையும் ஓரங்கட்டிப் போட்டு மற்றவியள் ஒன்று சேர்ந்திட்டினம் போல.

**விதானையார்:** பண்டிதர் ஐயா! எங்கட சம்பந்தர் ஐயாவைக் குறைச்சு மதிப்பிடாதீங்கோ. முந்தி சிங்கக் கொடியைப் பிடிச்ச அவர் சிங்கக் கொடி காளிக் கொடி என்றவரல்லோ.

இப்ப 2016 இல் தீர்வு எண்டு தான் சொன்னது தன்ர சொந்தக் கருத்து எண்டிட்டார் பார்த்தியளோ. அவரோட எதுவும் செய்ய முடியாது. அந்தாள் ஒரு முடிவை எடுத்தால் நிச்சயம் நிறைவேற்றியே ஆகுவார். அவற்ற முடிவின்படி இனி முதலமைச்சருக்கு கொழும்பில இருந்தோ அல்லது சபைக்குள்ள இருந்தோ எதிர்ப்புகள் வராது என்பதை மட்டும் அடித்துச் சொல்லுவன்.

தமிழ்மக்கள் பேரவையால கூட்டமைப்புக்குள்ள நிறைய மாற்றம். நல்லது நடந்தால் நல்லது தானே.

**கங்காணி:** வாத்தியார் யாழ்ப்பாணத்தில இயங்குகிற சர்வமதப் பேரவைக்குள்ள நிறையப் பிடுங்குப்பாடாம். என்ன சங்கதி?

**வாத்தியார்:** சர்வமதப் பேரவையும் இரண்டாக இயங்குதாம். கணக்கு வழக்கில நேர்மைத்தனம் இல்லை என்றும் சொல்லுப்படுது.

**விதானையார்:** வாத்தியார் நான் அறிந்த மட்டில சர்வமதப் பேரவை என்ற அமைப்பு வடபகுதியில புத்த விகாரைகளை அமைப்பதில தீவிரமாக இருக்கிறதாகக் கேள்வி. நொன் ஆர்சியைச்சேர்ந்த பாதர் ஒருவர் யாழ்ப்பாணத்தில புத்த விகாரைகளை அமைப்பதில தீவிரமாக இருக்கிறாராம்.

**மூப்பர்:** என்ன? பாதர் ஒருதர் புத்த விகாரை அமைப்பதில தீவிரமாக இருக்கிறாராமோ! இதென்ன நாசமறுந்த கதை. பாதருக்கு ஏன் இந்தத் தேவையில்லாத வேலை.

**விதானையார்:** அதுமட்டுமல்ல சர்வமதப் பேரவையில இப்ப அந்தப் பாதர் செயலாளர் இல்லையாம். இருந்தும் அவரைச் செயலாளராக்கி புதியதொரு பிரிவை ஆரம்பிக்கும் முயற்சி நடப்பதால சர்வமதப் பேரவையும் இரண்டாக உடைஞ்சு போய்ச்சுதாம்.

**பண்டிதர்:** என்ர கடவுளே! சர்வமதப் பேரவை என்ற அமைப்பு மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் என்று பார்த்தால் அந்த அமைப்புக்குள்ளேயே ஒற்றுமையில்லை எண்டால் என்ன நடக்கப் போகுதோ தெரியல்ல.

இப்படிப் பண்டிதர்கூற ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஒற்றுமைப்படாத தமிழினம் சாதிக்கப் போவது என்ன?



குருஷேத்திரம்

இனப்பிரச்சினைக்கான தீர்வு எப்போது எட்டப்படும் என்ற கேள்வி இப்போது தமிழ்மக்களிடம் பரவலாக எழுந்துள்ளது. போரில் சந்தித்த உயிரிழப்புகள், துயரங்கள், சொத்தழிவுகள் யாவும் அர்த்தமற்றதாகி போய்விடுமா என்ற தமிழ் மக்களின் ஏக்கத்திற்கு யாருமே பதில் சொல்லக்கூடியவர்களாக இல்லை என்பதுதான் இன்றைய நிலைமை.

முன்பெல்லாம் காலத்திற்கு காலம் இழப்புகளைத் தமிழ்மக்கள் சந்தித்த போது, இந்தியா உதவி செய்யும், அமெரிக்கா குரல் கொடுக்கும், விடுதலைப்புலிகள் பதிலடி கொடுப்பர் என்ற நம்பிக்கைகள் இருந்தன. ஆனால் 2009 ஆம் ஆண்டில் நடந்த இறுதிப்போருக்குப் பின்னர் தமிழ்மக்கள் அநாதைகளாகிவிட்டனர் என்பதுதான் உண்மை. யுத்தத்திற்குப் பின்பான தமிழ் மக்களின் மன உணர்வு வெறுமையாகவே இருக்கிறது. சரியான அரசியல் தலைமையில்லாமையால் தமிழ்மக்களுக்கு துரோகம் இழைக்கக்கூடியவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள் இடம் பெற்றுக் கொண்டனர்.

விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து அவர்களின் ஆசியைப் பெற்று உயிர்ப் பிச்சைபெற்ற அரசியல் தலைவர்கள் போருக்குப்பின்பு விடுதலைப்புலிகள் மீதான தமது எதிர்ப்பை வெளிப்படையாகக் காட்டத் தொடங்கினர்.

இத்தகையதொரு நிலையில் புலிகளின் கொள்கையை இன்னமும் அப்படியே ஏற்றுக்கொள்பவர்கள்; இலங்கை அரசுடன் சேர்ந்து போய் தீர்வைப் பெறுதலே சரியான முடிவு என்று நினைப்போர்; போருக்குப்பின் தமிழ் மக்களுக்குத் தீர்வு தேவையில்லை என்று கருதுவோர்; ஏற்பட்ட இழப்புக்களுக்கேனும் ஆறுதல் தரக்கூடிய வகையிலாவது தீர்வு அமையவேண்டும் என்று சிந்திப்போர் எனப் பல தரப்பினரும் உருவாகினர்.

இதில் யாருடைய தீர்மானம் சரியானது என்பதற்கு அப்பால், மேற் குறித்த தீர்மானங்களுக்கு

## வடக்கு மாகாண சபையின் தீர்வுத்திட்டம் அரங்கேறுமா?

அமைய மக்கள் கூட்டமும் பிரிந்து கொண்டனர் என்பதே உண்மையாயிற்று.

அதிலும் தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டத்தில் ஒற்றுமையாக நின்று பெரும் பங்காற்றிய எங்கள் புலம்பெயர் உறவுகளிடையே பிரிவு ஏற்பட்டதுதான் மிகப் பெரிய துரதிர்ஷ்டமாகும்.



இதனால் தமிழ்மக்களோடு சேர்ந்து நின்று துரோகம் இழைப்பவர்களை நியாயப்படுத்துவதற்கும் ஒரு பகுதியினர் இருப்பதால் தமிழினத்தின் மிக நீண்ட கால போராட்டமும் அவர்களின் தியாகமும் அர்த்தமற்றதாகிப் போகிறது.

உண்மையில் போருக்குப் பின்பான தமிழினத்தின் ஒற்றுமை மிகப் பலமாக இருந்திருக்க வேண்டும். இருந்தும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தமிழர்களை ஒன்றுபடுத்தி தனது வலிமையை அதிகரிப்பதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பு மிக வேகமாகச் செயற்பட்டதன் காரணமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழர்கள் கன்னை பிரிந்து நின்று தத்தம் பக்கமே சரியானது என நியாயப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் விளைவாக போரில் பேரிழப்புக்களைச் சந்தித்த தமிழினம் எந்தக் கிடைப்பனவையும் பெறமுடியாமல் போகிறது.

சுருங்கக்கூறின் இந்த உலகின் சமகால நிலைமையில் மிகப்பெரும் பாவப்பட்ட இனமாகத் தமிழினத்தையே கூறமுடியும். அந்தளவிற்குத் தமிழினம் இழந்ததற்கு ஏற்றதான உரிமையைப் பெறமுடியாமல் உள்ளது.

இத்தகையதொரு நிலைமை போருக்குப் பின்பான தமிழினத்தின் பிரிவால் மட்டுமே ஏற்பட்டது என்று சொல்வதற்கில்லை.

மாறாக தமிழ் அரசியல்வாதிகளும் தத்தம் இருப்பை நிலை நாட்டுவதற்காக ஆலாவர்ணம் செய்கின்றனரேயன்றி உள்ளத்தால் அவர்கள் தமிழ் மக்களின் விடிவு பற்றிச் சிந்தித்திலர்.

இவ்வாறாக சுயநல அரசியல்வாதிகளின் உருவெடுப்பும் தமிழ்மக்களின் ஏனோ தானோ என்ற போக்கும் போரில் பேரழிவைச் சந்தித்தும் யாருடைய உதவியையும் பெறமுடியாமல் போனது. இத்தகையதோர் சூழ்நிலையில்தான் தமிழ் மக்கள் அநாதைகளாக உள்ளனர் என்ற மன நிலை உருவெடுக்கிறது.

இவை ஒருபுறம் இருக்க, தமிழ்மக்கள் பேரவை வடக்கு மாகாண சபை ஆகியன தீர்வுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்துள்ளன. இதில் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத் திட்ட முன்மொழிவை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரிடம் கையளிப்பதற்கான ஏற்பாடு நடைபெறுவதான தகவல்களும் உண்டு.

வடக்கு மாகாண சபை தயரரித்த தீர்வுத் திட்ட வரைபை ஆளுங்கட்சியில் இருக்கக்கூடிய சில உறுப்பினர்கள் எதிர்த்துள்ளனர் என்பதனால் குறித்த தீர்வுத் திட்டம் தொடர்பில் எதிர்காலத்திலும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறவே செய்யும்.

இருந்தும் ஆதரித்தவர்கள் அதிகம் என்பதால் தீர்வுத் திட்டத்தை வடக்கு மாகாண சபை நிறைவேற்றியுள்ளது. இத் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றிய வடக்கு மாகாண சபை அத்தீர்வுத் திட்டத்தை சம்பந்தரிடம் கையளிப்பதோடு தனது கடமை முடிந்துவிட்டது என்று இருந்துவிடுமா அல்லது தான் தயாரித்த தீர்வுத்திட்டத்தை அமுலாக்குவதில் ஏதேனும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து அதனைச் சம்பந்தரிடம் கையளித்து விடுவதோடு எங்கள் கடமை முடிந்து விட்டது என வடக்கு மாகாண அரசு கருதுமாயின் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத் திட்டமானது தமிழ்மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டத்திற்குப் போட்டியாக- பேரவை தீர்வுத் திட்டத்தை தயாரித்து விட்டது என்ற பெயர் எடுப்பை தடுப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கைக்காகவே நோக்கப்படும்.

மாறாக வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத் திட்டத்தை அரசே அமுல் படுத்து என்ற கோசங்களுடன் அகிம்சை வழிக் கவனயீர்ப்புக்கள், தொடர் உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தப்படுமாயின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடமும் தமிழ்ப்பற்று உள்ளது என்று எடுத்துக் கொள்ளலாம்.

எது எவ்வாறாக இருப்பினும் தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து அதைச் சம்பந்தரிடம் கையளிப்பதால் சம்பந்தருக்கு சிறு மகிழ்ச்சியைக் கொடுக்கலாமே தவிர, அதனால் தமிழ்மக்களுக்கு எந்தப் பயனும் ஆகப்போவதில்லை என்பதே உண்மை.

ஆக வடக்கு மாகாண சபை தான் தயாரித்த தீர்வுத் திட்டத்தை அமுல் படுத்த என்ன செய்கிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

தீர்வுத் திட்டம் தயாரித்ததே பெரிய வேலை என்று நினைத்து பேசாமல் இருந்தால் அது தொடர்பில் தமிழ்மக்களுக்கு தகவல் கொடுப்பது ஊடகங்களின் தலையாய கடமையாக இருக்கும்.

விதுரன்




# நன்றி மறந்த சிங்கம்

முல்லை மலர் என்ற காட்டில் விறகு வெட்டு வதற்காக சென்று கொண் டிருந்தான் மனிதன் ஒருவன்.



அப்போது காட்டில் எங்கிருந்தோ சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. பயத்துடன் ஓடத் தொடங்கினான் மனிதன்.

“"மனிதனே பயப்படாதே! இங்கே வா! நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்," என்ற குரல் கேட்டது.

தயக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான் மனிதன்.

அங்கு ஒரு கூண்டில் சிங்கம் அடைப்பட்டு இருந்தது. வேட்டைக்காரர்கள் சிலர் சிங்கத்தை உயிருடன் பிடிப்பதற்காக ஒரு கூண்டு செய்து அதற்குள் ஓர் ஆட்டை விட்டு வைத்திருந்தனர். ஆட்டிற்கு ஆசைப்பட்ட சிங்கம் கூண்டிற்குள் மாட்டிக் கொண்டது.

மனிதனைப் பார்த்த சிங்கம், “மனிதனே, என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுவித்து விடு நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன்," என்றது.

"நீயோ மனிதர்களைக் கொன்று தின்பவன். உன்னை எப்படி நான் விடுவிக்க முடியும்?" என்றான் மனிதன்.

“மனிதர்களைக் கொல்லும் சுபாவம் எங்களுக்கு உண்டு தான். அதற்காக உயிர்காக்கும் உன்னைக் கூடவா அடித்துக் கொன்றுவிடுவேன். அவ்வளவு நன்றியில்லாதவனா நான்? பயப்படாமல் கூண்டின் கத வைத்திற. உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்," என்று நைசாகப் பேசியது சிங்கம்.

சிங்கத்தின் வார்த்தையை உண்மையென்று நம்பிவிட்டான் மனிதன். கூண்டின் கதவைத் திறந்தான். அவ்வளவுதான்!

நன்றி கெட்ட சிங்கம் மனிதன் மேல் பாய்வதற்கு தயாராயிற்று.

இதனைக் கண்ட மனிதன், “சிங்கமே, நீ செய்வது உனக்கே நியாயமா? உன் பேச்சை நம்பி உன்னைக் கூண்டிலிருந்து விடுவித்தேனே அதற்கு இதுதானா நீ காட்டும் நன்றி," என்றான்.

“என் உயிரைக் காத்துக்கொள்வதற்காக நான் ஆயிரம் பொய் சொல்லுவேன்.

அதை நீ எவ்வாறு நம்பலாம்? மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள் என்று தானே பொருள். அந்த அறிவைக் கொண்டு இது நல்லது, இது கெட்டது என்று பகுதித்தறிய வேண்டாமா? முட்டாள்தனமான உன் செய்கைக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?" என்றது சிங்கம்.

“கடவுள் உன்னை தண்டிப்பார். உன் உயிரை காப்பாற்றிய என்னையே சாப்பிடுவது நியாயமா?" உன்னை விடுவித்ததற்கு இம்மாதிரி நடந்து கொள்வது முறையல்ல," என்றான் மனிதன்.

அவ்வழியாக ஒரு நரி வந்தது.

“இதனிடம் நியாயம் கேட்போம்," என்று கூறிய



மனிதன் நடந் த கதையனைத்தையும் நரியிடம் கூறினான்.

“எங்கள் தொழில் அனைவரையும் அடித்துக் கொன்று சாப்பிடுவதுதான். இது இவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் கூட என்னைக் கூண்டிலிருந்து விடுவித்தான். முட்டாள்தனமான இந்தச் செய்கைக்கு உரிய பலனை இவன் அனுபவித்தே தீர வேண்டும். நீ என்ன சொல்ற நரியாரே" என்றது.

அனைத்தையும் கேட்ட நரி ஒன்றும் புரியாததைப் போல் பாவனை செய்தது.

“நீங்கள் இந்த மாதிரி சொன்னால் எனக்கு ஒன்றுமே புரியல. ஆரம்பத்திலிருந்து சொல்லுங்கள்," என்றது நரி.

உடனே சிங்கம் சொல்லத் தொடங்கியது.

“நான் அந்தக் கூண்டிற்குள் அடைந்து கிடந்தேன்"

“எந்தக் கூண்டிற்குள்?" என்றது நரி.

“அதோ இருக்கிறதே அந்தக் கூண்டிற்குள்," என்றது சிங்கம்.

“எப்படி அடைந்து கிடந்தீர்கள்?" என்றது நரி.

சிங்கம் விடுவிடுவென்று கூண்டிற்குள் சென்றது. இதுதான் சமயம் என்று கருதிய நரி சட்டென்று கூண்டுக் கதவை இழுத்து மூடியது.

“நரியாரே! இது என்ன அயோக்கியத்தனம்! நியாயம் கூறுவதாகக் கூறி என்னை மறுபடியும் கூண்டில் அடைத்துவிட்டீரே!" என்று கத்தியது சிங்கம்.

“நீங்கள் பேசாமல் கூண்டிற்குள்ளேயே இருங்கள்.

நான் ஒன்றும் இந்த மனிதனைப் போல் முட்டாள் அல்ல.

உங்களுக்குச் சாதகமாக நியாயம் சொன்னால் முதலில் மனிதனை அடித்துக் கொல்வீர்கள்.

பிறகு என்னையே அடித்துக் கொன்று விடுவீர்கள். அதனால் தான் உங்களைக் கூண்டிற்குள் செல்லுமாறு செய்து கதவைப் பூட்டி விட்டேன்," என்றது நரி.

நன்றி மறந்த சிங்கம் தன் நிலையை நினைத்து நொந்து போனது.

**குட்டீஸ் ஒருவர் செய்த நன்றியை மறப்பது மிகப் பெரிய பாவம். அப்படி செய்பவர் களை இறைவன் தண்டிக்காமல் விடமாட்டார்.**







# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532




சூர்யாவின் 24 படம் பற்றி?

மழைக்கு முன் எமது கால நிலைக்கேற்ற வீடு வருமா?

தெறி துப்பாக்கியின் வசூலை முறியடிக்குமா?

**நிதர்சன், இந்துபுரம், நந்தினி, அச்சுவேலி**

**தெறி வெற்றிப் படமா?**

முதல் ஆறு நாளில் 100 கோடி வசூல். இந்திய சினிமாவே மிரண்டு போய் இருக்கிறது.

**பிரகாஸ் — மிருசுவில்**

**திருமணத்தில் சிறந்தது காதல் திருமணம் என்கிறார்களே?**

யாரும் காதலர்கள் கட்டி விட்ட கட்டுக் கதையாக இருக்கும்.

**மீனு — மானிப்பாய்**

**பள்ளிக் காதல் நிலைக்குமா?**

அது கருவில் அழிந்து விடும் குழந்தை போல வலி அதிகம் இருக்காது. ஆனால் மறப்பதென்பது முடியாத காரியம்.
**(சொந்த அனுபவம் அல்ல)**

**திவ்வியா — மட்டுவில்**

**பாரதி கண்ட புதுமைப் பெண் பற்றி?**

சீரியல் நாடகத்தைப் பார்த்துக் கொண்டு தோசைக் கல்லை பிறவளம் வைத்து எரித்து எண்ணை பூசி தோசை சுட்டதும் கூட பரவாயில்லை அதை கணவனுக்கு கொடுக்க மளவிற்கு...

**சுஜி, பரந்தன், வினோத், கொக்குவில்**

**சூர்யாவின் 24 படம் பற்றி?**

மாசு, அஞ்சான் போன்ற தோல்விகளுக்கு முடிவுகட்ட சூர்யா எடுத்த அவதாரம். மூன்று கெட்டப்பில் அசத்துகிறார்.

**நித்திலன் — பண்டத்தரிப்பு**


**தெறி துப்பாக்கியின் வசூலை முறியடிக்குமா?**

விஜயின் சினிமா பயணத்தில் தெறிதான் அதிக வசூல் என வெளிவந்து ஆறு நாட்களுக்குள் தெரிவித்துவிட்டார்கள்.

**இந்து — சித்தன்கேணி**

**எம்.ஜி.ஆர் கண்டியிலா பிறந்தார்?**

மருத்தூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் (எம்.ஜி.ஆர்) 1917ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் திகதி இலங்கை நாவலப்பிட்டியில் பிறந்தார். தமிழ் நாட்டில் தொடர்ந்து மூன்று தடவைகள் முதலமைச்சராக இருந்து தமிழர்களின் மனங்களில் சிம்மாசன மிட்டிருந்த செம்மனச் செம்மல்.



**ரஜி — வல்வெட்டித்துறை**

**நான் மைத்திரி. ஆனால் மூன்று வாக்கியம் அமையுங்கள்?**

தமிழ், சிங்கள இனப் பிரச்சினையினை அவரைப் போல் சுமுகமான முறையில் தீர்க்க முயர்சிப்பேன்.

**பாலா — சாவகச்சேரி**

**சிவகார்த்திகேயனின் அடுத்த படம் பற்றி?**

ரஜினிமுருகன் நாயகி கீர்த்தி சுரேசுடன் இணைகிறார். படத்தின் பெயர் ரெமோ. இதில் சிவகார்த்திகேயன் தாதியப் பெண்ணாகவும் நடித்திருக்கிறார் என பேசப்படுகிறது.



**ஆசிரியர் :- ஏன்டா 20 நாளா பாடசாலைக்கு வரல?**

**மாணவன் :- எங்கப்பாதான் சொன்னாரு ஒரே இடத்துக்கு அடிக்கடி போன மரயாத கிடைக்காதுன்னு...**

**தர்சினி — விசுவமடு**

**ஒருவரைப்பற்றி இன்னொருவருக்கு தப்பா சொல்பவர்கள் பற்றி?**

அவரைப்பற்றி இன்னொருவருக்கு சொல்லுவார். மழைக்குப் பயந்து பரதேசம் போக முடியுமா? முடியாது தானே?

**தவலோஜினி — விசுவமடு**

**ஒரு பெண் இன்னொரு பெண்ணைப் பற்றி தவறாகக் கதைப்பது பற்றி?**

பெண்ணுக்கு பெண்தான் எதிரி.

**உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்**
**குறுந்தகவல் (SMS)**
**021 567 1532**

**குரு — பருத்தித்துறை**

**சூர்யாவுக்கும் விக்கிரமுக்கும் கொழுவலாமே?**

எனக்கும் என் பொண்டாட்டிக்கும் தான் கொழுவல் .அதையெல்லாம் கேட்க மாட்டீங்களா?

**முரளி — நெடுங்கேணி**

**மழைக்கு முன் எமது காலநிலைக்கேற்ற வீடு வருமா?**

நாங்கள் வேண்டாம் வேண்டாம் என்று கூற ஐயாக்கள் தருவம் தருவம் எண்டு நிற்கினம். பொருத்து வீட்டுக்கு கருத்துச் சொல்லுற வேலை எல்லாருக்கும் வந்திட்டு. கட்டிக்கொடுக்கிற வீட்டை ஒரு கண்டேனரில கட்டிக் கொடுத்தா வெள்ளம் வந்தா கொஞ்சம் தள்ளி நிப்பாட்டலாம். இது அடியேனின் பொருத்து வீட்டுக் கருத்து.

**சசி — யாழ்ப்பாணம்**

**ஒருவர் நம்மைக் காதலிக்கிறார் என்று எவ்வாறு அறியலாம்?**

அவரிடமே நேரில் போய் கேட்பது சாலச் சிறந்தது. தூதுக்கு ஆள் அனுப்பினால் தூது அனுப்பியவருடன் அவரை சேர்த்து வைக்க வேண்டும். காலம் கெட்டுப் போய்ச்சப்பா.

**நிவேத் — உடுப்பிட்டி**

**அம்மாவின் அன்பின் ஆழம் பற்றி?**

உயிர் தந்த உறவின் ஆழத்தை சொல்ல முடியாதே.

**தனு — அல்வாய்**

**மானசீகக் காதல் என்றால் என்ன?**

நாசமறுக்க இந்த மண்ணாங்கட்டி காதல் எல்லாம் மழை வந்தால் கரைஞ்சு தாவாரத்தால ஓடி றோட்டுக்குப் போய்விடும்.


**வேல்நந்தன் — புலோலி**

**அடுத்த ஆண்டிலாவது தமிழர் எம் சபதங்கள் மெய்ப்படுமா?**

முதலில் தமிழ் மக்கள் நரிகளையும் பரிகளையும் வித்தியாசம் காணப்பழகிக் கொள்ள வேண்டும். நரிகளுக்கு பட்டாபிஷேகம் செய்வதை நிறுத்தி நல்லவர்களை இனங்கண்டு அவர்களை அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்புவோம். அதன் பின் எல்லாம் சரிவரும்.



# கவிதைக் கலசம்



## அந்நிய தேசத்தில்

ஊன் ஊட்டி வளர்த்த பிள்ளை
இங்கு உறக்கம் இன்றி
உலறும் முல்லை
தோள் தூக்கி
வளர்த்த பிள்ளை
இங்கு தொலைநோக்கில்
நகரும் முல்லை
இங்கு நான் படும்
கஷ்டத்தின் எல்லை
யாரும் சொன்னதும் இல்லை
பிறிதோர் உணவு -அது
பிடிப்பில்லாத ஓர் உணர்வு
பிடுங்கி வைத்த பச்சிலை
வயிற்றை பிரட்டும்
வாய் எச்சிலை
பாசை வேறு என்
ஆசை நூறு-ஆனால்
நோக்கம் ஒன்று என்
உடல் வேகுது நின்று
கிளிப்பிள்ளையாய்
சொல்லும் போதும்
சொன்னாலும் புரியாமல்
தவிக்கிறது இம்மாது
சொந்தங்களின் நினைவு-அதை
சொல்லமுடியாத ஊமையின் கனவு
கூடிக் குலாவிய என் கூடு- இங்கு
கூடுவிட்டுக் கூடு பாய்ந்து
தவிக்கிறது இப்பேடு
நோக்கம் நினைவில்- என்
நோவான கஷ்டங்கள்
கனவில் என்றும்
நல்முத்தாய் நான் வெளிவர
என் கஷ்டங்களை
இஷ்டமாய் ஏற்பேன்
என் கல்வி ஒன்றிற்காய்...

**கிருஷிகன் பியோ**
**இளவாலை**

## என் தாய்

அவனியில் நான் வரக்
காரணம் நீதான்!
புவனத்துப் படைப்பினில்
உயர்ந்தவள் நீதான்!
விலையற்ற செல்வமே
என்னுயிர்த் தாயே!
உன் மகவுக்காய்
ஆயிரம் துயர் சுமந்தாயே!
உறவெல்லாம் உன்னால்தான்
கண்டது இங்கே
உனையன்றித் தோன்றிடும்
உயிரின மெங்கே?
உன் உயிருக்குள்- உயிர்
பிரித்து உதிரத்தில் பாலெடுத்து
பாவிநான் வாழ்ந்திருக்க- பட்டினியாய்
நீ கிடந்து
தேசமதில் குண்டுமழை
பொழிகையிலும் காத்தணைத்து!
வாழ்ந்த என் தாயை நான்
வாழ்த்திவிட வார்த்தையில்லை
ஏழல்ல ஏழுகோடி
ஜென்மங்களெடுத்தாலும்
உன் கடன் தீராது
உயிருள்ள காலமட்டும்

**கு. விபூசணன்**

## முகநூல் நட்புக்காய்

நட்பு எனும் வட்டத்தில்
முடிவில்லா
வளையங்காய்
இணைந்திருந்தோம்
முகப்பக்கத்தில்
உன் முகமும் நான்
அறியேன்
என் முகமும் நீ
அறியாய்
இருந்தும்
பேசிக்கொண்டோம்
பல வருட உறவுபோல்
பல மைல் கடந்தும்
பலமொழி கடந்தும்
பல கைகளால்
இணைந்தோம்
சில உறவுகள்
உடலைத் தாங்கும்
உயிராய்
சண்டையும்
பிடித்ததில்லை
சேர்ந்து ஊரையும்
சுத்தவும் இல்லை
இருந்தும் தோழா
கண்ணீர் கசிந்தால்
என்னை நினைத்துவிடு
ஏழுகடல்
ஏழு மலை தாண்டி
வந்திடுவேன்
உன் துயரினை
துடைத்திட
என்றும் உண்மை
நண்பனாய்

**திக்கம் மதி மதிசூடி**
**அல்வாய் வடமேற்கு**

உன்னைத் தூக்கி எறிந்தவராயினும்
அவருக்காய்
இறைவனிடம் மன்றாடு
உன் இதயத்தை
நெருடும் வார்த்தைகளை
வீசியவர்- ஒருநாள்
உன்னைப் புரிந்துகொள்வர்
தியாகங்களை
மனிதன் புரிந்துகொண்டால்
கடவுள் எதற்கு?

மாவை. நா.கஜேந்திரன்

## தமிழ்மொழி

தட்டுப்பாடு இல்லா மொழி
என் தாய் தந்த மொழி
தங்கமொழி தமிழ்மொழி
இந்த மொழி இல்லாவிட்டால்
கவிதைகளும் கானங்களும்
கரையொதுங்கிப் போயிருக்கும்
அன்னைக்கும் நான்,
பிறந்த மண்ணுக்கும்
வரலாற்றுச் சிறப்பைத்
தரும் சிறந்தமொழி
இனிமையான இலக்கணங்களும்
சுவையான கதைகள் கூறும்
கண்ணியமான கனிமொழி
வானுக்கும் எல்லையுண்டு
என் தாய் தந்த தமிழ்மொழிக்கு
எல்லையே இல்லை
இந்த மொழியால்
தொல்லையும் இல்லை

**த.டிலானி**
**மீசாலை**

# மௌனத்தின் தேடல்- 298



## வேதனை மேல் வேதனை

வரட்சியால் வாடி தாகத்தால்
தத்தளித்த பசுக்கன்றுக்கு...
இரக்கம் காட்டிய இளந்தளிரே!
வாழ்வின் உயர்வுக்கு உன்
உயர்ந்த சிந்தனை நிச்சயம்
உயர்வளிக்கும் என்பதை
புரியாத பல இளையோர்...
தவறான பாதையை நாடி
பயணிப்பது...
வேதனை மேல் வேதனை

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## அறதர்மம் எது?

வறட்சியால் வாடி வதங்கி
வாயில்லா ஜீவன்- நா
வறட்சியைத் தீர்த்திட- ஓடி
வந்ததுவே!- எம்
வறட்சி ஒரு பக்கம்
இருக்கட்டும்
வரும் அதற்கு ஈய்வதுவே
அறமாகும் அதைவிடுத்து
அதனிலும் மேலானது
எது தர்மமாகும்?

பொ.புனிதன்
வரியப்புலம்

## உதவிடும் கரங்கள்

பெண்மைக்கு உண்டு
தனிச்சிறப்பு
அது மற்றோர்
நிலைக்குள்ளாவது
உதவிக்கு இல்லை
வயதெல்லை
ஆனாலும் உதவிடும்
கரங்கள் ஒரு சிலவே
ஏட்டைத் தொடும்
பிஞ்சுக் கரங்களால்
வலிமையுடன் நீர்
இறைத்திடவும் முடியும்
உதவிடும் உள்ளம் இருந்தால்

ப.தர்சிகா
வல்வெட்டித்துறை

## கற்றுக்கொள்ளுங்கள்

ஆவின் தாகம் தீர்க்கும்- இந்த
பூவின் மனங்களிடமிருந்து
மனித நேயத்தினை
கற்றுக்கொள்ளுங்கள்

மா.செழியன்
வேலணை கிழக்கு

## மனிதநேயம்

தாகத்தால் தவித்த பசுக்கன்றுக்கு
நீர்க்குழாய் மூலம் தண்ணீர் அடித்து
உதவும் பள்ளிச் சிறுமியே
உன் மனித நேயத்தால் நீ
பார்போற்றும் நிலைக்கு
உயர்ந்து விட்டாய்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## இளமையின் காலம்

வீரமும் வீரியமும் இணைந்தது
இளைஞரின் இதயம்
இன்பமும் இனிமையும் நிறைந்தது
இளமையின் காலம்
துள்ளும் இளமையில்
துள்ளித் திரிந்திடு
துவண்டிடும் முதுமையில்
உறங்கிக் கிடந்திடுவாய்
அதை நீ இப்பவே
உணர்ந்து வாழ்ந்திடு

நா.தளையசிங்கம்
கொக்குவில்

## தாகம் தீர்ப்பார் யாரோ?

தாகத்தால் தவித்த
கன்றுக்குட்டிக்கு
தண்ணீர் கொடுத்து
தாகத்தைத் தீர்க்கின்றாள்
தங்கை ஒருத்தி- தம்
உரிமைக்காக போராடி
கிடைக்காமல் போய்
ஓய்ந்து போனவர்களின்
தீராத தாகத்தை
தீர்த்து வைப்பதற்கு
இங்கு யாருளரோ?

வை.கே.
மானிப்பாய்

## தாகத்தின் வேகம்

இளம் குருத்து
சிறுமிகளும்
இளம் பசுக் கன்றும்
தாகம் தீர்க்க தண்ணீரை
தேடி, நாடி, கூடி
நிற்கும் காட்சி!
சிறுமிகளின் உதைப்பில்
கொட்டும் சொட்டு நீரை
நா நக்கினாலும் நனையும்
எதிர்காலம் தண்ணீர்
பஞ்சம் வரலாம்!
எதிர்வு கூறும்
அனுபவக் காட்சி!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

# மௌனத்தின் தேடல் -299



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 27.04.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பிள்ளைகளைப் புத்திசாலியாக்கும் தோப்புக் கரணம்



நாமெல்லாம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதப் போகும்போது முச்சந்தி பிள்ளையாருக்கு ஒன்பது தோப்புக்கரணம் போட்டுவிட்டு போனோமே... உங்களுக்கு ஞாபகம் வருகிறதா..? இன்றும் பிள்ளையாருக்கு தோப்புக்கரணம் போடுடா... நல்லா படிப்பு வரும்னு சில தாத்தாக்கள் பேரன்களுக்கு சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

அந்த காலத்தில் பாடசாலைகளில்கூட "தூக்கம்" எனபதை "துக்கம்" என எழுதும் மக்கு மாணவர்களை தண்டிக்கவும், தப்புக் கணக்குப் போடும்மாணவர்களை திருத்தவும் வாத்தியார்கள் தோப்புக்கரணம் போட வைப்பார்கள். பெரியவர்கள் உட்பட அனைவருமே பிள்ளையார் கோயிலுக்கு போனால் முறையாக அமர்ந்து எழுந்து தோப்புக்கரணம் போடுவது வழக்கம். ஆனால் இன்று "ஃபாஸ்ட் ஃபுட்" சாப்பிடுவது போல சாமி கும்படுவதும் சுருங்கிப் போனதால் தோப்புக்கரணம் போடுவதை பலரும் விட்டுவிட்டார்கள்.

நம் பெரியவர்கள் கற்றுத் தந்த இந்த தோப்புக் கரணத்தை இன்றைக்கு வெளிநாட்டுக்காரன் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறான்.

லொஸ் ஏஞ்சல்ஸைச் சேர்ந்த மருத்துவர், எரிக் ராபின்ஸ் தோப்புக்கரணத்தை பற்றிச் சொல்லும்போது, "இந்த உடற்பயிற்சி மூலம் மூளையின் செல்களும், நியூரான்களும் தூண்டப்பட்டு சக்தி பெறுகின்றன" என்கிறார்.

அவர் தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு அந்த உடற்பயிற்சியை சிபாரிசு செய்வதாகக் கூறுகிறார்.

மேலும், தேர்வுகளில் தோல்வியடையும் மாணவர்கள் இந்த உடற்பயிற்சியை சில நாட்கள் தொடர்ந்து செய்த பிறகு, நல்ல மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றதாகவும் அவர் கூறுகிறார்.

அதேபோல யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் நிபுணரான டாக்டர் யூஜினியஸ் அங் என்பவர், "தோப்புக்கரணம் போடும் போது காதுகளைப் பிடித்துக் கொள்வதன் மூலம் மிக முக்கிய அக்குபஞ்சர் புள்ளிகள் தூண்டப்படுகின்றன" என்று சொலகிறார்.

"இடது கையால் வலது காதையும், வலது கையால் இடது காதையும் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து எழுகையில் மூளையின் இரு பகுதிகளும் பலனடைகின்றன, மூளையின் நரம்பு மண்டலம் தூண்டப்படுகிறது" எனவும் அவர் சொல்கிறார்.

அட, நாம் தப்பு செய்யும் போது நம் வாத்தியார்கள் நம் காதுகளைப் பிடித்து ஏன் திருகினார்கள், ஏன் தோப்புக்கரணம் போட வைத்தார்கள் என இப்போதுதான் புரிகிறது.

எப்போதுமே நாம் அம்மா அப்பா சொல்வதை விட அடுத்தவர்கள் சொல்வதைத்தானே கேட்டு பழக்கப் பட்டிருக்கிறோம்.

"சரி, இனிமேலாவது விநாயகர் கோயிலுக்கு போகும் போதும், ஏன் வீட்டிலே யும் கூட தோப்புக்கரணத்தை போட முடிவு செய்துவிட்டேன்.

ஆனால் எப்படி போடுவது?" என்கிறீர்களா..? உங்களுக்காக சின்ன டிப்ஸ்...

✦ தினந்தோறும் அதிகபட்சம் மூன்று நிமிடங்கள் தோப்புக்கரணம் போட்டாலே கூட போதும்.

✦ உங்கள் கால்களை உங்கள் தோள்களின் அகலத்திற்கு அகட்டி வைத்து நின்று கொள்ளுங்கள்.

✦ உங்கள் பாதங்கள் நேராக இருக்கட்டும்.

✦ வலது காதை இடது கையின் பெருவிரலாலும் ஆட்காட்டி விரலாலும் பிடித்துக்கொள்ளுங்கள்.

✦ அதேபோல் இடது காதை வலது கையின் பெருவிரலாலும் ஆட்காட்டி விரலாலும் பிடித்துக்கொள்ளுங்கள்.

✦ பிடித்துக் கொள்ளும் போது இடது கை உட்புறமாகவும், வலது கை வெளிப்புறமாகவும் இருக்க வேண்டும் என்பது முக்கியம்.

✦ மூச்சை நன்றாக வெளியே விட்டபடி, அப்படியே உட்கார்ந்து மூச்சை உள்ளே நன்றாக இழுத்தபடி எழுந்து நில்லுங்கள்.

✦ ஆரம்பத்திலேயே மூன்று நிமிடங்கள் தொடர்ந்து செய்வது கடினமாக இருப்பவர்கள் ஒரு நிமிடம், இரண்டு நிமிடம், மூன்று நிமிடங்கள் என படிப்படியாக அதிகரித்துக் கொள்ளுங்கள்.

நம் குழந்தைகளை புத்திசாலியாக்க அபாகஸ் பயிற்சி அளிக்கும் நாம், இனியாவது தோப்புக்கரணத்தை சொல்லிக் கொடுப்போம்.

-ஜூனியர் விகடன்-

---

# உலகில் ஏன் இத்தனை மதங்கள்...?

ஓஷோவிடம் ஒரு சீடர் கேட்கிறார், "எதற்கு உலகில் இத்தனை மதங்கள்?"

ஓஷோ சொல்கிறார், "இத்தனை மதங்கள் இருப்பது இயல்பானதுதான்... பார்க்கப் போனால் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மதம் இருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்டவன். பிறரிடமிருந்து வேறானவன்.

எனவே ஒவ்வொருவருக்கும் ஒரு மதம் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் கடவுளை சென்றடைய தனிப்பட்ட மார்க்கம் இருக்க வேண்டும்.

ஒரே மதத்தை ஸ்தாபிக்க முடியாது. ஒரே மதம் என்ற பெயரில் ஏதாவது ஒன்றை எல்லோர் மீதும் திணிக்கலாம். ஆனால் அவர்களுடைய ஆத்மா அழிந்து போகும்..."



எவ்வளவு ஆழமான பதில். இங்கு ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்டவன். யோசனை, செய்கை மனிதர்களுக்கு மனிதர்கள் வித்தியாசப்படும் என்னும் போது, எப்படி ஒரு மதம் மட்டும் அனைவருக்கும் பொதுவானதாக இருக்க முடியும்?

இங்கு மதங்கள் என்பது ஆறுகள் என்றால், இறை என பது கடல். இங்கு அனைத்து ஆறுகளும் கடல்களிலேயே சங்கமிக்க வேண்டும் என்பது தான் பொது விதி. ஆனால், கறைபடிந்த நம் செயல்களால, ஆறுகளை சாக்கடை ஆக்கி விட்டோம். இப்போது ஆறுகள், எங்கும் கடலில் கலப்ப தில்லை.

**அன்பு தான் இறை:**

நாம் இறை நிலையை உணர வேண்டுமென்றால், முதலில் அகவிடுதலை அடைய வேண்டும். முன் முடிவுகளு டன விடயத்தை அணுகுவதை நிறுத்த வேண்டும்.

அன்பை எங்கும் பரவவிட வேண்டும். அகவிடுதலைக்கும், புறவிடுதலைக்கும் ஒரே தீர்வு அன்பு தான். அன்பு மட்டும்தான். எல்லா பிரச்சினைகளுக்கும் அன்பினால் நாம் தீர்வை காணலாம். இதையேதான் அனைத்து மதங்களும் போதிக்கின்றன.

புத்தர் இப்படி சொல்கிறார், "இவ்வுலகில் எக்காலமும் பகைமை, பகைமையால் தணிவதில்லை. பகைமை அன்பினாலேயே தணியும். இதுவே அறநெறி."

மேலும் சொல்கிறார், "எத்தகைய நற்கருமங்களாயினும், அவையாவும் இதயத்தை திறந்து வைக்கும் அன்பிலே பதினாறில் ஒரு பகுதிக்கு கூட ஈடாகாது. இதயத்தைத் திறந்து வைக்கும் அன்பிலே அவை அடங்கி உள்ளன. அன்பு பிரகாசிக்கின்றது. அது ஒளி அளிக்கிறது" என்கிறார் புத்தர்.

இயேசுவும் இதே அன்பை தான் முன்மொழிந்தார், "ஒருவரை ஒருவர் நேசியுங்கள். நான் உங்களை நேசிப்பது போல், நீங்கள் ஒருவரை ஒருவர் நேசியுங்கள்" என்றார்.

ஆம்.. அன்பு மட்டும்தான் இங்கு பொதுமொழி. கிழக்கையும், மேற்கையும் இணைப்பது கப்பல்களும், வானூர்திகளும் அல்ல அன்புதான்.

அன்பு அமைதியை மட்டும் தராது. எப்போதும் புறச்சூழலில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் தீர்வாக இருப்பது அன்பு மட்டும்தான்.

மரத்தின் மீதான அன்பு, காடழிப்பைத் தடுக்கிறது. சக மனிதன் மீதான அன்பு, போரைத் தடுக்கிறது. நாம் நம் குழந்தைகளையும், அடுத்த தலைமுறையையும் நேசிக்கும் போது இயற்கையை சுரண்டுவதை நிறுத்துகிறோம்.

ஆம்...அன்பு மட்டும்தான் அனைத்திற்கும் தீர்வு. இந்த அன்பைதான் அனைத்து மதங்களும் போதிக்கின்றன.

ஆனால, நாம் மதத்தின் உன்னத பொருளை மறந்து விட்டு, அன்பால் ஆன மதங்களை நாமே கொன்றுவிட்டோம்.

**அன்பு எத்தகையதானதாக இருக்க வேண்டும்?**

பேருண்மையை அடைய அன்புதான் வழி என்றால், அந்த அன்பு எப்படியானதாக இருக்க வேண்டும்.

அன்பு நிர்ப்பந்தங்களும் நிபந்தனைகளும் அற்றதாக இருக்க வேண்டும்.

"அன்பு என்பது உங்களுக்கு சுதந்திரம் தரும் போது தான் நேர்மையாகிறது" என்கிறார் ஓஷோ. ஆம்..அழுத்தங்களால் நாம் வேறு ஏதோ ஒன்றை வேண்டுமானால் பெறலாம். எப்படி அன்பை பெற முடியும் ?

அன்பாக இருக்கும் மனிதனை புறச்சூழல்கள் எதுவும் தொந்தரவு செய்ய முடியாது. அன்பு நாம் நாமாகவே இருக்கும் சுதந்திரத்தை தரவல்லது.

அன்புள்ள மனிதன் தான் அன்பு செலுத்துபவர் துன்பப் படுவதை விட தான் துன்பமடைவதையே விரும்புவான. இத்தகையதாக அன்பு நம் மிடம் இருக்கும்போது, மதங்கள தேவையற்றதாக ஆகிறது.

-ஜூனியர் விகடன்-

# அனுதாபம்

## சிறுகதை

வானமெல்லாம் இருண்டுபோய், மப்பும் மந்தாரமும் கிடக்கிறது. அந்தச் சூழலைக் கண்ணுற்ற எனக்கு நெஞ்செல்லாம் கனத்து, என்னையறியாமலே கண்கள் நீரைச் சொரிகின்றன.

கடந்த கால நினைவுகளில் நான் கரைந்து போகிறேன். என் அந்தராத்மாவின் தவிப்பை இங்கு எவரும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

'அமுதாக்கண்ணு' இஞ்சை வாம்மா!

வாஞ்சையுடன் அழைத்தது எனது புது அம்மா. அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்ட நான் எழுந்து உள்ளே செல்கிறேன்.

பாலுக்கை புரோட்டீனெக்ஸ் போட்டு வைத்திருக்கிறேன். எடுத்துக் குடியம்மா.

எனக்கு வேண்டாம் முகத்திலடித்தாற்போல் பட்டெனச் சொன்னேன். அம்மா கெஞ்சினாள். நான் மிஞ்சினேன். என்னுடைய நினைவெல்லாம் அம்மாவையும் தம்பிக்குட்டியனையும் பற்றி சுற்றி வட்டமிடுகிறது. அப்பாவைப் பற்றி எனக்கு அவ்வளவாய் ஞாபகத்தில் இல்லை. அப்ப நாங்கள் முல்லைத்தீவில தான் இருந்தனாங் கள். அப்பா கடற்றொழிலுக்குப் போறவர். சில வேளை அம்மா என்னையும் கடற்கரைக்குக் கூட்டிப்போறவ. நான் மணலில கால் புதையப் புதைய ஓடி விளையாடுவன். அப்பாவின்ர வள்ளம் தொலைவில வரேக்கையே அம்மா என்னையும் தூக்கி வைச்சுக்கொண்டு கை காட்டுவா. அப்பவெல்லாம் எனக்கு கடலெண்டால் சரியான விருப்பம் இப்ப... கடலைப் பாத்தா வெறுப்புத்தான் வரும்.

ஏன் தெரியுமா? ஒருநாள் அப்பா கடலுக்கை மீன் பிடிக்கப் போயிருந்தபோது ஓரே வெடிச் சத்தமாய்க் கேட்டுது. அம்மா பயந்து கொண்டிருந்தா. எனக்கு அப்ப ஒண்டும் விளங்கேல்ல. நான் சின்னப் பிள்ளைதானே. தம்பி அம்மாவின்ர மடிக்குள்ள இருக்க...நான் அம்மாவுக்கு மேல சாய்ஞ்சு கொண்டேயிருந்து கைசூப்பிக் கொண்டிருந்தன். பிறகு நான் நித்திரையாய்ப் போயிட்டன் போல கிடக்கு.

விடிய எழும்பிப் பாத்தா....வீடு நிறையச் சனம். அம்மா மட்டும் தலையில அடிச்சு அழுது கொண்டே இருந்தா. எனக்குப் பயமாய்க் கிடந்தது. நான் பதுங்கிப் பதுங்கி அம்மாட்டைப் போனன். என்னைக் க்ண்ட உடன அம்மா கத்தத்துவங்கீட்டா.


'அமுதா! உன்ரை அப்பா செத்துப் போயிட்டாரடி'

என்னை இறுக்கி கட்டிப்பிடிச்சு அழுதா. எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல. பயந்து வெருண்டு போய் நிண்ட என்னையும் தம்பியையும் பாமா மாமி தன்ரை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய் சாப்பாடு ஊட்டி விட்டா. எனக்கு அப்பாவைப் பற்றி அவ்வளவு ஞாபகம் தான் இருக்குது.

ஆனா....அம்மாவையும் தம்பியையும் பற்றி நிறையவே ஞாபகம் வருகுது. நான் பள்ளிக்கூடம் போட்டு வந்து தம்பியனோட விளையாடுவன். அம்மா மீன் வியாபாரம் செய்துதான் எங்கள் ரெண்டு பேரையும் வளர்த்தவ. அம்மா கஷ்டப்படுறதை நான் கண்ணால கண்டனான். அதனால அம்மா எண்டா எனக்கு அவ்வளவு விருப்பம் பிறகு சண்டை துவங்க நாங்களும் சனத்தோட சனமாய் இடம்பெயர்ந்து ஆனந்தபுரம் வரைக்கும் வந்தம். அம்மா தான் கஷ்டப்பட்டாலும் எங்களைப் பட்டினியாய்க்கிடக்க விடமாட்டா. கஞ்சியாவது காய்ச்சித்தருவா. நானும் தம்பியும் குடிச்சிட்டு பங்கருக்கையே இருப்பம். ஒருநாள் பாமா மாமி வந்தவ. என்னையும் தன்ரை கூடாரத்துக்கு கூட்டிக்கொண்டுபோனவ குண்டுமழைக்குள்ளபயந்துகொண்டே போனம். மாமி எங்களுக்கெண்டு கொஞ்சச் சாமான்கள் தந்து விட்டவ. எல்லாம் சாப்பாட்டுச்சாமான் தான். தேங்காய் ,மா,பருப்பு எண்டு தந்தவ. அவையின்ரை வீட்டை சாப்பிட்டிட்டு நான் எங்கட கூடாரம் இருந்த இடத்துக்கு நடந்து போய்க் கொண்டிருந்தன்.

பகல் நேரமெண்டபடியால் குண்டுச்சத்தம் கேட்டாலும் மரங்களுக்குக்கீழே படுத்துக்கிடந்திட்டு எழும்பி நடக்கத்தொடங்கினேன். திடீரென்று வானத்தில பெரிய ஆரவாரம். படபடவெண்டு குண்டுகள் கொட்டும் சத்தம் கேட்டுது. நான் பதுங்கிக் கொண்டன், எங்கட வீடு இருந்த பக்கமாய் ஒரே புகை மண்டலமாய்க் கிளம்பிச்சுது. நான் பயத்தில அழுதுகொண்டே போனன். சத்தம் கேட்டதும் பாமா மாமி பின்னால ஓடி வந்திருக்கிறா.

எங்கட கூடாரங்கள் இருந்த பக்கத்தில எதுவுமே மிஞ்சவில்லை. பொருட்கள் மட்டுமல்ல. ஆட்களும் தான். பாமா மாமி என்னையும் தங்களோட கூட்டிக்கொண்டு வந்திட்டா. இடைத்தங்கல் முகாமில கொஞ்சநாள் இருந்தம். பிறகு யாழ்ப்பாணத்துக்கு வந்திட்டம். அம்மாவும் தம்பியும் என்ரை நெஞ்சுக்குள்ளேயே இருக்கினம். அவையை நினைச்சு நான் அழாத நாளே கிடையாது. எனக்கு இருந்தாப்போல உடன அம்மாவையும் தம்பியையும் பார்க்க வேணும்போல ஒரு வெறி வரும். அப்பிடியான நேரத்தில் நான் என்ன செய்யிறன் எண்டு எனக்கே தெரியாது.



இந்தப் புது அம்மாவும் அப்பாவுமாய் வந்து பாமா மாமியிட்டை எவ்வளவோ கெஞ்சித்தான் முறையாய் என்னைத் தத்தெடுத்தவை. புது இடத்திலையாவது நான் சந்தோஷமாய் இருக்கட்டும் எண்டு மாமி நினைச்சுக்கொண்டு என்னை அனுப்பிவைத்தா. ஆனால் நான் நானாக இல்லை. என்ரை ஏக்கம் மட்டும் பெரிசாகிக்கொண்டே வருகுது.

'இஞ்சை பாருங்கோ. அமுதா பாலைக் குடிக்கிறா இல்லை'

அப்பா கிட்ட வந்து என்னை த்தடவி சமாதானப் படுத்தினார்.

'அமுதாச் செல்லம். பாலைக் குடியம்மா. பிள்ளை பாலெல்லாம் குடிச்சு நல்ல உஷாராய் இருந்தால்தானே வரப்போற வகுப் பேற்றச் சோதினையில நல்ல றிசல்ற் எடுக்கலாம்.

அப்பா சொன்னது எனக்கு சரியென்றே பட்டது. உடனே அவர் கையில் எடுத்துத்தந்த பாலை வாங்கி மடமடவென்று குடித்தேன்.

எனக்கு எங்கட அம்மா நுரை பொங்கப் பொங்க பால் ஆத்தித் தாற ஞாபகம் வந்திட்டுது. எங்கட லெட்சுமிப்பசுவில அம்மா பால் கறப்பா. நான் கன்றுக்குட்டியைப் பிடித்துக் கொண்டு லெட்சுமிக்கு முன்னால் நிற்க அது நாக்கினால் கன்றுக்குட்டியை நக்கிவிடும். எனக்கு இப்ப மனசுக்குள்ள ஒரு குற்ற உண ர்வு வருகுது. கன்றுக் குட்டியை தாயி ட்ட பால் குடிக்க விடாமல் பிடிச்சு வைச்சதுக்குத்தான் கடவுள் என் னட்ட இருந்து அம்மாவைப் பிரி ச்சுப் போட்டாரோ.

'என்னடா குஞ்சு' ஏன் இப்ப கண்கலங்குறீங்க? பிள்ளைக்கு என்ன வேணும் அப்பா கேட்ட கேள்வி எனக்கு எரிச்சலைத் தந்தது.

என்னுடைய அம்மாவைக் கொண்டு வாங்கோ எண்டு கேட்டால் இவரால தரமுடியுமோ?

பேசாமல் நான் போய் புத்தகங்களை அடுக்கினேன். அம்மா வெள்ளைச் சட்டை அயன் பண்ணி வைச்சிருந்தா போட்டுக்கொண்டு நான் வெளிக்கிட அப்பா வந்து எட்டிப் பார்த்தார்.

'இஞ்சாரும் கலா. நான் கொழும்பில இருந்து வ்ாங்கிக்கொண்டு வந்த சப்பாத்தை எடுத்துப் பிள்ளையிட்டைக் குடுமன்'

'சப்பாத்துப்போட அவவுக்கு கால் வலிக்குதாம்'

அம்மா சொல்லி வாய்மூட முந்தி வீட்டுக்குள் இருந்து ஒரு குரல் கேட்டது.

'செத்தையில கிடந்த பல்லி யைக் கொண்டு வந்து மெத்தையில வைச்சால் அது என்ன செய்யும். செத்தையைத் தானே நாடும்'

அது அம்மம்மா. புது அம்மாவின் தாய். அவவுக்குத் தன்னுடைய மற்றைய மகளின் குழந்தைகளில் ஒன்றைத் தத்தெடுத்திருக்கலாமே யென்ற தவிப்பு. அப்பாவுக்கு முகமெல்லாம் சிவந்து போச்சுது.

'இஞ்சாரும் கலா. கொம்மா விட்டைச் சொல்லும். தேவையில்லாமல் என்ரை கோபத்தைக்கிளற வேண்டாமென்று'

அப்பா என்னுடைய காலில் இருந்த புண்ணுக்கு மருந்து தடவி பிளாஸ்ற்றரும் போட்டுவிட்டார். நான் செருப்பைக் கொளுவிக்கொண்டு பாடசாலைக்குப்புறப்பட்டன். அப்பா மோட்டார் சைக்கிளிலை கூட்டிக்கொண்டு போனார்.

'பிள்ளை அண்டைக்கு நல்ல ஸ்மார்ட்டாய் இருந்தவள். அதுதான் யாரோ கண் வைச்சிட்டினம். இண்டைக்கு திருஷ்டி சுத்திப் போடவேணும்.'

பிள்ளையில்லாத தவிப்பு அவளுக்கு என்மேல் கரிசனையாய் வழிந்தது. பள்ளிக்கூடத்தில முதல் பாடம் கணிதம். டீச்சர் கணக்குகளை விளக்கப்படுத்திப்போட்டு சில கணக்குகளைச் செய்யுமாறு தந்தவ. சில பேருக்கு முழுதும் சரியெண்டு முதுகில தட்டி விட்டவ. சிலபேருக்கு பிழைகள் ஒன்றிரண்டு இருந்ததென்று அடியும் விழுந்தது. எனக்கு எல்லாம் பிழையென்று நல்லாய்த் தெரிஞ்சு போச்சு. ஏனென்றால் அவ விள ங்கப்படுத்தும் போது என்னுடைய நினைவெல்லாம் எங்கேயோ போட்டுது. டீச்சர் கூப்பிட்டா போனேன். அடி விழப்போகுதென்று தான் நினைச்சன். ஆனால் டீச்சர் மெதுவாக என்னுடைய முதுகைத்தடவி அமுதா! வீட்டில கேட்டுப்படிக்க வேணும் என்ன! என்று மட்டும் சொன்னா. அதோட அவ வகுப்புப் பிள்ளைகளைப் பார்த்துச் சொன்னா.

பிள்ளைகள் நீங்கள் அமுதா மேல அனுதாபம் காட்டவே ணும். அவ அப்பா, அம்மா இல்லாத பிள்ளை. அவவின்ரை மனநிலை பாதிக் கப்பட்டிருக்கும். நாங்கள் அவமீது காட்டுற அன்பினால தான் அவவை சகஜநிலைக்குக் கொண்டு வரமுடியும்.

எனக்குத் தலையெல்லாம் விறைக்குது. கை, காலெல்லாம் குறண்டுற மாதிரி இருக்குது. எதையாவது பிடிச்சு நசுக்க வேண்டும் போல இருக்குது. இந்த உலகத்தில எல்லாரையும் போலத்தான் நானும் இருக்க வேணும். அனுதாபம் காட்டுறது என க்குப் பிடிக்காது.

ஏன் ஒருத்தருக்கும் இது புரியுது இல்லை.

லஞ்ச் டைம் வந்தது. புது அம்மா இடியப்பத்துக்குள்ள முட்டைப் பொரியலைப் பிரட்டிக்கட்டித் தந்திரு ந்தா. எனக்குத் தம்பியின்ரை நினைவு வந்திட்டுது. எங்கள் இரண்டு பேருக்கும் அம்மா பழஞ்சோத்துக்குள்ள தயிரைப் போட்டுக்குழைச்சுத் தருவா. நாங்கள் ஆசையாய்ச் சாப்பிடுவம். எனக்குச் சாப்பிடவே பிடிக்கவில்லை. லஞ்ச் பொக்ஸ்ஸை மூடி வைச்சிட் டன்.

பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வர அம்மாவும் அப்பாவும் பதறிப் போச் சினம் ஏன் குஞ்சு சாப்பிடேல்ல அப்பா கேக் தீத்தி விட்டார். அம்மா தேநீர் பருக்கி விட்டா. அப்பா எனது தலையைத் தடவி விட்டார்.

எங்கட குஞ்சு அதை இதையெல்லாம் யோசிச்சு மனதைக் குளப்பக் கூடாது. படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவேணும். பிள்ளை படிச்சு ஒரு டொக்டராய் வரவேணும் எண்ட எண்ணம் மட்டும்தான் மனத்தில இருக்கவேணும்.

நான் தலையை மட்டும் ஆட்டினேன். அம்மா வந்தாள்.

நான் சொல்லுறனெண்டு பாருங்கோ. நிச்சயமாய் எங்கட பிள்ளை ஒரு டொக்டராய் வருவாள்.

அம்மா சொன்னது எனக்கு உற்சாகத்தைத் தந்தது. கவனமாய்ப் படிக்கத் தொடங்கிவிட்டேன். கண்டபடி அழுவதும் இல்லை.

அன்று சனிக்கிழமை அப்பா மார்க்கெற்றுக்குப் புறப்பட்டார். நான் கேற்றைத் திறந்துவிட் டேன். தெருவில் ஒரு ஆடும் இரண்டு குட்டிகளும் நின்றன. குட்டிகள் தாய் ஆட்டில் பால் குடிப்பதும் துள்ளித் திரிவதுமாய் இருந்தன. தாய் ஆடு திறந் திருந்த கேற்றினூடாக வளவிற்குள் புகுந்தது. நான் கேற்றைச் சாத்தி விட்டேன். குட்டிகள் வெளியில் நின்று கத்திக்கொண்டி ருந்தன. எனக்கு மனம் பூரித்துப்போனது கைதட்டிச் சிரித்தேன்.

'பளார்!'

கன்னம் பளாரிட்டது. திடுக்கிட்டுப் போனேன். அம்மா ருத்திர காளி யாக நின்றிருந்தாள்.! நான் எங் கையெல்லாம் தேடி நிறம் நிறமான செவ்வரத்தைகளை வாங்கி வந்து நட்டுவைக்க ஆட்டை விட்டு மேய வைக்கிறியோ?

'அம்மா!' என்று கத்தினேனே தவிர அழவில்லை. அம்மாவும் தன் நிலையை உணர்ந்து கொண்டவளாய் ஸாரி ஸாரிடா கண்ணு மன்னிப்புக் கேட்டாள். எனக்கு இன்று தான் பூரண நிம்மதி கிடைத்தது. ஏன் தெரியுமா? என்தாபம் இது தான். என்னை அனுதாப ப் பார்வை பார்க்காமல் மற்றவர்களைப் போல் உரிமையுடனும் கண்டிப்புடனும் நடத்த வேண்டும் என்ற என் தாபம் தீர்ந்தது.

**மலரன்னை**

‘எனக்கு மிகவும் போர் அடிக்கிறது. வாழ்க்கையில் ஏதோ ஒன்றைச் சாதிக்க வேணடும் என்று தோன்றுகிறது’ என்று 3 குழந்தைகளின் தாயான, 38 வயது ஜெர்ரி கேட்டபோது, அவரது கணவர் மோக் சிரித்து விட்டார். ‘ரொம்ப போர் அடித்தால் உலகத்தை வேணுமென்றால் சுற்றி வாயேன்’ என்று கிண்டல் செய்தார். ‘அட... எவ்வளவு அருமையான யோசனை சொல்லியிருக்கீங்க! இனி உலகத்தைச் சுற்றி வருவதுதான் என் லட்சியம்’ என்றார் மகிழ்ச்சியுடன் ஜெர்ரி!



# கடல் தாண்டி... கண்டம் தாண்டி... தனியே...தன்னந்தனியே!

ஜெர்ரி மோக்


விமானத்தில் பறக்க வேண்டும் என்ற ஜெர்ரியின் ஆர்வம் இன்று வந்ததல்ல. அவருக்கு 7 வயதிலேயே அப்பாவுடன் காக்பிட்டில் அமர்ந்து பயணம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. விமானப் பயணத்தின் மீது எல்லை இல்லாத ஈடுபாடு வந்தது. பள்ளிப் படிப்பை முடித்தவுடன் ஏரோனாட்டிகல் பொறியியல் படிப்பில் சேர்ந்தார். அந்தக் காலத்தில் பெண்கள் பொறியியல் படிப்புகளில் நுழையவில்லை. முதல் மாணவியாக ஜெர்ரி சேர்ந்தார். படிப்பை முடிப்பதற்குள் 20 வயதில் அவருக்கு ரஸ்ஸல் மோக்குடன் திருமணம் நடைபெற்றது. படிப்பைத் தொடர முடியவில்லை. சமையல், இசை, பயணம் என்று அவரது விருப்பங்கள் மாறின. 18 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அந்த ஆசை துளிர்த்தது.

ஜெர்ரியும் ரஸ்ஸலும் விமானிக்கான பயிற்சி வகுப்புகளுக்குச் சென்றனர். பயிற்சி முடித்த பிறகு சொந்தமாக ஒரு பழைய விமானத்தை வாங்கினர். விடுமுறை நாட்களில் விமானத்தல் பயணித்தனர். ஒரு முறை ஜெர்ரி விமானத்தை ஓட்டிச் சென்றார். அவருக்குத் தன்னம்பிக்கை அதிகரித்தது. தனயாளாகவே உலகத்தைச சுற்றி வர முடிவு செய்தார். கடுமையாகப் பயிற்சிகள் செய்தார். ரஸ்ஸல் பயணத்துக்கான நிதியைத் திரட்டினார். ஓராண்டு பயிற்சிக்குப் பிறகு ஜெர்ரியின் பயணம் இறுதிக் கட்டத்தை அடைந்தது. 19 இடங்களில் தரை இறங்குவதற்காக வரைபடம் தயாரிக்கப்பட்டது. தரை இறங்கக்கூடிய நாடுகளுக்குத் தகவல் சொல்லப்பட்டது.

1964 மார்ச் 19ஆம் திகதி ‘ஸ்ப்ரிட் ஆஃப் கொலம்பஸ்’ என்று பெயரிடப்பட்ட விமானத்தில் கிளம்பினார் ஜெர்ரி. மோக் மற்றும் குடும்பத்தினர் உற்சாகமாக அனுப்பி வைத்தாலும் சிறிது அச்சம் இருந்தது. 27 ஆண்டுகளுக்கு முன் அமெலியா எர்ஹார்ட், நூனன் என்பவருடன் சேர்ந்து உலகைச் சுற்றி வரும் பயணத்தை மேற்கொண்டார். ஆனால், அவர் திரும்பிவரவே இல்லை. சாதனை பற்றி எல்லாம் அவர்கள் கவலைப்படவில்லை. ஜெர்ரி பத்திரமாகத் திரும்பி வந்தால் போதும் என்று நினைத்தார்கள். பத்திரிகைகள் எல்லாம், ‘இல்லத்தரசியின் உலகப் பயணம்’ என்ற தலைப்பில் செய்தியை வெளியிட்டன.

‘ஆதிக்கப் போட்டியில் யுத்தம் என்ற பெயரில் சக மனிதர்களைக் கொன்று குவிக்கும் இந்த பூமி, வானில் இருந்து பார்க்கும்போது எவ்வளவு அமைதியாக இருக்கிறது! பயிற்சிகளின் போது கடல் மீது பயணம் செய்ததில்லை. ஆனாலும், பயம் ஒன்றும் இல்லை’ என்று தன்னுடைய நோட்டில் குறித்துக்கொண்டார் ஜெர்ரி. பஹாமஸ், மொராக்கோ, அல்ஜீரியா, லிபியா, எகிப்து, சவுதி அரேபியா, பாகிஸ்தான், இந்தியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் என்று ஏற்கனவே திட்டமிட்டபடி நாடுகளுக்குச் சென்று, தரை இறங்கினார். கணவருக்கும் ஸ்பான் சர்களுகதும் தகவல்களைத் தெரிவித்தார். அதிகாரபூர்வமாக ஒவ்வோர் இடத்திலும் தன் வருகையைப் பதிவு செய்தார். திரும்பும் வழியில் மோசமான வானிலை. எல்லாவற்றையும் சமாளித்து, ஏப்ரல் 17 அன்று கிளம்பிய இடத்திலேயே தரை இறங்கினார். ஆயிரக்கணக்கானவர்கள் அவரை வரவேற்கக் காத்திருந்தனர்.

ஒரே எஞ்ஜினில் தனியாளாக உலகைச் சுற்றி வந்த முதல் பெண் என்ற சாதனையை நிகழ்த்தியிருந்தார் ஜெர்ரி. அவருக்கு முன் உலகைச் சுற்றி வந்த ஜோன் ஸ்மித், அதிகாரபூர்வமாகத் தன் சாதனையைப் பதிய வைக்கவில்லை. அதனால், ஜெர்ரி உலகைச் சுற்றி வந்த முதல் பெண் என்ற பெருமையைப் பெற்றார். 37 ஆயிரத்து 180 கி.மீ தொலைவை 29 நாட்களில் கடந்திருந்தார் ஜெர்ரி. தனியாக உலகத்தைச் சுற்றி வர ஏன் முடிவு



செய்தீர்கள் என்ற கேள்விக்கு, ‘பெண்கள் தனியாக உலகைச் சுற்றி வர வேண்டிய காலகட்டம். அதனால் இந்தப் பயணத்தை மேற்கொண்டேன்’ என்றார் ஜெர்ரி.

52 ஆண்டுகளுக்கு முனபு தனியாக உலகைச் சுற்றி, சாதனை செய்திருந்தாலும் அவரிடம் அதிகம் கேட்கப்பட்ட கேள்விகள் இவைதான் ‘உங்கள் வீட்டை ரஸ்ஸல்தான் சுத்தம் செய்தாரா? குழந்தைகளை அவர்தான் கவனித்துக்கொண்டாரா? இல்லத்தரசியான நீங்கள் எப்படி 3 குழந்தைகளை விட்டுவிட்டு, பயணம் மேற்கொண்டீர்கள்?’ ஜோன் ஸ்மித்துடன் ஒப்பிட்டு, தன்னுடைய பயணத்துக்கு ரஸ்ஸல் கொடுத்த அழுத்தத்தை ஜெர்ரியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சாதனைக்காகவோ, ஏற்கனவே சாதனை செய்தவர்களை முறியடிக்கவோ ஜெர்ரி இந்தப் பயணத்தை மேற்கொள்ளவில்லை. தனியாக ஒரு பயணம் மேற்கொள்ள முடிவு செய்தார், வெற்றிகரமாக முடித்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். அவ்வளவு தான்!

அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் பி.ஜான்சன் விருதும் விருந்தும் கொடுத்து ஜெர்ரியை கௌரவித்தார். ஸ்பான்சர்களின் கடனை அடைப்பதற்காக சில கூட்டங்களில் கலந்துகொண்டு, தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார் ஜெர்ரி. மற்றப்படி அவருக்கு இந்தப் பயணம் மூலம் கிடைத்த புகழையும் செல்வாக்கையும் அவர் பயன்படுத்திக் கொள்ளவும் தக்க வைத்துக் கொள்ளவும் விரும்பவில்லை. சில ஆண்டுகளுக்குப் பிறகு, பயண அனுபவங்களைப் புத்தகமாக வெளியிட்டார். எகிப்தில் அனுமதிக்கப்படாத இடத்தில் தரை இறங்கியிருக்கிறார், இன்று கூட பெண்கள் வாகனங்கள் ஓட்டுவதற்கு நிறைய கட்டுப்பாடுகள் விதித்திருக்கும் சவுதி அரேபியாவுக்கு விமானத்தை ஓட்டிச் சென்றிருக்கிறார்! பெரும்பாலான இடங்களில் ஆண்கள் அவரது முயற்சியை கண்டு கொள்ளவில்லை. உலகத்தையே சுற்றி வந்தாலும் உலகத்தை முழுவதுமாகப் பார்க்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உலகைச் சுற்றி வரும் முயற்சியில் தோல்வியடைந்து, உயிரிழந்த அமெலியா எர்ஹார்ட் இன்றுவரை உலகம் முழுவதும் கொண்டாடப் படுகிறார். வெற்றிகரமாக உலகைச் சுற்றி வந்த முதல் பெண் ஜெர்ரியோ, அவர் விருப்பம் போலவே விரைவில் உலகத்தின் கவனத்தில் இருந்து மறைந்து போனார். குடும்பப் பொறுப்புகளைக் கவனித்துக்கொண்டார். ரஸ்ஸல் விவாகரத்துப் பெற்று வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். ஆனாலும், ஜெர்ரியிடம் தொடர்பல் இருந்தார். தனிமையை அதிகம் விரும்பும் ஜெர்ரி மகன்மாருடன் வசித்து வந்தார். அடுத்தடுத்து 2 மகன்களும் இறந்து போன பின்னர், மகளுடன் வசித்தார். ஜெர்ரிக்கு பக்கத்து வீட்டில் இருப்பவர்களுக்குக் கூட, அவர் உலகைச் சுற்றி வந்த சாகசக்காரர் என்ற விடயம் தெரியாது! ஜெர்ரியின் சாதனையான50ஆவதுஆண்டை விமரிசையாகக் கொண்டாட விரும்பினார் அவரது மகள். எந்த நிகழ்ச்சிக்கும் ஜெர்ரி அனுமதி கொடுக்கவே இல்லை. அவர் சாதனைக்காக இலவச விமானப் பயணங்களையும் அவர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தன் சாதனைக்காக சிலை வைப்பதற்கும் தன்னைப் புகைப்படங்கள் எடுப்பதற்கும் அவர் அனுமதிக்கவில்லை.



“ஒரு எளிய இல்லத்தரசி உலகைச் சுற்றி வந்த சாதனை சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்கு உதாரணம் என்று சொல்லப்பட்ட போது ஜெர்ரியின் கண்கள் பனித்தன.”

கடைசியில் பேரக் குழந்தைகளின் முயற்சியால் ஒரு சிலை திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. ஸ்கைப் மூலம் அதைப் பார்த்தார் ஜெர்ரி. ‘ஒரு எளிய இல்லத்தரசி உலகைச் சுற்றி வந்த சாதனை, சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்கு உதாரணம்’ என்று சொல்லப்பட்டபோது, ஜெர்ரியின் கண்கள் பனித்தன. ஜெர்ரி செய்தது ஒரே ஒரு பயணம்தான். ஆனால், அதில் 7 உலக சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார்! உலகைச் சுற்றி வந்த முதல் பெண், ஒரு எஞ்ஜினில் சுற்றி வந்த முதல் பெண், அமெரிக்கா-ஆபிரிக்கா வழியாக வட அட்லாண்டிக்கில் பறந்த முதல பெண், பசுபிக்கைக் கடந்த முதல் பெண், பசுபிக்கில் கிழக்கிலும் மேற்கிலும் பறந்த முதல் பெண், அட்லான்டிக், பசுபிக் இரண்டு கடல்களையும் கடந்த முதல் பெண், பசுபிக் கடலில் அனைத்து திசைகளிலும் பறந்த முதல் பெண் என்று ஏராளமான சாதனைகளுக்கு சொநதகாரரான ஜெர்ரி மோக்2014 ஆம் ஆண்டில் 88 வயதில் உலகை விட்டு பிரிந்தார்.

## ஆடுறா ராமா!

கையில் நீளமான குச்சியை வைத்துக் கொண்டிருந்த குரங்காட்டி,

“இலங்கையை தாண்டுறா ராமா, தாண்டுறா ராமா......” என்று ஆணையிட்டான். குச்சியை கடலாக நினைத்து தாண்டியது குரங்கு.

ஆடுறா ராமா ஆடு! குட்டிக்கரணம் போடுறா ராமா... போடு தரையில் உருண்டு உருண்டு கரணம் போட்டது.


அட! இவன் சொல்றதை எல்லாம் கேட்டு அப்படியே நடக்குதே!” என்று வியந்தார்கள்.

கடைசியாக அதன் கையில் ஒரு அலுமினிய தட்டைக் கொடுத்த ” குரங்காட்டி காசு போடுவாங்க,போய் வாங்கி வாடா ராமா” என்றான். தட்டை தூக்கிக்கொண்டு சுற்றி வந்தது குரங்கு.

“அடேயப்பா! இவன் இதை என்னமாய் ஆட்டிப் படைக்கிறான்! இவன் சொல்றதுக்கு இது மறுப்பே காட்டலை!” சில்லறையைப் போட்டபடி கலைந்தது கூட்டம்.சேர்ந்ததைப் பையில் போட்டுக்கொண்டு குரங்கைத் தோளில் சுமந்தபடி வீடு போய்ச் சேர்ந்தான் குரங்காட்டி.

பணத்தை எண்ணிப் பார்த்த அவன் மனைவி கோபமுடன் கத்தினாள். “இந்தப் பத்து ரூபாய் சம்பாதிக்க இவ்வளவு நேரமா? போய்ச் சுள்ளி பொறுக்கி வந்து, அடுப்பை பத்த வை! அரிசியைக் கழுவி உலையில் போடு! அப்படியே அந்தக் குரங்கையும் கொஞ்சம் குளிப்பாட்டி விடு நாறுது!

“கோவிச்சுக்காத கண்ணு! என்று குழைந்தபடி சுள்ளி பொறுக்கப் புறப்பட்டான், குரங்காட்டி.”அட! இவனை என்னமா ஆட்டிப் படைக்கிறாள் இவள்!!???” என்று நினைத்தது குரங்கு..




வெற்றியாளர்கள் என்றைக்காவது நடு ரோட்டில் கட்டிப் புரண்டு சண்டை போடு வதை நீங்கள் பார்த்திருக் கிறீர்களா?

பார்த்திருக்க முடியாது.

ஏனென்றால் வெற்றி யாளர்கள் சண்டை போடு வதை ஒரு போதும் விரும்பு வதில்லை. அதற்கு அவர் களுக்கு நேரமும் இருப்ப தில்லை.

வெற்றியாளர்கள் சண் டைக்குள்ளும், சச்சரவுக் குள்ளும் சிக்கிக் கொள்ள விரும்புவதில்லை.

சண்டைகளும், வாக்கு வாதங்களும் ஏன் ஏற்படு கின்றன என்று தெரியுமா?

கருத்துக்கள் ஒத்துப்போகா தமையால்தான்!

அவர்கள் ஒரு சிறிய மீட்டிங்கிற்கு செல்வது என் றால்கூட, அங்கு என்ன பேசவேண்டும் என்பதை முன் கூட்டியே திட்டமிட்டுக் கொள்கிறார்கள். இதனால் தேவையற்ற வாக்கு வாதங் களில் அவர்கள் ஈடுபடுவதி ல்லை. தேவையற்ற வாக் குறுதிகளையும் அவர்கள் கொடுப்பதில்லை.

சண்டைகளும், வாக்கு வாதங்களும் நேரத்தை வீணடிக்கக்கூடியவை. எதி ரிகளை உருவாக்கக் கூடி யவை நன்மதிப்பைக் குறைக்கக்கூடியவை. மன அழுத்தத்தை உண்டு பண் ணக்கூடியவை என்பதை அவர்கள் புரிந்து வைத்திரு க்கிறார்கள்.

வெற்றியாளர்களின் பலம என்னவென்றால், அவர் கள் சின்ன விடயங்களை க்கூட நுணுக்கமாகத் திட்ட மிடுவதுதான்!

● வியாபார நிமித்த மாக ஒருவரை சந்திக்க வேண்டுமென்றால் அவரை மதிய உணவிற்கு வெளி யில் அழைத்துச் செல்கி றார்கள். அப்படி அழை த்துச் செல்வதால், அவ ரோடு பேசுவதற்கு நிறைய நேரம் இவர்களுக்குக் கிடைக்கிறது.

● மீட்டிங்கிற்கு முனபு அந்த சந்திப்பை ஒரு முறைக்கு இருமுறை உறுதிப்படுத்தி, அந்த மீட்டிங்கின் முக்கியத துவத்தை அவர் உணரச் செய்கிறார்கள்.

● மீட்டிங்கிற்கு உரிய நேரத்திற்கு முன்னரே சென்று அவருக்காகக் காத்திருக்கிறார்கள்.

● உணவகத்தில், இவர்கள் சுவருக்கு அரு கில் அமர்ந்து கொண்டு வெளிப்புறம் பார்த்தவாறு, அவர்களது கவனம் முழு வதும் தம்மீதும், சுவர் மீதும் மட்டுமே இருக் குமாறும் பார்த்துக் கொள் கிறார்கள்.

● மீட்டிங்கின்போது அவருக்கும், தமக்கும் தெரிந்த பொதுவான நபர் கள் பற்றி எடுத்துச் சொல்லி, அவரிடையே நெருக்க த்தை உண்டாக்கிக் கொள கிறார்கள்.

● தாம் குறைவாக சாப்பிட்டுவிட்டு, மீதி நேர த்தில் நிறைய பேசுகி றார்கள்.

● வியாபாரத்தை பற்றி அதிகம் பேசாமல், நட்பை வளர்ப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

● இடையிடையே அவ ரிடம் காணும் நல்ல விட யங்களையும் பாராட்டத் தவறுவதில்லை.

● மீட்டிங் முடிந்து அலுவலகம் சென்றவு டன், அவருக்கு மின்ன ஞ்சலில் நன்றிக் கடிதம் அனுப்பி, நட்பை தொடர் ந்து தக்க வைத்துக கொள கிறார்கள்.

● அதற்குப் பிறகு சில நாட்கள் கழித்து வர்த் தகம் பேசத் தொடங்குகி றார்கள்.

இப்படி வெற்றியாளர்கள் சிறிய விடயத்தைக்கூட நுணு க்கமாகச் செய்வதால், அவர் களுக்கு வெற்றி கிட்டுகிறது. ஆனால் நாமோ பெரிய விட யத்தைக்கூட மேலோட்ட மாகச் செய்துவிட்டு வரட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்று மெத்தனமாய் இருந்து விடு கிறோம்.

காய்கறி வியாபாரிகள் பலரும் வாகனங்களை எடு த்துக் கொண்டு, ஊர் ஊராகச் சென்று உருளைக்கிழங்கை கொள்முதல் செய்து, சந் தைக்கு கொண்டு வந்து தரம் பிரித்து விற்பது வழக்கம்.


எல்லா வியாபாரிகளும் கொள்முதல் செய்ய நாள் தோறும் ஒரே நேரத்தில் வெவ்வேறு வாகனங்களில் கிளம்பினாலும்கூட, ஒரே யொரு வியாபாரி மட்டும் சந்தைக்கு வந்து முதலில் விற்பனை செய்து விடுவார். இவரால் மட்டும் இது எப்படி முடிந்தது?

அதற்கு இவர் பின்பற்றிய ஒரு நுணுக்கம்தான் காரணம். வியாபாரிகள் எல்லோரும் உருளைக்கிழங்கை கொள்முதல் செய்துவிட்டு, சந்தைக்கு வந்து அளவு வாரியாக தரம் பிரிப்பர். இப்படி தரம் பிரிக்க ஒரு மணி நேரமாவது ஆகும்.

இதற்கு மாறாக, இவர் மட்டும் பள்ளம் மேடான பாதையில் வாகனத்தை செலு த்தி வந்து சந்தையில் நிறுத் துவார். அந்தப் பாதையில் பயணிக்கும்போது வண்டி குலுங்கிக் கொண்டே வரு வதால், சிறிய உருளைக் கிழங்குகள் அடிப்பகுதிக்கும், பெரிய உருளைக்கிழங் குகள் மேற்பகுதிக்கும், நடு த்தர அளவுள்ள உருளைக் கிழங்குகள் நடுவிலும் நின் றுவிடும். எனவே சந்தைக்கு வந்ததும் அப்படியே அளவு வாரியாக எடுத்து, முதல் ஆளாக விற்று இலாபம் ஈட்டி விடுவார்.

இப்படி நுட்பமான திட்ட மிடல்தான் வெற்றியாளர் களை வித்தியாசப்படுத்தி காண்பிக்கிறது.

“ நுட்பமான திட்டமிடல்தான் வெற்றி யாளர்களை வித்தியாசப்படுத்தி காண்பிக்கிறது. ”



## மழை பெய்வதை யார் யார் எப்படிச் சொல்வார்கள்...

**இரும்பு வியாபாரி:-** கனமா பெய்யுது.

**கரும்பு வியாபாரி:** சக்கைப்போடு போடுது.

**சலவைக்காரர்:** வெளுத்துக் கட்டுதுங்க.

**நேர்ஸ்:** நோர்மலாத்தான் பெய்யுது.

**பஞ்சு வியாபாரி:** லேசா பெய்யுது.

**பொலிஸ்காரர்:** மாமூலா பெய்யுது.

**வேலைக்காரி:** பிசுபிசுன்னு பெய்யுது.

**ஜூஸ் கடைக்காரன்:** புழிஞ்சு எடுக்குது.

**ரீக் கடைக்காரர்:** ஆத்து ஆத்துன்னு ஆத்துது.

**மதுபான கடைக்காரர்:** செம ஊத்து ஊத்துது.

**கோவில் பூசாரி:** திவ்யமா பெய்யுது.

**செருப்பு கடைக்காரர்:** செம்ம அடி அடிக்குது.

**மசாஜ் சென்ரர்காரர்:** சும்மா புடிபுடின்னு புடிக்குது.

**பாண்ட் வாத்தியக்காரர்:** கொட்டோ கொட்டுன்னு கொட்டுது...



# நட்சத்திரங்களின் ஐ.பி.எல். அணி இப்படித்தான் அமைந்திருக்கும்




முன்னெல்லாம் இந்திய அணியின் பயிற்சியாளர் தவிர்த்து, வேறு அணிகளின் பயிற்சியாளர்கள் யாரென நமக்குத் தெரியாது. காரணம், அதிகம் அறியப்படாத வீரர்களே பெரும்பாலும் பயிற்சியாளர்களாக உருவெடுத்தனர். உதாரணமாக டன்கன் பிளட்சர் போன்றோரைச் சொல்லலாம். ஆனால் இப்போதெல்லாம் முன்னணி வீரர்கள்அனைவருமே கோச்சிங் செய்யத் தொடங்கி விட்டனர். ஆண்டி பிளவர், கிறிஸ்டன் எனத் தொடங்கி ஜெயவர்தனே வரைஅந்தப்பட்டியல் நீண்டு கொண்டே இருக்கிறது. சர்வதேச அரங்கே இப்படியென்றால்ஐ.பி.எல்நிலைமையை சொல்லவே தேவையில்லை. முன்னாள் வீரர்கள், உச்ச நட்சத்திரங்கள் எல்லாம் பயிற்சியாளர் பொறுப்பில் அமர்ந்திருக்கின்றனர். சச்சின், டிராவிட், பிளமிங் என பயிற்சியாளர்களாகி இருக்கும் இந்த பட்டாளத்தை வைத்தே ஒரு தொடர் ஆடலாம் போல.

இப்போதுள்ள அணிகளில் பெங்களூர் அணி பலமா இல்லை. புனே பலமா? என்று ரசிகர்கள் தங்களது அணிகளை வைத்து போட்டியிட்டுக்கொண்டிருக்கின்றனர். சரி இந்த கோச் குரூப்பையெல்லாம் சேர்த்து ஒரு டீம் போட்டா எப்படி இருக்கும்? எல்லா பயிற்சியாளர்களையும் அலசி, அவர்களது தரம், திறமை ஆகியவற்றைக் கொண்டு ஒரு அணியை உருவாக்கினோம். பார்த்தால் எந்த ஐ.பி.எல் அணியை விடவும் இரண்டு மடங்கு மிகச் சிறந்த அணியாக இருக் கிறது அது. ஒரு சிலருக்கு வயது பிரச்சினை இருந்தாலும், நம் கற்பனை அணிக்கு, அப்படி எந்த வரம்பும் எடு த்துக் கொள்ளப்படவில்லை. அதனால் ஐ.பி.எல் அணிக ளுக்கு இருக்கும் 4 வெளி நாடவர்கள் மட்டுமே என்ற விதியும் உடைக்கப்படுகிறது.

சச்சின் டெண்டுல்கர்

இவரை ஏன்எடுத்தோம்.. எதற்காக எடுத்தோம். பூஜை அறையில் சாமி படத்தை வைக்க காரணம் சொல்ல வேண்டுமா என்ன? ஒரு நாள் டெஸ்டுகளில் மட்டுமல்ல, இருபது-20 இலும் தான் ஒரு ஜாம்பவான் என்பதை சச்சின் நிரூபித்தார். மும்பை இந்தியன்ஸ் அணிக்காக 78 போட்டிகளில் ஆடிய சச்சின், தற்போது அவ்வணியின் ஆலோசகராக உள்ளார். 3வது ஐ.பி.எல் தொடரின் தொடர் நாயகன்தான் நம் அணியின் முதல் வீரர்.

ரிக்கி பொன்டிங்

ஐ.பி.எல் மற்றும் இருபது-20 போட்டிகளில் இவர் பெரிதாக சாதிக்கவில்லை என்றாலும், ஒருநாள் போட்டிகளில் இவரது அதிரடி ஆட்டம் உலகத்தரம் வாய்ந்ததே. இந்தியாவுக்கு எதி ரான 2003 உலகக்கோப்பை இறுதி யாட்டத்தில், இவர் ஆடிய ஆட்டத்தை மறந்து விட முடியுமா என்ன? அதுமட்டுமல்லாமல் உலகின் தலைசிறந்தகப்டனான இவரே, இந்த ஜாம்பவான்களை வழி நடத்தவும் சரியான ஆள். மும்பை இந்திய ன்ஸ் அணியின் தற்போதைய தலைமைப் பயிற்சியாளரே இவ்வணியின் கப்டனாக சிறந்த தெரிவு.

வீரேந்திர சேவாக்

டெஸ்ட் போட்டிகளை இந்திய ரசிகர்கள் பார்க்க ஆர்வம் காட்டியதற்கு மிக முக்கிய காரணம் சேவாக்காகத் தான் இருக்க முடியும். டெஸ்ட் மேட்சையே இருபது 20 மாதிரி ஆடுற இந்த மனு ஷன எப்படி விட முடியும்? டில்லி மற்றும் பஞ்சாப்அணிகளுக்காக விளையாடியுள்ள சேவாக், ஐ.பி.எல் தொடரில் இரண்டு சதங்கள் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு பஞ்சாப் அணிக்காக ஆடிவந்தவர், தற்போது அவ்வணியின் ஆலோசகராக செயற்பட்டு வருகிறார். தனது டிரேட் மார்க் அதிரடி யின் காரணமாக பிளமிங்கை முந்தி அணியில் இடம் பிடிக்கிறார் வீரு!

ஜாக் கலிஸ்

உலகின் தலைசிறந்த ஓல்ரவுண்டர்களில் ஒருவரான கலிஸ், ஐ.பி.எல் தொடரிலும் தன்து பலத்தை நிரூபித்தார். பெங்களூர் அணிக்காக பெரிய அளவில் சோபிக் காவிடிலும், நைட்ரைடர்ஸ் இரு கோப்பை வாங்க உறுதுணையாய் இருந்தார். தற்போது அவ்வணியின் தலைமைப் பயிற்சியாளராகவும் பொறுப்பேற் றுள்ளார் கலிஸ்.

ராகுல் டிராவிட்

இருபது -20 அணியில் டிராவிட்டா? ஆச்சரியம் வேண்டாம். நீங்கள் ஆச்சரியப்பட்டீர்களேயானால், நியூசி அணிக்கெதிராக வெறும் 22 பந்துகளில் அரை சதம் அடித்த சூறாவளி சுவரை நீங்கள் அறியவில்லை என்றே அர்த்தம். ராஜஸ்தான் அணியில் இளம் வீரர்களை வளர்த்து விட்டு, இப்போது அதே வேலையை டில்லி அணிக்காக செய்துகொண்டிருக்கிறார். இவ்வணிக்கு விக்கெட் கீப்பிங் பணியும் இவருக்கே.

பிராட் ஹாட்ஜ்

குஜராத் லயன்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் இல்லாவிட்டால் இவ்வணி முழுமை அடையாது. இருபது-20 போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் வரிசையில் இவருக்கு முன் இருப்பவர் கெயில் மட்டுமே. மிடில் ஆர்டரில் வந்து, சிங்கிள் மேனாக மேட்சை மாற்றும் வல்லமை படைத்த ஹாட்ஜ் என்றுமே இருபது-20 ஸ்பெஷலிஸ்ட் தான்.

டேனியல் வெட்டோரி

உலகின் தலைசிறந்த ஸ்பின்னர்களுள் ஒருவரான வெட்டோரி, பெங்களூர் அணியின் கோப்பைக் கனவை நனவாக்கப் போராடிக்கொண்டிருக்கிறார்.

பட்டிங்கிலும் கை கொடுக்கக் கூடிய வெட்டோரி, குஜராத் அணியின் பந்துவீச் சுப் பயிற்சியாளர் ஹீத் ஸ்டிரீக்கை விடவும் நல்ல ஒப்ஷனாக தெரிகிறார்.

வசிம் அக்ரம்

ஒருநாள் போட்டிகளில் எவராலும் தொட முடியாத 502 விக்கெட்டுகள் என்ற சாதனையின் சொந்தக்காரர். நீண்ட காலமாக நைட் ரைடர்சின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக செயற்பட்டு வரும் இவர், விளையாடி பல ஆண்டுகள் ஆனாலும், இன்னும் தனது டிரேட் மார்க் ரிவர்ஸ் ஸ்விங்கால் துடுப்பாட்டக்காரர்களை அச்சு றுத்தக் கூடும். ஷேன் பான்ட்

ஐ.பி.எல் தொடரில் பெரிய அளவில் சாதிக்காவிட்டலும், இன்று மும்பை அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக சிறப்பாகவே செயற்பட்டு வருகிறார். 150 கி.மீ வேகத்தில் பட்ஸ்மேன்களை அச்சுறுத்தும் இவர், இந்திய ஆடுகளங்களிலும் பவுன்சர் களை அள்ளி வீசக்கூடியவர்.

முத்தையா முரளிதரன்




சென்னை, பெங்களூர் அணிகளுக்காக விளை யாடியுள்ள இந்த 1000 விக்கெட் ஜாம்பவான், தற்போது இருப்பது சன்ரைசர்சின் பவுலிங் கோச்சாக. வேகப்பந்து வீச் சாளர்கள் நிறைந்த சன்ரைசர்ஸ் அணியை இந்த சுழற்பந்து வீச்சா ளர் எப்படி பயிற்றுவிப்பார்? பந்து எப்படி வீசப்படுகிறது என்பது முக்கியமல்ல. எங்கு வீசப்படுகிறது என்பதே முக்கியம். அதை இவரை விட இன்னொருவர் நன்கு அறிந்திருக்க முடியுமா என்ன?

ஆலன் டொனால்டு

ரோயல் சேலஞ்சர்சின் பந்து வீச்சுப் பயிற்சி யாளரான டொனால்டின் திறமை, உலகம் அறிந்ததே. தென்னாபிரிக்க அணிக்காக கோப்பை வெல்ல முடியாத இவர், இன்னும் அதே நிலையை தான் அனுபவித்துக் கொண்டுள்ளார். இவ ரது ஸ்விங்குகளுக்குதுடுப்பாட்டக்காரர்கள் இன்னும் பதில் சொல்லக் கஷ்டப்படுவார்கள்.

இவர்கள் மட்டுமல்ல சைமன் கேடிச், ஜான்டி ரோட்ஸ், பிளமிங், ஹீத் ஸ்டிரீக், லக்ஷ்மண் போன்றோரும் தலை சிறந்த அவ்வணியில் இடம் பிடிக்கத் தகுதியான தலை சிறந்த வீரர்களே ஆவர். அதிலும் குறிப்பாக மற்ற அணி களை விட மும்பை அணியின் கோச் சிங் டீம்தான் உச்சகட்டம். சச்சின், பொன்டிங், ராபின்சிங், ரோட்ஸ் என உச்ச நட்சத்திரங்கள் அணி வகுக்கின்றன.




இவர்கள் பயிற்சியாளர்களாக பொறுப்பேற்பதன் மூலம் அணியின் ஒவ்வொரு வீரருக்கும் அதிக பாடம் கற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

அவர்களின் அனுபவம் நிச்சயம் அவர்களுக்குக் கைகொடுக்கும். இவர்கள் மட்டுமல்லா மல், முன்னணி வீரர்கள் அனை வரும்ஏதோ ஒரு வகையில் இளம் வீரர்களுக்கு மிகப் பெரிய உதவியாக இருப்பார்கள்.

பின்னாட்களில் வெறுமனே கமென் டரி பாக்சில் அமர்ந்துகொண்டு பேசாமல், வீரர்களின் திறமைகளை மெருகேற்றும் துரோணர்களாக உருவாக வேண்டும் என்பதே நம் விருப்பம்.








# காலத்தால் அழியாத கானங்கள் ...




**படம்:**
ஆண்டவன் கட்டளை
**இசை:**
விஸ்வநாதன் - ராமமூர்த்தி
**பாடியவர்:** டி.எம். சௌந்தரராஜன் , பி.சுசீலா
**வரிகள்:**
கண்ணதாசன்
**பாடல்:**
அமைதியான நதியினிலே ஓடும்

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்
அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்
காற்றினிலும் மழையினிலும் கலங்க வைக்கும் இடையினிலும்
காற்றினிலும் மழையினிலும் கலங்க வைக்கும் இடையினிலும்
கரையினிலே ஒதுங்கி நின்றால் வாழும் ஹோய் ஹோய்
அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

தென்னை இளங்கீற்றினிலே ஏ... ஏ..
தென்னை இளங்கீற்றினிலே தாலாட்டும் தென்றலது
தென்னை இளங்கீற்றினிலே தாலாட்டும் தென்றலது
தென்னை தனை சாய்த்து விடும் புயலாக வரும்பொழுது
தென்னை தனை சாய்த்து விடும் புயலாக வரும்பொழுது

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

ஆற்றங்கரை மேட்டினிலே ஆடி நிற்கும் நாணலது
ஆற்றங்கரை மேட்டினிலே ஆடி நிற்கும் நாணலது
காற்றடித்தால் சாய்வதில்லை கனிந்த மனம் வீழ்வதில்லை
காற்றடித்தால் சாய்வதில்லை கனிந்த மனம் வீழ்வதில்லை

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம் (ஓ..)
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்
அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

நாணலிலே காலெடுத்து நடந்து வந்த பெண்மை இது
நாணலிலே காலெடுத்து நடந்து வந்த பெண்மை இது
நாணம் எனும் தென்றலிலே தொட்டில் கட்டும் மென்மையிது
நாணம் எனும் தென்றலிலே தொட்டில் கட்டும் மென்மையிது

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

அந்தியில் மயங்கி விழும் காலையில் தெளிந்து விடும்
அந்தியில் மயங்கி விழும் காலையில் தெளிந்து விடும்
அன்பு மொழி கேட்டுவிட்டால் துன்பநிலை மாறிவிடும்
அன்பு மொழி கேட்டுவிட்டால் துன்பநிலை மாறிவிடும்

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்
காற்றினிலும் மழையினிலும் கலங்க வைக்கும் இடையினிலும்
கரையினிலே ஒதுங்கி நின்றால் வாழும் ஓ..ஓ..

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம் (ஓ..)
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்
அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்...

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
சதா, விஜி, கிருபா, தபா, காசியப்பன், ரஜனி, அக்ராஜனா, தீபா, கலா, குகன், ஆர். ராஜேஸ்வரி, சந்திர மோகன், பரதம்- கொக்குவில்

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

## விசித்திர நோயை கட்டுடல் மூலம் விரட்டியடித்த பெண்

பிரித்தானியாவைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தனக்கு ஏற்பட்டிருந்த போபியாவை உடற்பயிற்சியின் மூலம் விரட்டியடித்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் Cheshire, Northwich பகுதியை சேர்ந்தவர் லாரென் லிவின். சிறுவயது முதலேயே உணவு பதார்த்தங்களைப் பார்த்தால் பயப்படும் போபியா இவருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இறைச்சி, பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை சாப்பிட்டால் ஒவ்வாமை ஏற்பட்டது.

இந்த போபியாவால் நீரைக் கூட அருந்த முடியாமல் அவர் தவித்து வந்தார். தனது உணவாக பிரட், நொறுக்குத் தீனி போன்றவற்றையே லாரென் எடுத்து வந்தார். இந் நிலையில் உடலில் போதிய சத்து இல்லாததால் கல்லூரி காலங்களில் அவருக்கு தீராத தலைவலி ஏற்பட்டது.

மேலும் ஒரு நாளைக்கு 12 மணி நேரங்கள் தூங்கி வழிந்துள்ளார். இந்நிலையில் உடற்பயிற்சி மீது ஏற்பட்ட திடீர்



ஆர்வம் அவரது வாழ்க்கையையே திசை மாற்றியது. உடற்பயிற்சியாளரான அவரது ஆண் நண்பர் அலெஸ் மோசஸ் உடற்பயிற்சி மேற்கொள்வதற்கு லாரெனுக்கு உற்சாகம் அளித்து வந்தார்.

தீவிர உடற்பயிற்சி மூலம் உணவு வகைகளைப் பார்த்துப் பயப்படும் அவரது போபியா படிப்படியாக குறையத் தொடங்கியுள்ளது. தற்போது அவர் இறைச்சி, காய்கறிகள், மீன் வகைகள் போன்றவற்றை எளிதாக உட்கொள்கிறார். எனினும் நீரைஅருந்துவதற்கு அவர் தொடர்ந்து கஷ்டப்பட்டு வருவதால் பழச்சாறுகளை மட்டும் அருந்தி வருகிறார்.

## பூசணி விதையில் இவ்வளவு நன்மைகளா?

பூசணிக்காயில் உள்ள சத்துக்களைப் போலவே பூசணி விதையிலும் ஏராளமான சத்துக்கள் அடங்கியுள்ளன.

நீரிழிவு நோயாளிகளும், உடல் பருத்த ஊளைச் சதை நோயாளிகளும் பூசணிக்காயைச் சமைத்து உண்ணலாம்.

உடல் பருக்காது, உடலுக்கு மிகுந்த குளிர்ச்சியையும் தருகிறது.

சிறுநீர் நன்கு பிரிய உறுப்புகளைத் தூண்டுகிறது. திடீர் திடீர் என்று ஏற்படும் வலிப்பு நோய்களையும் குண மாக்கிவிடுகிறது.

**பூசணி விதை**

இதன் விதைகளை காயவைத்து, பொடியாகச் செய்து வைத்துக் கொள்ளவும், இந்தப் பொடியை ஒரு தேக்கரண்டி அளவு பாலில் கலந்து சாப்பிட்டால் உடல் வலிமை பெரும்.

இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் தன்மையும், இதயத்துக்கு வலுச்சேர்க்கக் கூடியதுமான பூசணி விதையில் அதிக அளவு மக்னீசியம் சத்து உள்ளது. பூசணியில் உள்ள துத்த நாகச்சத்து, உடலின் எதிர்ப்புச் சக்தி மண்டலத்தைப் பலப்படுத்தும். பூசணி விதைகளும் இதிலிருந்து தயாரிக்கப்படும் எண் ணெயும் ஆண்களுக்கு ஏற்படும்




விரை வீக்கம் போன்ற பாதிப்புகளைச் சரிசெய்யப் பயன் படுத்தப்படுகின்றன. பெண்கள், பூசணி விதையை நெய்யில் வறுத்து சாப்பிட்டு வந்தால், வெள்ளைப்படுதல் குறையும்.

ஆண்கள் பூசணி விதையைப் பொடி செய்து பாலில் கலந்து குடித்தால், உடல் உஷ்ணம் குறைவதுடன் விந்தின் கெட்டித்தன்மை அதிகரிக்கும். பூசணி விதையை நசுக்கி கஷாயமாக்கிப் பருகினால், வயிற்றிலுள்ள பூச்சிகள் நீங்கும்.

## அர்த்தம்

நான் துவண்டுவிழும்போதெல்லாம்
நம்பிக்கை வார்த்தை தந்து
துளிர் விடச் செய்தாய் தோல்வி கண்டு அழுவதற்கு
மடி தந்தாய்- மறுகணமே மலையளவு நம்பிக்கைத்
துளி தந்தாய்
வெற்றிவாகை
சூடி வந்த போது
வீரனாய்த்
திலகமிட்டாய்
வேகம்
கொண்டெழுந்த
போது
அமைதியை
நிலைக்க
வைத்தாய்
மனிதனாய்
நான் வாழ-
காதலியே
காதலெனும்
வழிதந்து
உலகப்புள்ளியதில்
என்னையும்
இணைய
வைத்த தாய்
இதயங்கள்
இணைந்த பின்பு
பிரிவென்பது
வெறும் வார்த்தையே ஒரு நொடியில் கோடி தரம்
உன்நினைவு எனக்கும் என் நினைவு உனக்கும் வரும்
எனில் அது தான் உன்மைக்காதல்





## சங்கதி

மேகங்களை முட்டும் முகில்கள்
தாகங்களை மூட்டும்
பாலைவனங்களை கடந்துதான் செல்கிறது- ஆனால்
கருணைதான் இல்லை முகில்களுக்கு
அம்மண மேனியுடன்
பச்சிளம் பிஞ்சுகள்
உணவின்றித் தவித்திட
பட்டாசு வெடிகளோ
தாராளம்
பகட்டான உலகினில்
சந்திகள் எங்கினும்
எம்மிளம் சந்ததி
சங்கதி பேசுது
சரித்திரம் காண்பது
எப்போது?
வஞ்சக நெஞ்சங்கள்
வங்கியில் பணம்
சேர்த்து
கங்கையில் மூழ்குது
காசிக்குச் செல்லுது
எம்மினப் பெண்களின் கண்களின் கண்ணீர்
கரைஞ்சு போகுது கடல்ல சேருது
தொலைக்காட்சித் தொடரால
வெளிநாட்டுக் காசில வேண்டின வாகனம்
வீதி விபத்தில முடிஞ்சு போகுது
போன உசிருக்குப் புறத்தால
பக்கம் பக்கமா மரண அறித்தல்
பறந்து போகுது கரைஞ்சு போகுது
குஞ்சைக் காக்கும் கோழிகள் போல்-நாம்
கட்டிக் காத்த கலாசாரம் கவிண்டு கிடக்குது
புரண்டெழும்புது என்ன நடக்குது ஏது நடக்குது
சொல்லத் தெரியல்ல சோகம் முளைக்குது
நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்குப் போகுது
புல்லு முளைக்குது நெல்லு மடியுது
பல்லுப் போகுது சொல்லும் போகுது
பார்க்கும் இடமெல்லாம்
பகட்டாத் தெரியுது.



www.yannal. wordpress.com இல் இருந்து...

# வெற்றிவேல்

## திரைவிமர்சனம்





தாரை தப்பட்டை தன் குரு நாதருக்காக கொடுத்தார் சசிகுமார்.

ஆனால், சசிகுமார் ரூட் இது இல்லையே, காதலுக்கு உதவி செய்ய வேண்டும், கஷ்டப்படுவோருக்கு உதவ வேண்டும், நாட்டிற்கு குறிப்பாக இளைஞர்களுக்கு தேவையான கருத்துக்களை பேஸ்வாய்ஸில்சொன்னால் தானே அது சசிகுமார் படம்.

அந்த சசிகுமார் எப்போது வருவார் என காத்திருந்த அனைவருக்கும் வசந்தமணி இயக்கத்தில் வெளிவந்துள்ள படம் தான் வெற்றிவேல்.

**கதைக்களம்**

சசிகுமாரும், ஆனந்த் நாக்கும் (ப்ரேமம் படத்தில் சாய் பல்லவியை திருமணம் செய்வாரே, அவரே தான்) அண்ணன், தம்பிகள்.

சசிக்கு படிப்பு வராமல் ஆசிரியரான அப்பா இளவரசிடம் திட்டு வாங்கிக்கொண்டே விவசாயத்திற்கு தேவையான உரம் வியாபாரம் பார்க்கின்றார்.

அதே சமயத்தில் தமிழ் சினிமாவின் வழக்கமான ஹீரோ என்ன செய்வார்களோ அதே போல் மியா ஜார்ஜை காதலித்து டூயட்டும் பாடி வருகிறார். இவரின் தம்பி ஆனந்த் பக்கத்து ஊர் பெண் வருஷாவை காதலிக்கின்றார்.

வருஷா அந்த ஊர் தலைவர் பிரபுவின் மகள், இருந்தாலும் தம்பி விரும்பிவிட்டான் என்ற காரணத்திற்காக வருஷாவை தன் நண்பர்கள் உதவியுடன் கடத்தும் சமயத்தில் ஆள் மாற்றி நிகிலாவை கடத்துகிறார்கள்.

இதனால் நிகிலாவின் அப்பா தன் மகள் ஓடிப்போயிட்டாள் என ஊர் சொல்வதை கேட்கமுடியாமல் இறக்க சசி வேறு வழியில்லாமல் தன் காதலியான மியா ஜார்ஜை மறந்து நிகிலாவை திருமணம் செய்து கொள்கிறார்.

இருந்தாலும் தன் தம்பி விரும்பிய பெண்ணை எப்படியாவது அவனுடன் சேர்த்து வைக்க வேண்டும் என மீண்டும் சசி கிளம்ப, பிரபு ஜாதி, கௌரவம் பார்த்து உடனே தன் தங்கை மகனுக்கு வருஷாவை திருமணம் செய்ய ஏற்பாடு செய்கிறார்.

இதுதான் சமயம் என பிரபுவின் தங்கை விஜியும் ஒரு பரம்பரை பகை காரணமாக அண்ணனை பழிவாங்க இந்த திருமணத்திற்கு சம்மதிக்க இறுதியில் வருஷா யாரை திருமணம் செய்து கொண்டார், சசி தன் தம்பியின் விருப்பத்தை நிறைவேற்றினாரா என்பதே மீதிக் கதை.

**படத்தை பற்றிய அலசல்**

இந்த சசி தான் சார் எங்களுக்கு வேண்டும் என்று கேட்கும் அளவிற்கு ஊருக்கு ஒரு எம்.ஜி.ஆராக வலம் வருகின்றார்.

இதுநாள் வரை நண்பர்களின் காதலுக்கு உதவி செய்த சசி, இதில் தன் தம்பியின் காதலுக்கு உதவி செய்கிறார்.

தன் தவறை உணர்ந்து நிகிலாவை திருமணம் செய்தாலும், அவரின் விருப்பத்தை கேட்காமலேயே அறிந்து அதன் படி நடந்து கொள்வது என குடும்பங்கள் கொண்டாடும் கதாபாத்திரம்.

மியா ஜார்ஜ் சசியுடன் பல நேரங்களில் தொலைபேசியில் பேசுகிறார். அவ்வளவு தான் பெரிதும் நடிக்கும் வாய்ப்பு இல்லை, சசியின் நிலை தெரிந்து அவர் காதலை விடும் இடத்தில் மனதில் நிற்கிறார்.

நிகிலா, வருஷா இருவருமே மிகைப்படுத்தி நடிக்காமல் அவர்கள் கதாபாத்திரத்தில் மிக யதார்த்தமாக நடித்து செல்கின்றனர். படத்தில் இவர்கள் அனைவரையும் விட எல்லோரையும் கவருவது பிரபு, விஜி தான்.

பிரபு மிகவும் சாந்தமாக இருந்தாலும் கௌரவம் காரணமாக முடிவு எடுத்து பின் தன் தவறை உணர்ந்து வருந்தும் இடத்திலும் அப்ளாஸ் அள்ளுகிறார்.

ஆனால், படம் முழுவதுமா தவறான முடிவா எடுத்து வருவது? விஜி இவரை தவிர வேறு யாரும் இதுபோல் மிரட்டலாக நடிக்க முடியாது.

தன் அண்ணனை பழி வாங்க வேண்டும் என்று கடைசி வரை தன் திமிரை விடாமல் கலக்குகிறார்.

படத்தின் ஹைலைட் நாடோடிகள் டீம் ஒரு காட்சியில் ரிட்டர்ன் ஆவது தான். அவர்கள்பெண்ணை தூக்க வரும் இடத்தில் செய்யும் கலாட்டா தியேட்டரில் அரை மணி நேரத்திற்கு சிரிப்பு சத்தம் தான்.



டி. இமான் இசையில் **உன்ன போல** பாடல் ரசிக்க வைக்கின்றது. பின்னணி இசை கொஞ்சம் சத்தம் அதிகம். கதிரின் ஒளிப்பதிவு தஞ்சையை அழகாக படம் பிடித்துள்ளது.

**க்ளாப்ஸ்**

சசிகுமார் தன் வழக்கமான நடிப்பிற்கு திரும்பியுள்ளது.

தம்பி ராமையா கொஞ்சம் ஓவர் ஆக்டிங் என்றாலும் அவர் வரும் காட்சி கலகலப்பிற்கு பஞ்சம் இல்லை. படத்தின் முதல் பாதி விறுவிறுவென செல்கின்றது.

வசந்த மணியின் வசனங்கள், அதுவும் தறபோதுள்ள கிராமப்புற குடும்ப வாழ்க்கையில் பேசப்படும் இயல்பான வசனங்களாக ஈர்க்கின்றது.

**பல்ப்ஸ்**

முதல் பாதியில் அத்தனை வேகத்தை காட்டிய வசந்தமணி இரண்டாம் பாகத்தில் சில இடங்களில் தடுமாறுகிறார்.

யூகிக்கக்கூடிய அடுத்தடுத்த காட்சிகள். படத்தில் வில்லன் கதாபாத்திரத்தை இன்னும் கொஞ்சம் பலப்படுத்தியிருக்கலாம்.

மொத்தத்தில் குடும்பங்கள் கொண்டாடும் வெற்றிவேல் இவர்.



## ரசிகர்களால் மிகவும் விரும்பத்தக்க முதல் பத்து ஹீரோயின்கள்



தென்னிந்தியா சினிமாவில் ரசிகர்களால் மிகவும் கவரப்பட்ட ஹீரோயின் யார் என வருடா வருடம் ஒரு கருத்துக்கணிப்பு நடக்கும். அந்த வகையில் தமிழகத்தின் முன்னணி ஆங்கில நாளிதழ் ஒன்று நடத்திய கருத்துக்கணிப்பு ரிசல்ட் வெளிவந்துள்ளது.

இதில் நடிகை நயன்தாராவே பலராலும் விரும்பப்படும் நாயகியாக முதல் இடத்தில் உள்ளார்.

இந்த கருத்துக்கணிப்பில் முதல் 10 இடங்களில் வந்தவர்களின் லிஸ்ட் இதோ.

நயன்தாரா, ஸ்ருதிஹாசன், எமி ஜாக்ஸன், அனுஷ்கா, தமன்னா, காஜல், சமந்தா, த்ரிஷா, கீர்த்தி சுரேஷ், சாய் பல்லவி.

# உரிமையைக் கோருவது பிரிவினைவாதமா?

இலங்கையில் இன ஒற்றுமை குறித்து அதிகம் பேசப்பட்டாலும் நல்லிணக்கம் என்பது நடைமுறைக்கு சாத்தியப்படாத ஒன்றாகவே இன்றுவரையுள்ளது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்று பாகுபாடு காட்டப்படமாட்டாது என சிங்கள அரச தலைவர்கள் மேடைகளில் உரத்து குரல் கொடுக்கின்ற போதும் அவர்களின் கொள்கைக் கோட்பாடுகள் பாகுபாட்டை முன்னிலைப்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

மேடைகளில் பேசுவது ஒன்று அமுல்படுத்தும் திட்டம் வேறொன்று. இதைக் காலாகாலமாக சிங்களத் தலைவர்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.

அவர்களுக்கு ஆதரவளிக்கும் தமிழ்த்தலைமைகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

எந்தக் கட்சி மத்தியில் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர் நலன் புறக்கணிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதில் தவறுவதில்லை.

தமிழர் நலன் புறக்கணிக்கப்படுவதில் பெரும்பான்மை இனமாகத் தம்மை அடையாளப்படுத்தும் சிங்களவர்களின் நலன் பாதுகாக்கப்படும் என்பதை நம்புகின்றனர்.

தமிழர்கள் வகைதொகையின்றி அழிக்கப்படும்போது வாய்மூடி மௌனிகளாக இருந்தவர்கள் தமிழர் உரிமையைக் கோரும்போதுமட்டும் நாட்டு நலனை முன்னிலைப்படுத்த முற்படுகின்றனர்.


வடக்கு மாகாண சபை தயாரித்த அரசியல் தீர்வுத்திட்ட வரைபை சபையில் முன்மொழிந்த காலம் தொட்டு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை பிரிவினைவாதி, பயங்கரவாதி என அடையாளப்படுத்தும் சிங்கள பௌத்த அமைப்புக்கள் தீர்வுத் திட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றன.

மொழி அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்டால் நாடு இரண்டாகி விடும் என்று அச்சத்தை வெளிப்படுத்தும் அந்த அமைப்புக்களும் சிங்கள அரசியல்வாதிகளும் மொழி, இனம், கலாசாரம் என்று பாகுபாடு காட்டி பச்சிளம் குழந்தைகள் வரை படுகொலை செய்யப்படும் போது நாடு நாசமாகப் போகிறது நம் வருங்காலச் சந்ததியினர் அழிக்கப்படுகின்றனர் என்று வாய் திறந்திலர்.

ஆயுதப் போராட்டத்தின் ஊடாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்க மறுத்து பல நாடுகளின் உதவியுடன் பயங்கரவாதிகளாகக் காட்டி தமிழர்களை அழித்தொழித்தனர்.

அழித்தொழிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் சர்வதேச பக்கச்சார்பற்ற நீதி விசாரணைப் பொறிமுறையையும் புறந்தள்ளி போர்க்குற்றவாளிகளின் பாதுகாப்புக் கூடாரமாக இலங்கையை மாற்றி வைத்திருப்போர் தமிழர் உரிமையைக் கோரும் போது மட்டும் கொக்கரிப்பது ஏற்புடையதல்ல.

மகிந்த ஆட்சிக்காலத்தில் அவரது அமைச்சரவையில் அந்தஸ்துப் பெற்றவராக இருந்து அநீதிகள் அனைத்தும் அரங்கேறும் வரை ஆதரவும் அளித்து விட்டு மைத்திரியின் வெற்றி உறுதியானதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டவர்களின் வரிசையிலுள்ள சம்பிக்க போன்றவர்கள் தமிழ்த் தலைமைகள் தவறான பாதையில் பயணிப்பதாக விமர்சிக்கின்றனர்.





மகிந்த ஆட்சியில் தவறு மட்டுமே மிஞ்சியிருந்ததை இப்போது சுட்டிக்காட்டும் சம்பிக்க போன்றவர்கள் அந்தத் தவறின் பங்காளிகள் என்பதையும் நல்லாட்சியில் பங்குகொண்ட அனைவரும் நல்லவர்கள் இல்லை என்பதையும் உணர்தல் அவசியம்.

அரசியல் நலன்களுக்காக அடிக்கடி கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் சம்பிக்க போன்றவர்கள் மைத்திரி ஆட்சியையும் மகிந்த ஆட்சி போன்று நடத்தவே முயற்சிப்பர்.

இவர்களைப் போன்றவர்கள் இனங்காணப்பட்டு களையப்பட வேண்டும். இல்லையேல் மகிந்த ஆட்சிக்காலத்தில் தமிழர்கள் பட்ட பெருந்துன்பத்தை ஒட்டு மொத்த இலங்கை மக்களும் என்றோ ஒரு நாள் அனுபவிக்க வேண்டி வரும்.

மகிந்த ஆட்சியில் அழிக்கப்பட்டவர்களுக்கு மைத்திரி ஆட்சியில் நீதி கிடைக்கும் என தமிழர்கள் நம்பியிருந்தனர். ஆனால் போர்க்குற்றவாளிகளைக் காப்பாற்றும் நடவடிக்கையில் மகிந்தவும் ஒன்றுதான் மைத்திரியும் ஒன்றுதான். இதை உறுதிப்படுத்தும் வகையில் இரண்டு முறை ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

போர்க்குற்ற விசாரணை முன்னெடுக்கப்பட்டாலும் உள்ளக விசாரணையாகவே அது அமையும் எனவும் வெளிநாட்டவர்களின் பங்களிப்பு அதில் இருக்காது. சர்வதேச தலையீட்டை இலங்கை அரசாங்கம் போர்க்குற்ற விசாரணையில் விரும்பவில்லை எனக் கூறியுள்ளார்.

இந்த விடயத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சற்று மாறுபட்ட கருத்தினை கொண்டுள்ளபோதும் அவரின் முயற்சி கைகூட வாய்ப்பில்லை.

அதற்கு நல்லாட்சி அரசுக்கும் ஆதரவளித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் கூட ஆதரவளிக்க முற்படாது.

தமிழர்கள் அழிக்கப்படுவதை தட்டிக்கேட்க முற்படாதவர்கள் தமிழர்களுக்கு நீதி மறுக்கப்படுவதை விரும்பும் அதேவேளை தமிழர் உரிமையைக் கேட்டால் எதிர்ப்பதையும் அதனூடாக தமது நலன் பாதுகாக்கப்படும் என்பதையும் அரசியல் நடவடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

அதனால்தான் சமஷ்டி என்ற பெயரில் தமிழ்த் தலைமைகள் முன்னெடுக்கும் பிரிவினைவாதப் பாதைக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என்றும் வடக்கு மாகாண சபையும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் பயணிக்கும் பாதை தவறானது. பாதையை மாற்றிக்கொண்டு ஐக்கிய இலங்கைக்குள் ஒன்றிணைந்து பயணிக்க ஆரம்பிக்க வேண்டும்.

அதைவிடுத்து சர்வதேச பிரிவினைவாதக் கொள்கையிலும் புலம்பெயர் அமைப்புக்களின் நிகழ்ச்சி நிரல்களை கையாண்டும் இலங்கைக்குள் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பிரிவினைப்பாதைக்கு தமிழர்களை தள்ளியதோடு பல்லாயிரக்கணக்கானவர்களை படுகொலை செய்தும் பாகுபாடுகளை நீக்க மறுக்கும் சிங்களவர்கள், தமிழர்கள் தமக்குரிய உரிமையைக் கோரும்போது மொழி ரீதியான, இன ரீதியான மாநிலக் கொள்கை நாட்டைப் பிரிக்கும் என்றும் பதறுகின்றனர்.

சம்பிக்க போன்ற சிங்கள அரசியல்வாதிகள் வடக்கு மாகாண சபையின் அரசியல் தீர்வுத் திட்ட வரைபுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வரும் அதேவேளை சிங்கள ராவய, பொதுபல சேனா போன்ற பௌத்த அமைப்புகள் சிங்கள பேரினவாதிகளின் நலன்களைப் பாதுகாக்கத் துடிப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

முதல்வர் விக்னேஸ்வரனை பயங்கரவாதியாக சித்திரிக்கும் இந்த அமைப்புக்கள் அவர் அரசியல் அமைப்புக்கு முரணாகச் செயற்படுகின்றார் எனக்கூறி நீதிமன்றை நாடி அவரைக் கைது செய்யுமாறும் வலியுறுத்தி வருகின்றன. முதலமைச்சர் விக்னேஸ்வரன் கைது செய்யப்பட்டாலும் வடக்கில் இருந்து இக்கோரிக் கைகளை முற்றாக ஒடுக்கிவிட முடியாது.

அதேவேளை வடக்கு மாகாண சபை உருவாக்கப்படுவதற்கு முன்பே இக்கோரிக்கை தமிழர் மத்தியில் ஆழ வேரூன்றிய விடயம் என்பதையும் உணர வேண்டும்.

வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மாகாண சபையின் ஒப்புதலுடன் மக்களின் குரலாக ஒலிக்கிறார்.

இதை ஒடுக்க சிங்களத் தலைவர்களால் முடியாது. நீதிமன்றை நாடி கைது நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் சமஷ்டிக் கோரிக்கையை தமிழர்கள் இனிக் கைவிடப்போவதில்லை.

பொது பலசேனா, சிங்கள ராவய போன்ற சிங்கள பௌத்த அமைப்புக்கள் தமிழர்களின் கோரிக்கையை முடக்க முற்படும் அதேவேளை மீண்டும் தமது வேலையைக் காட்டத் தலைப்பட்டுள்ளன.

மகிந்த ஆட்சிக்காலத்தில் சிங்கள பௌத்த அமைப்பினர் பேயாட்டம் ஆடிய காரணத்தால் ஆட்சி ஆட்டம் கண்டது.

பலம் என்று கருதிய பௌத்த அமைப்புக்களே தமது பலவீனமாக அமைந்தன என்பதை ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னர் நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் மிகுந்த மனவேதனையுடன் குறிப்பிட்டிருந்தனர்.

எனவே தமிழர் தரப்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை நன்கு ஆராய்ந்து அதன் பின்னர் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும். எந்தக் கோரிக்கையை முன்வைத்தாலும் எதிர்ப்பதே வேலை என்று இருந்தால் முரண்பாடுகள் தொடர்கதையாவதை தவிர்க்க முடியாது.


தமிழர் தரப்பால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் அனைத்தும் வெளிநாட்டவர்களின் கோரிக்கையாகவும் புலம்பெயர் அமைப்புக்களின் தூண்டுதலாகவும் பார்க்கப்படும் நிலையை மாற்ற வேண்டும்.

அதுவே நல்லாட்சியை நம்பி வாக்களித்த தமிழ் மக்களுக்கு செய்யும் பிரதி உபகாரமாகும்.

எஸ்.ஆர்.கரன்

# facebook

# ஏழை விவசாயி



அந்தக் கிராமத்தில் ஒரு ஏழை விவசாயி இருந்தான். அவனுக்கு பக்கத்து வீட்டில் ஒரு வேட்டைக் காரன் இருந்தான்.

வேட்டைக்காரனிடம் அவன் வேட்டைக்கு பயன்படுத்தும் வேட்டை நாய்கள் சில இருந்தன. வேட்டைக் காரனின் நாய்கள் அடிக்கடி வேலி தாண்டி சென்று விவசாயியின் ஆட்டுக்குட்டிகளை துரத்துவதும் கடித்து குதறுவதுமாக இருந்தன.

இதனால் கலக்கமுற்ற விவசாயி தன் அண்டைவீட்டுக்காரனான வேட்டைக்காரனை சந்தித்து அப்பா உன் நாய்களை கொஞ்சம் பார்த்துக்கொள். அவை அடிக்கடி என் பகுதிக்கு வந்து ஆடுகளை தாக்கு கின்றன, காயப்படுத்துகின்றன என்றான். வேட்டைக்காரன் அதை சட்டை செய்யவேயில்லை. செவி டன் காதில் ஊதிய சங்காக அவை எந்த பயனும் இன்றி போனது.

ஒருமுறை நாய்கள் இதே போல வேலி தாண்டி வந்து பட்டிக்குள் புகுந்து பல ஆட்டுக்குட்டிகளை கடித்துக் குதறின.

இந்த முறை இரண்டில் ஒன்று பார்த்துவிடுவது என்று மீண்டும் வேட்டைக்காரனிடம் புகார் செய்ய சென்றான் விவசாயி. வேட்டைக் காரன் இந்த முறை சற்று கோபத் துடன், "இதோ பார் ஆட்டை துரத்து றது,கடிக்கிறது இதெல்லாம் நாயோட சுபாவம். அதுக்கெல்லாம் நான் ஒன் னும் செய்யமுடியாது. உன்னால முடிஞ்சதை பார்த்துக்கோ என்றான்.

இதைத் தொடர்ந்து ஊர் பஞ்சா யத்து தலைவரை சென்று சந்தித்த விவசாயி, வேட்டைக்காரனின் நாய்களால் தான் படும் துன்பத்தை எடுத்துக்கூறி, அவன் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.


முன்பொரு முறை பஞ்சாயத்து தலைவரின் மகளை ஒரு சிறிய விபத்திலிருந்து விவசாயி காப்பாற்றி யிருப்பதால் பஞ்சாயத்து தலை வருக்கு விவசாயி மீது பெரும் மதிப்பு உண்டு.

விவசாயிக்கும் வேட்டைக்கார னுக்கும் இடையே உள்ள பிணகைகை பற்றி விசாரித்து தெரிந்துகொண்ட பஞ்சாயத்து தலைவர், என்னால் பஞ்சாயத்தை கூட்டச் செய்து அந்த வேட்டைக்காரனை தண்டித்து, அபராதம் விதித்து அவன் நாய்களை கட்டிப்போடச் செய்ய முடியும்.

ஆனால், நீ தேவையின்றி இதனால் ஒரு எதிரியை சம்பாதிக்க நேரிடும். உனக்கு அது சொந்த வீடு. அவனுக்கும் அது சொந்த வீடு. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் தினசரி பார்க்கவேண்டும். அப்படியிருக்கையில் பக்கத்துவீட் டுக்காரன் நண்பனாக இருப்பதில் உனக்கு விருப்பமா அல்லது எதிரி யாக இருப்பதில் விருப்பமா?

பஞ்சாயத்து தலைவர் சொல்வ தில் உள்ள யதார்த்தத்தை புரிந்து கொண்ட விவசாயி, அண்டை வீட்டுக்காரனை ஒரு நண்பனாக பார்ப்பதில் தான் தனக்கு விருப்பம் என்றான்.

சரி உன் ஆட்டுக்குட்டிகளும் பத்திரமாக இருப்பது போலவும் அவனும் உன் நண்பனாக இருப் பது மாதிரியும் நான் ஒரு தீர்வை சொல்கிறேன் கேட்பாயா? நீங்கள் எதைச் சொன்னாலும் கேட்கிறேன்



அடுத்து பஞ்சாயத்து தலைவர் சில விடயங்களை அவரிடம் சொன் னார்.

வீட்டுக்கு வந்த விவசாயி பஞ்சாயத்து தலைவர் தன்னிடம் சொன்ன விடயங்களை பரீட்சித்து பார்க்க முற்பட்டான்.

தனது பட்டியில் இருக்கும் ஆட்டுக்குட்டிகளிலேயே மிகவும் அழகான இரண்டு குட்டிகளை எடுத்துச் சென்று, வேட்டைக்கார னின் இரண்டு மகன்களுக்கும் தலா ஒரு குட்டி விளையாட பரிசளித் தான். குழந்தைகளுக்கு தாங்கள் விளையாட புதிய தோழர்கள் கிடைத்ததில் ஒரே குஷி. இரு வரும் அந்த குட்டிகளுடன் விளை யாடி மகிழ்ந்தார்கள்.

தன் குழந்தைகளின் புதிய தோழர்களை பாதுகாக்க, தற்போது வேட்டைக்காரன், நாய்களை சங்கலியால் கட்டிப்போட வேண்டி யிருந்தது. யாரும் சொல்லாமலே அவன் நாய்களை சங்கிலியால் பிணைத்தான்.

தனது மகன்களுக்கு விவசாயி ஆட்டுக்குட்டிகள் பரிசளித்ததை தொடர்ந்து பதிலுக்கு அவனுக்கு ஏதேனும் பரிசளிக்க விரும்பி, தான் காட்டிலிருந்து கொண்டு வந்த சில அரிய பொருட்களை பரிசளித் தான் வேட்டைக்காரன். ஆக இரு வருக்குள்ளும் நல்லுறவு வளர்ந்து நாளடைவில் நல்ல நண்பர்களாகி விட்டனர்.

மேற்கூறிய கதை அன்றாடம் பலருக்கு நடப்பது தான். பிரச்சினை தான் வேறு வேறு. நம்மிடம் நியா யம் இருக்கிறது என்பதற்காகவோ, நம்மிடம் வலிமை இருக்கிறது என்பதற்காகவோ வீணாக எதி ரிகளை சம்பாதித்துக்கொள்ளக் கூடாது.

ஆடுகள் முக்கியம் தான். ஆனால் அதைவிட மனஅமைதி முக்கியமல்லவா?

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 700

Search for people, places and things Nagendram Home


### தர்சினி





### றெனிகா




### ராதை





### பிரசாந்த்




### நிசாந்தன்




### நிவேதிதன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 30

## அநாவசியக் கட்டுப்பாடுகள் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல.

பகுதி -2

வாழ்க்கையில் விதிக்கப்படும் அநாவசியமான கட்டுப்பாடுகள் மனிதனின் உடல்,உள,சமூக நன்னிலை ஆகிய உண்மையான சுகாதார நிலையை பாதிக்கும் என ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

சுவையாக உண்பதும் வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சம் என்பதை யாரும் மறுக்க முடியாது. சுவையான உணவு வகைகளை யாரும் தியாகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. உப்பு, உறைப்பு, புளிப்பு, இனிப்பு போன்ற அனைத்து சுவைகளும் ஆபத்தானவை என எண்ணிக் கொள்கிறோம். ஐஸ்கிறீம், பாயாசம் போன்றவற்றை உண்ணும் பொழுது குற்ற உணர்வுக்கு ஆளாகின்றோம்.

உப்பு, உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. உப்பின் அளவு உடலில் குறைந்து விட்டால் அது பல தீயவிளைவுகளுக்கு வழிவகுக்கும். வெப்ப வலய நாடுகளில் வசிக்கும் மக்களுக்கு ஒப்பீட்டளவில் அதிகளவு உப்பு தேவைப்படுகிறது.

காரணம் வியர்வையின் மூலம் பெருமளவு உப்பு இழக்கப்படுதலாகும். எனவே உயர் குருதிய முக்கம் உள்ளவர்கள் கூட 6-10 கிராம் வரையிலான உப்பை தினந்தோறும் உள்ளெடுப்பது நல்லது. உப்பின் முக்கியத்துவம் அறிந்தே எம் முன்னோர் “உப்பில்லா பண்டம் குப்பையிலே” “உப்பிட்டவரை உள்ளளவும் நினை” என்பது போன்ற பல உப்பை பற்றிய விடயங்களை கூறி வைத்திருக்கிறார்கள். எனவே போதியளவு உப்பு சேர்த்து கறிசமைக்க பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் அளவுக்கு அதிகமான உப்பை உணவிலே சேர்த்துக் கொள்வதை தவிர்ப்பது நல்லது.

இதேபோன்று உணவிலே உறைப்பு, புளிப்பு சுவைகளை சேர்ப்பதனால் தீய விளைவுகள் எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. இவை உணவின் சுவையை மெருகேற்றும் என்பதுடன் சமிபாட்டிற்கும் உறுதுணையாக இருக்கும். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்ற விடயத்தை மறந்துவிடலாகாது.

பால், முட்டை போன்றவற்றை போதியளவு உணவிலே சேர்த்துக் கொள்ள முடியும். இவை இயற்கையான பாதுகாப்பான நிறை உணவுகளாகும். வெங்காயம், உள்ளி, இயற்கையான வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை நீரிழிவு, இருதயநோய் உள்ளவர்கள் கூட போதியளவு உண்ண முடியும்.

சுகதேகிகளும் நோய்க்கு ஆட்பட்வர்களும் உணவை சுவையானதாக சமைத்து உண்ணும் பொழுது அவர்களின் உடல், உள ஆரோக்கியம் மேம்படும்.

(தொடரும்)

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.
யாழ்.போதனா வைத்தியசாலை.

## புற்று நோய்

### புற்று நோய் என்றால் என்ன?

இது உடற்கலங்கள், உடலின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் தன்னிச்சிசையாக அசாதாரண முறையில் பெருக்கமடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் (கட்டிகள்) எனக் கொள்ளலாம். இது உடலின் எப் பகுதியிலும் ஏற்படலாம்.

### புற்று நோய்க்குரிய எச்சரிக்கை அறிகுறிகள் யாவை?

- நீண்ட காலம் நிலைத்திருக்கும் இருமல் குரல் வித்தியாசம்.
- குணமடையாத புண்.
- உடம்பில் கட்டு, தழும்பு அல்லது உண்ணி ஏற்படுதல் அல்லது பல காலமாக இருந்து திடீரென வளர்ச்சியடைதல்.
- மார்பகங்களில் அல்லது வேறு இடங்களில் ஏற்படும் கட்டிகள் அல்லது தடிப்புகள்.
- பெண் யோனி வழியில் இருந்து அசாதாரணமான இரத்தம் அல்லது வெள்ளப் போக்கு ஏற்படுதல் அல்லது மாதவிடாய் நின்ற பின்பும் இரத்த போக்கு ஏற்படுதல்.
- மலசலம் கழிக்கும் பழக்கத்தில் ஏற்படும் வித்தியாசம் அல்லது மலத்தோடு இரத்தம் வெளிவரல்.
- அதிக காலமாக நீடித்திருக்கும் அஜீரணம் (சமிபாட்டின்மை) அல்லது விழுங்குவதில் உள்ள கஷ்டம்.

### புற்று நோய்க்கான காரணிகள் யாவை?

புற்று நோய்க்கான சரியான காரணிகள் எவையென இன்னமும் கூற முடியாதுள்ளது. எனினும் புற்று நோயானது வாழ்க்கை முறை பரம்பரை மற்றும் சுற்றாடல் காரணிகளின் கூட்டுத் தாக்கத்தின் விளைவாகவே ஏற்படுகின்றது எனக் கருதப்படுகின்றது.

### புற்று நோயை ஏற்படுத்துவதற்கான பாதகமான காரணிகள் யாவை?

1. **புகையிலையை பாவித்தல் :-** இதனைப் புகைப்பதனாலோ, அப்புகையை அருகிலிருந்து உள்வாங்குவதனாலோ அல்லது இதனை பாக்கு, சுண்ணாம்புடன் உட்கொள்வதனாலோ ஏற்படும்.
2. **மதுபானம் அருந்துதல் :-** இதன் எரிவுத் தாக்கத்தால் வாய் களப்புற்று நோய் ஏற்பட வாய்ப்புள்ளதுடன் இதனால் ஈரல் பாதிப்படைந்து ஈற்றில் ஈரற் புற்று நோய் ஏற்படும்.
3. **மாறுபட்ட உணவுப்பழக்க வழக்கம் :-** உறைப்பான, சூடான, கொழுப்பகதிகமான மற்றும் நார்த்தன்மை குறைந்த உணவுகள் புற்றுநோயை அதிகம் ஏற்படுத்தும்.
4. **வாய்ச் சுகாதாரம் இன்மை :-** வாய் புற்று நோய் ஏற்பட வழி வகுக்கும்.
5. **இரசாயன பதார்த்தங்கள் :-** அதிக காலம் இவற்றை கையாண்டு வேலை செய்வோர்க்கு குறிப்பாக இரத்த புற்று நோய் மற்றும் சிறுநீர்ப்பை புற்று நோய் என்பன ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.
6. **ஓமோன் குளிசைகளைப் பாவித்தல் –** பெண்கள் மாதவிடாய் நின்ற பின்பு ஓமோன்களைப் பாவிப்பதால் மார்பகப் புற்று நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது.
7. சூரியனிலிருந்து வரும் Uv கதிர்கள் மற்றும் ஓசோன் படலத்தின் உடைவால் பூமியை அடையும் பாதகமான சூரியக் கதிர்கள் தோல் புற்று நோய்க்கு வழி வகுக்கும்.
8. அணுக்கதிர் தாக்கம்.
9. **பரம்பரை அலகுகளின் இயல்பு :-** புற்று நோயாளரின் நெருங்கிய உறவினராயிருத்தல் ஒரு சில புற்று நோய்கள் உதாரணமாக மார்பகபுற்று நோய், குடற் புற்று நோய் மற்றும் இரத்த புற்றுநோய் என்பன பரம்பரை ரீதியாக கடத்தப்படுகின்றன.
10. **நல்ல உடற்பயிற்சி இன்மை :-** உடற் பருமன் அதிகரிப்பதனால் குறிப்பாக மார்பகப் புற்று நோய் மற்றும் குடற் புற்று நோய் அதிகரிக்கலாம்.

### வாய்ப் புற்று நோய்

இது வயது முதிர்ந்தோரை அதிகம் பாதிக்கின்றது. புற்று நோய் முன்னிலைகளான உயர்ந்து தென்படும் அகற்ற முடியாத வெண்ணிற அல்லது செந்நிற தழும்புகளை கண்ணாடியில் பார்த்து இனங்காண முடியும். இவ்வாறு இனங்காணப்படுமிடத்து வைத்தியரை நாடி குணமாக்கும் வகையிலான பூரண சிகிச்சை பெறக் கூடியதாகவிருக்கும். அவ்வாறின்றி பிந்திய நிலையில் புற்று நோய் இனம் காணப்படுமாயின் சிகிச்சை பலனளிக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

### வாய்ப் புற்றுநோய் ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகள்?

- வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போன்றவற்றை மெல்லுதல்.
- பீடி, சிகரெட், சுருட்டு புகைத்தல்.
- ஒழுங்கற்ற வாய்ச்சுகாதாரம்.
- மதுபானம் அருந்துதல்.

### பின்வரும் சந்தர்ப்பங்களில் மீண்டும் ஏற்படும் உறுத்தலினால் வாயில் உண்டாகும் புண்.

- கூரான உடைந்த பற்கள்
- சரியான அளவில் செய்யப்படாத செயற்கை பற்கள்.
- அதிகளவான மிளகாய், மிளகாய்த் தூள் பாவித்தல்.
- பீடை கொல்லி போன்ற இரசாயன பதார்த்தங்களினை அதிகளவில் பாவித்தல்.
- சூரிய ஒளியின் uv கதிர்களின் தாக்கம் –குறிப்பாக கீழ் உதடுகளில் புற்று நோய் ஏற்படும்.
- போசாக்கு குறைபாடு.

### வாய்ப் புற்றுநோயின் அறிகுறிகள்.

- ஆறாத வாய்ப்புண்கள் .
- வாயினுள் தடித்துக் காணப்படும் வெள்ளை, சிவப்பு நிறமான தழும்புகள்.
- வாய் குழியின் கவசத்தோல் கழன்று போதல்.
- உதடுகளிலோ, வாயினுள்ளோ வளரும் தசைத் துண்டுகள்.
- வழமைக்கு மாறான இரத்தக் கசிவு.
- மெல்லுதலிலும், விழுங்குவதிலும் ஏற்படும் சிரமம் அல்லது வலி.
- தெளிவான காரணங்கள் அற்ற நிலையில் பற்களின் உறுதி தளருதல்.
- தாடையை அசைப்பதில் சிரமம்.
- வாய்க்குழி உணர்வற்று போதல்
- கழுத்துப் பகுதியல் நிணநீர் முடிச்சுக்கள் வீங்குதல்.

### நீங்களே உங்கள் வாயைப் பரிசோதிக்கலாம்.

- உங்கள் கைகளை சுத்தமாக கழுவுங்கள்.
- முகம் பார்க்கும் கண்ணாடி முன்பாக நில்லுங்கள்.
- உங்கள் முகத்தில் ஏதேனும் வீக்கங்கள், கட்டிகள், புண்கள் உள்ளதா என விரல்களின் நுனியினால் சோதித்துப் பாருங்கள். முகம்சமச்சீராக உள்ளதா எனக்கவனியுங்கள்.
- உங்கள் மேல், கீழ் உதடுகளை நன்கு இழுத்து அவற்றில் சிவப்பு, வெள்ளை புள்ளிகள், வீக்கங்கள் அல்லது கட்டிகள் உள்ளனவா என்பதை கை விரல்களின் உதவியுடனும் பரிசோதித்து பாருங்கள்.
- உங்கள் முரசுகளில் ஏதேனும் நிற மாற்றங்கள் வீக்கங்கள், கட்டிகள், புண்கள், இரத்தக் கசிவு என்பன உள்ளனவா என பார்த்தும் தொட்டும் உணருங்கள்.
- உங்கள் கடைவாயை வெளிப்பக்கத்துக்கு கையினால் நன்கு இழுத்து வாய்க் குழியின் உட்பக்கச் சுவரில் ஏதேனும் வீக்கங்கள் புண்கள் அல்லது நிறமாற்றங்கள் உள்ளனவா என பரிசோதியுங்கள்.
- நாக்கை நன்கு வெளியே நீட்டியும் பக்கப் புறங்களுக்கு இழுத்தும் அதில் மேற்கூறப்பட்ட மாற்றங்கள் ஏதாவது உள்ளனவாவென நன்கு பரிசோதியுங்கள்.
- வாயை நன்றாக திறந்து அண்ணத்தை தொண்டை முள்ளயை (Tonsil) உண்ணாக்கு ஆகியவற்றை பார்த்து மேற்கூறப்பட்ட மாற்றங்கள் உண்டாவெனப் பார்த்தும் தொட்டும் உணருங்கள்.
- நாக்கை உயர்த்தி தொண்டைக்குழியில் அடிப் பகுதியில் மேற்கூறப்பட்ட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என பரிசோதிக்கவும்.

மேற்படி பரிசோதனையை மாதத்திற்கு ஒரு தடவையேனும் செய்து ஏதேனும் சந்தேத்திற்கு இடமான மாற்றங்கள் காணப்பட்டால் வைத்தியரை நாடி ஆலோசனை பெறவும்.

தகுந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களை கைக்கொள்வதன் மூலமும், வாய்க் குழியை சுயமாக பரிசோதித்து புற்றுநோய் முன்னிலைகளை முன்கூட்டியே அறிந்து கொள்வதன் மூலமும், சரியான பற்சிகிச்சை பெறுவதன் மூலமும் வாய்ப் புற்று நோய்க்கு ஆளாவதிலிருந்து அல்லது அதன் தாக்கத்திலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.